படைப்பு

ஊற்று-4 | நதி-5 | செப்டம்பர்-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## சகலமும் துறந்து வாழ்நாளைக் கலைக்கு ஒப்புக்கொடுக்கிற கலைஞர்கள் வெவ்வேறு விதங்களில் கௌரவிக்கப்படுவது முக்கியமென்று நான் கருதுகிறேன்..

- படைப்பாளர் ரவிசுப்பிரமணியன் அவர்களுடனான நேர்காணல்



- சமிக்ஞைகளைத் தேடி..
  - யூமா வாசுகி



- அரிதிலும் அரிதான மனிதர்
  - கடையநல்லூர் பென்சி நினைவுகள்



- யாழினி
  - தங்கேஸ்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-5 | செப்டம்பர் 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **“சகலமும் துறந்து வாழ்நாளைக் கலைக்கு ஒப்புக்கொடுக்கிற கலைஞர்கள் வெவ்வேறு விதங்களில் கௌரவிக்கப்படுவது முக்கியமென்று நான் கருதுகிறேன்..”**
  - படைப்பாளர் ரவிசுப்பிரமணியன் அவர்களுடனான நேர்காணல் -பக். 05
- **சமிக்ஞைகளைத் தேடி..**
  - யூமா வாசுகி -பக். 16
- **அரிதிலும் அரிதான மனிதர்**
  - கடையநல்லூர் பென்ஸி நினைவுகள் -பக். 19
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 32
- **மரணத்தின் சுவடுகள்**
  - கவிஜி -பக். 37
- **தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து - பறை**
  - கோ.லீலா -பக். 42
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 52
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 56
- **உயிர் சுடரும் மாடம்**
  - கு.இலக்கியன் -பக். 60

## சிறுகதைகள்


- **களிறுகள் பெயர்ந்தனவென்றொரு தெரு**
  - ஹரணி -பக். 23
- **யாழினி**
  - தங்கேஸ் -பக். 47


## கவிதைகள்


- **இரா.கவியரசு** -பக். 15
- **பூங்கோதை கனகராஜன்** -பக். 30
- **ஃபஷ்றி** -பக். 30
- **நித்யா சபரி** -பக். 30
- **முகமது பாட்சா** -பக். 30
- **தோழன் பிரபா** -பக். 31
- **மா.காளிதாஸ்** -பக். 31
- **அன்பூ** -பக். 31
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 13**
  - ஜின்னா அஸ்மி -பக். 41
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 62

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' நாற்பத்தொன்றாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

கவிஞர் பிரான்சிஸ் கிருபாவின் மறைவு ஒரு பெரும் சலனத்தைத் தமிழ் இலக்கிய உலகில் ஏற்படுத்திவிட்டது. மீளஇயலாத துயரத்துடன் பதிவுகள் தென்படுகின்றன. திட்டவட்டமான வாழ்க்கை கிருபாவிற்குக் கிடைத்துவிடவில்லை. வாழ்வின் கரங்கள் அவரை நசுக்கி எடுத்தன. அக மற்றும் புறச் சூழல்களின் தாக்கங்கள் அவரை உருக்குலைய வைத்துக்கொண்டேயிருந்தன. வாழ்வின் அழுத்தங்கள் அவரிடமிருந்து கவிதைகளாய்ப் பிறந்தன.

ஒரு அதிமுக்கிய தருணத்தில் படைப்பு அவரை இருகைகளை ஏந்தித் தழுவிக்கொண்டது. கவிஞர் காப்பீட்டுத் திட்டம் என்ற செயல்முறையே அவரது நிலைகண்டு படைப்பு முன்னெடுக்கத் துவங்கிய திட்டம்தான். பிரான்சிஸ் கிருபாவை மனதில் கொண்டு துவங்கப்பட்ட அத்திட்டத்தில் அவர்தான் முதல் பயனாளியாக இருந்தார். மாதந்தோறும் தன் சகோதரனைப் படைப்பு தேடி அலைந்தது. அன்பைச் சமர்ப்பித்தது.

இதோ.. அவரது இறுதி நூல் படைப்புக் குழுமத்திடம்தான் சொத்தாய்த் தங்கியிருக்கிறது. விரைவில் வெளியாகும்.

படைப்புடன் பயணப்பட்ட மற்றொரு எழுத்தாளர் கடையநல்லூர் பென்ஸியும் நம்மைவிட்டு நீங்கியிருக்கிறார். கீழடி குறித்து பென்ஸி எழுதியதெல்லாம் தரவுக் குவியல்கள். ரோஜா முத்தையா நூலகம் குறித்த தகவல்களைத் தகவுக்காகவே தேடித்தேடி எழுதினார். வலி தந்த பாரங்களைச் சுமந்தபடியே படைப்பாளியாய் உலா வந்த பென்ஸி வலி தந்து சென்றிருக்கிறார்.

இந்த இதழில் படைப்பாளர் ரவி சுப்பிரமணியத்துடனான நேர்காணல் வெளியாகியுள்ளது. கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

**– ஆசிரியர்**

ரத்னா வெங்கட்

# “சகலமும் துறந்து வாழ்நாளைக் கலைக்கு ஒப்புக்கொடுக்கிற கலைஞர்கள் வெவ்வேறு விதங்களில் கௌரவிக்கப்படுவது முக்கியமென்று நான் கருதுகிறேன்..”

## – படைப்பாளர் ரவிசுப்பிரமணியன் அவர்களுடனான நேர்காணல்



“கொள்கைகள், கோட்பாடுகள் எதுவும் மாறலாம். அடிப்படை இலக்கிய அம்சம் என்பது ஒருபோதும் மாறப்போவதில்லை. அதை நோக்கியே நம் பனுவலாக்கம். அப்பனுவல்கள் மூலம் நம்மையும், சக மனிதனையும் உன்னத நிலைக்குக் கொண்டு செல்வதே நம் நோக்கம்” என்று சொல்லும் ரவிசுப்பிரமணியன் கவிஞர் மட்டுமல்ல, எழுத்தாளர், ஆவணப்பட, குறும்பட இயக்குநர். இசை, நாட்டியம், நடிப்பு என இயங்குபவர். சுருங்கச் சொன்னால் இயல் இசை நாடக முப்பரிமாணத்திலும் தேர்ந்தவர். உள்ளும் புறமும் ஒன்றாக அன்பு சூழ் உலகின் பிரதிநிதியாக இருப்பவர். தேர்ந்தெடுத்துக் கோர்க்கும் வார்த்தைகளின் குழைவில் ஆழ் மனதின் மென்மை உணர்த்தும் மாயக்காரர். இனி கவிஞர் ரவிசுப்பிரமணியன் அவர்களின் நேர்காணல்.

**பல துறைகளில் பரிணமிக்கும் உங்களுக்குத் தனிப்பட்ட விருப்பமாய் இந்தத் துறைதான் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானது என்றளவில் உங்களால் சொல்லக்கூடியது எது?**

கவிதைதான். ஏனெனில் அது முழுக்க முழுக்க என் சம்பந்தப்பட்டது மட்டுமே.

**மொழியின் அழகையும் மனித மனங்களின் உணர்வுகளையும் கடத்துவது கவிதை எனில் தாங்கள் நெருக்கமாக உணரக்கூடிய கவிதையை எப்படி விவரிப்பீர்கள்?**

கவிதை என்பது ஒரு உணர்வு. எங்கோ எப்போதோ அனுபவித்த - சொல்லிலடங்கா, சொல்லி மாளா, மறக்க இயலா, சொல்லின் வழியே சொல்லி வடிக்கிற உணர்வுகள். அவை கவிதையாக்கப்படுகையில் அது வாசிப்பவர் மனசில் சஹிர்தயர்கள் மனசில் ஒட்டிக்கொள்கிறது. அது அந்நாளை துக்கமாகவோ பரவசமாகவோ ஆக்கி விடுகிறது. யோசிக்க வைக்கிறது. இயங்கவிடாது செய்கிறது. இம்சிக்கவோ சந்தோஷப்படவோ வைக்கிறது. பலகாலம் அச்சொற்களும் அவை கடத்துகின்ற உணர்வுகளும் நம் கூடவே பயணிக்கிறது. அதுதான் நல்ல கவிதையின் லக்ஷணம். உங்களை எங்கோ ஓரிடத்தில் அது தாக்கி எதையாவது செய்ய வேண்டும். அல்லது செய்ய வைக்க வேண்டும். அதுதான் கவிதை.

**பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்ட வசன கவிதை மரபு இன்று புதுக்கவிதையென நவீனமெனப் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிறது. மொழி தன் வளத்தை நிலையாக இருத்திக்கொள்ள மரபு இன்றியமையாதது. அதே சமயம் புதுக்கவிதைகளும் மொழி வளத்தை மேம்படுத்துமே அன்றி குறைக்காது என்று எண்ணுகிறேன். சரிதானா?**

அதிலென்ன சந்தேகம். அந்த அந்தக் காலத்துக்கான அருஞ்சொற்கள், காலச் சூழல் மாற்றங்கள், உலகளாவிய அளவில் நடக்கும் பல்துறை சார்ந்த மாற்றங்கள், அதனால் மனித உறவுகளில் நிகழும் திரிபுகளின் உள்ளடக்கம் இப்படி நமக்கு எல்லாவற்றையும் சின்னச்சிமிழ் வடிவில் சொல்வது கவிதைதான். நிச்சயமாய் அது மொழி வளத்தை மட்டுமல்ல, இலக்கியத்தையும் மனித குலத்தையும் மேம்படுத்தும்.

மிக மிகச் சில மொழிகளுக்கே உள்ள வளமான மரபு நம் ஆதிமொழிக்கும் இருக்கிறது. அந்த மரபுதான் நம் அடையாளம். நாம் உலகின் தொல்குடி என்பதற்கான சாட்சியம். அதை எதன் பொருட்டும் நாம் இழக்க முடியாது. அவையே நம் ஆணி வேர். சல்லி வேர். அந்த வேர்கள் தரும் நீரால்தான் நாம் இன்று பூப்பதும் மணப்பதும்.

**நவீனக் கவிதைகளை மரபு சார்ந்த வல்லுனர்கள் இலக்கணமற்றது என்ற ரீதியிலேயே பார்க்கும் மனோநிலை இன்றும் உள்ளது. அந்த இடைவெளியைச் சமன் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு உள்ளதென நினைக்கிறீர்களா?**

கட்டுப்பெட்டிப் பிடிவாதங்களுக்கு எவ்வளவோ விளக்கியாயிற்று. இன்னமும் அதைப் பிதற்றுபவர்களை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. எழுதியவற்றிற்குத்தான் எப்பவும் இலக்கணமே தவிர, இலக்கணத்தை மட்டுமே வைத்துக்கொண்டு ஒருவன் படைக்க முடியாது. அது பல்வேறு சேர்மானங்கள் நிறைந்த ஒரு கிரியேட்டிவ் பிராஸஸ்.

எல்லாவற்றிலும் அவர்கள் மாற்றத்தை ஏற்காமலா இருக்கிறார்கள். உணவில் உடையில் சடங்குகளில் பழக்கவழக்கத்தில் என. மொழியிலும் அது நிகழத்தானே செய்யும். புதியவற்றை ஏற்கமாட்டேன் என்றால் அவர்கள் போனே பேசக்கூடாது. மாட்டு வண்டியில்தான் பயணம் செய்யவேண்டும்.

**அந்த இடைவெளியை சமன் செய்வதென்பது...**

அந்த வேலையையே பார்த்துக்கொண்டு இருந்தால் நாம் படைக்க முடியாது. இது பேரன்களின் காலம் என்பதை அவர்கள் உணர வேண்டும். மறுத்தபடியே இருந்தால்



காலமே அவர்களைத் தானாக நம்மை நோக்கித் தள்ளிவிடும்.

**நவீன இலக்கியத்தின் வடிவானது இடைத்தரகரின்றி வாசிப்பவர் மனங்களைச் சென்று சேர்வது அதன் பலமெனில் அதுவே அதன் இலக்கியத் தன்மைக்கு வைக்கப்படும் check என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இடைத் தரகரின்றி வாசிக்கக் கிடைப்பது நல்ல விஷயம்தான். இலக்கியத்தன்மை இல்லாததைக் காலமே புறம் தள்ளும். மின்மினிகள் நட்சத்திரங்கள் ஆகா. அதனால் எழுதுபவர்களுக்கு அது சார்ந்த பொறுப்பு இருக்க வேண்டும்.

**வெகுஜனத்திற்கானதில்லை தரமான இலக்கியம் என்பது உண்மையா? வேற்றுமை பாராட்டும் சமுதாய மனப்பான்மை இலக்கிய உலகிலும் உண்டென்பதைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?**

அப்படியெல்லாம் வரையறுப்பது ஆரோக்கியமானது அல்ல. நாம் என்ன வேற்று கிரகவாசிகளுக்காகவா எழுதுகிறோம். தரமானதை ஏற்கவைக்க அவர்களைக் கைப்பற்றி மேலேற்றவே நாம் முயல வேண்டும். அதுதான் உண்மையான படைப்பாளியின் கரிசனமாக இருக்க முடியும். இது உனக்கானது அல்ல என்ற மேட்டிமை மனப்பான்மை இலக்கியத்துக்கும் ஆகாது.

**உணர்வுகளின் குழைவும் அதைக் கடக்க இயலாது நிறுத்தக்கூடிய அதிர்வும் கவிதைக்கு அடர்த்தி கூட்டினாலும் சொற்களின் எளிமை அதன் தரத்தைக் குறைக்கிறதெனப் பொதுவாக உலவும் ஒரு கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?**

சொற்களாலானதுதான் கவிதை என்றாலும் அவை வெறும் சொற்களால் மட்டுமே நிற்பதில்லை. சொற்களின் மிகச்சரியான கூட்டுறவால், அதில் உள்ளார்ந்து மேவும் உணர்வால், உள்ளடக்கத்தால், அது உங்கள் மனசில் ஏற்படுத்தும் மெல் அதிர்வால்தான் அது நிற்கிறது. நல்ல கவிதையாக இருந்துவிட்டால் எந்தச் சொல்லும் அதற்குச் சேவகம் செய்யும். நம் திரைப்படப் பாடல்களில் எத்தனையோ அருமையான கவிதைகள் உள்ளன. எளிமையான சொற்களால், பாடல்களாய் வந்ததால் அவை காலத்தில் நிற்காமல் இல்லை.

**ஒரு துறை சார்ந்து அறிமுகமானாலும் பல துறைகளில் கால் பதிப்பது தற்போதைய காலகட்டத்தில் அவசியமாகிறது என்பது பற்றிய தங்கள் கருத்து என்ன?**

தற்போதைய கால கட்டத்தில் ஒரு துறை சார்ந்து அறிமுகமானவர் பல துறைகளில் கால் பதிப்பது அவசியமா எனக் கேட்டால் அப்படி ஒரு கட்டாயமில்லை. கவனக்குவிப்போடு ஒன்றில் ஆழ அமிழ்ந்து கவனம் செலுத்தினாலே போதும். ஆனால், தன்னியல்பில் அப்படி சில வசப்பட்டால் பல துறைகளில் நுழைந்து பரீட்சார்த்த முயற்சிகள் செய்வது தவறில்லை. அதற்காக எல்லோரும் டாவின்சி ஆகிவிட முடியாது. அதே சமயம் தொடர்புள்ள *allied* துறைகளில் பரிச்சயம் தேவை. பல துறைகளில் பாண்டித்யம் அவசியமில்லை. விதிவிலக்குகள் தவிர அது பலருக்குச் சாத்தியமும் இல்லை. முதன்மைத் துறையில் பாண்டித்யம் பெற வித்தியாசமான முயற்சிகளைச் செய்ய - சக துறைகளில் ஏற்படுத்திக்கொள்ளும் பரிச்சயம் உதவுகிறது.



என்னையே உதாரணமாக எடுத்துக்கொண்டீர்களானால் நான் ஈடுபட்டிருக்கும் அத்தனை துறைகளிலும் பாண்டித்யம் உள்ளதா எனக் கேட்டால் கவிதையில் ஓரளவு உண்டென்று சொல்வேன். ஆவணப்படத் துறையிலும் ஓரளவு அறிவேன் எனச் சொல்லலாம். இசையில் ஓரளவு பரிச்சயம் உண்டு. நாட்டியம் சில ஆண்டுகள் படித்தேன் அவ்வளவுதான். ஓவியத்தில் பார்வையாளர் என்ற அளவில் புரிந்துகொள்ள இயலும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடல். இப்படியாக பல துறைகளின் பரிச்சயம் நீங்கள் ஈடுபடும் முதன்மைத் துறைக்கு உதவும். ஓவியம் புரிந்தால் ஒளி புரியும். காமிரா கோணங்கள் *lighting* புரிபடும். ராகங்கள் தெரிந்தால் அவை தருகின்ற உணர்வுகள் கவிதைகளில் பிரதிபலிக்கும். இப்படி ஒரு *inter disciplinary fusion* கிடைக்கும். அதற்காகப் பல துறைகளில் கால் பதித்தே ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. எல்லாத் துறைகளிலும் ஒருவர் மாஸ்டர் ஆவது பெரும்பாலும் சாத்தியமில்லை.

திரு.ஆர் எம் பழனியப்பன் என்ற ஓவியர். கிராஃப் தாளில் வரைவார். அவர் வரையும் ஓவியங்கள் தனிச்சிறப்பு மிக்கவை. கணக்கு சார்ந்த துறையில் அவருக்குண்டான பரிச்சயம் அவர் ஓவியங்களின் தனித்தன்மையானது. அவருடைய ஓவியத்திற்கான தனிச்சிறப்பும் வளமும் சேர்ப்பது கணிதம் சார்ந்த அவருடைய பரிச்சயம்.

*Piet Mondrian* என்ற ஓவியர் கட்டிடக்கலை சார்ந்தவர். அவர் தன் ஓவியங்களைச் சதுரங்கள், கோடுகள், கிடைக்கோடுகள், குறுக்குக் கோடுகள், செவ்வகங்கள் இவைகளைக் கொண்டு படைத்தார். அவர் சார்ந்திருந்த கட்டடக்கலைத் துறை மிக நூதனமான *abstract paintings* வரையக் காரணமாயிருந்தது. இப்படி பிற துறைகளின் பரிச்சயம் முதன்மைத் துறை வளர்ச்சிக்கு உதவும்.

**வெளியிடும் தொகுப்புகளின் எண்ணிக்கையால் நிர்ணயிக்கப்படுவதா அங்கீகரிப்பு?**

அங்கீகாரத்துக்கு எண்ணிக்கையோ எடைக்கணக்கோ அவசியம் அல்ல. சங்ககாலக் கவிஞர்களை எடுத்துக்கொண்டால் சிலர் ஒரே பாடல் எழுதியிருந்தால் கூட இத்தனை ஆயிரம் வருடங்கள் கடந்த பின்னும் அப்பாடல் மூலம் நம்மோடு வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இதில் இன்னொரு விசேஷம் என்னவெனில் சிலருடைய பெயர்கூட நமக்குத் தெரியாது. செம்புலப் பெயல் நீரார், அணிலாடும் முன்றிலார் என்று அவர்கள் இயற்றிய பாடலின் வரிகளின் மூலமே அறியப்படுகிறார்கள். படைப்பின் வீரியத்தால் அவர்கள் இயற்பெயரே தெரியாமல் போனாலும் வாழ்கிறார்கள். புத்தகங்களின் எண்ணிக்கையோ அல்லது அளவையோ கணக்கிலிட்டு வருவதல்ல அங்கீகாரம். ஆனால் இதிலும் விதிவிலக்குகள் உண்டு. இப்போது நீங்கள் ஜெயமோகனை எடுத்துக் கொண்டால் 26,000 பக்கத்தில் படைத்த தொகுப்பு பிரம்மாண்டம். மனிதன் எவரும் தம் வாழ்நாளில் செய்ய இயலாத ஒரு விஷயத்தைச் செய்திருக்கிறார். அதை இங்கே நாம் கணக்கில் கொள்ளக்கூடாது. வெண் முரசு என்ற அந்தப் புத்தகத்தை நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வளவு பக்கங்களில் அத்தனை தரத்துடன் அவர் தந்திருப்பது பிரமிப்பு கொள்ள வைக்கிறது. ரொம்பவே முக்கியமான புத்தகம் அது. அவர் விதிவிலக்கு. தனியொரு கலைஞன் நடத்தியிருக்கும் அற்புதம் அது. படைப்பின் உள்ளடக்கம், வீரியம் மற்றும் காலத்தைத் தாண்டி நிற்கக்கூடிய அதன் மதர்ப்பு இதெல்லாம் சேர்ந்த அங்கீகாரம்தான் எப்போதும் நிரந்தரமானது.

இப்போது தி.ஜானகிராமனின் நாடகங்கள் பற்றிய ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருக்கிறேன். அதில் நாலு வேலி நிலம் என்ற ஒரு நாடகத்திற்கென அவர் 1957இல் எழுதிய ஒரு வசனம். ஒரு கதாபாத்திரம் செய்தித்தாள் வாசிக்க மற்றொரு பாத்திரம் கேள்வி கேட்கிறது. "என்ன காலங்காத்தால பேப்பர் எடுத்தா அவன் இவனைக் கொன்னான் இவன் அவனைக் கொன்னான். சுப்பிரமணி வீட்டுல கணபதி திருடினான் இதேதானா. சே. ஒரு நல்ல செய்தி கிடையாதா" எனக் கேட்க அடுத்த கதாபாத்திரம் பதில் சொல்கிறது. "சரிப்பா.. ஜனங்களுக்கே அதையெல்லாம் தெரிஞ்சுக்கறதில ஆர்வம் இல்லைங்கிறப்ப பத்திரிக்கைக்காரங்களைச் சொல்லி என்ன பிரயோஜனம்" என்ற இந்த வசனம் 1957இல் எழுதப்பட்டாலும் இன்றைய கால கட்டத்திற்கும் பொருந்துகிறது. ஒரு படைப்பு தன் காலத்தின் கண்ணாடியாக மட்டுமில்லாமல் காலம் கடந்து நிலைத்து நிற்கிறதே இதுதான் விஷயம்.

**உடனடி அங்கீகாரம் தேடுவது என்பது எழுத்தின் தரத்தையும் எழுதுபவரின் சுதந்திரத்தையும் குறைக்காதா?**

உடனடி அங்கீகாரம், அதிர்ச்சி விருப்பம், தன்னை நோக்கிக் கவனம் குவிக்க எதையும் செய்வது என்பது இன்றைய காலகட்டத்தில் எழுத வரும் பலருக்கும் ஒரு வேட்கையாக இருக்கிறது, அது எழுத்துக்கு நல்லதல்ல.

உடனடியாக சட்டென அப்படி எதுவும் நடந்துவிடாது.

நடந்தாலும் நிலைக்காது. எங்கேயாவது அபூர்வமாக எதாவது அதிர்ஷ்டத்தில் நடக்கலாம். உடனடியான அங்கீகாரத்தைத் தேடுவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் யத்தனங்களும் தந்திரங்களும் அது போன்ற லாபிக்களும் பிற விஷயங்களும் எழுத்துக்கு உவப்பானது இல்லை.

இப்போது எழுதும் ஒவ்வொரு எழுத்தாளரும் தன்னுடைய எழுத்துக்களின் மார்க்கெட்டிங் பிரதிநிதியாகச் செயல்படும் விதமாக மாறியிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். புறச்சூழல், சோஷியல் மீடியா போன்றவை அவர்களை அப்படி ஆக்கி வைத்திருக்கிறது.

உங்களுடைய எழுத்து சரியான தாதுவோடு இருந்தால் எங்கிருந்தோ எவரோ ஒருவர் என்றைக்கேனும் தேடி வருவார். சுந்தரராமசாமி

கவிதையில் சொன்னது போல அந்த யாரோ ஒருவருக்காக மட்டுமே நாம் எழுதுவதும் படைப்பதும்.

**அப்படி ஒருவர் வராமல் போனால்?**

பரவாயில்லை. வராமல் போனால் கூட பரவாயில்லை. அந்தக் கலையில் இயங்கிய காலம் ஒரு நல்ல கலைஞனுக்கு நிச்சயம் நிறைவைத் தரும். 83 நவீன கவிதைகளுக்கு மெட்டமைத்தேன். தமிழில் யாரும் செய்யவில்லை. புதிய முயற்சிதான். என்ன நடந்துவிட்டது இப்போது. அதை கேட்டவர்கள் எண்ணிக்கை கூட திருப்தி இல்லைதான். அதற்காக என்ன செய்வது.

எட்டு ஆவணப்படங்கள் பணமின்றி பாதி பாதியாக நிற்கிறது. நான் இப்பொழுது ஒரு ஷார்ட் பிலிம் எடுத்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் படம் எப்போது முடிவுறும். என்ன நடக்கும் என்று தெரியாது. இரண்டு வருடங்களாக வேலைகள் நின்றுபோயிருந்தன. அந்த இரு வருட காலம் இயல்பற்றே கடந்தது. ஆனால் இப்பொழுது நான் இயங்குகிற நேரம். அந்த இயக்கத்தில் நான் அடைகிற சந்தோஷம் அது மட்டும் எனக்கு நிரந்தரம்.

அதனுடைய நல் விளைவுகள் அதனுடைய பலாபலன்கள் இப்படி அதனால் பின்பு வருபவை எல்லாம் இரண்டாம் பட்சம். ஆனால், தன்னளவில் செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும். சின்சியராகச் செய்யவேண்டும். இன்ஸ்டன்ட் புகழுக்காக அலைவது மிகுந்த வருத்தம் தரக்கூடிய விஷயம். அப்படி ஒரு பரபரப்பும் பதைப்பும் ஒரு நல்ல கலைஞனுக்கு அவசியமில்லை.

இப்படி நீங்கள் ஆசைப்பட்டுத் திரியும் இதே மண்ணில்தான் காலமெல்லாம் கலைக்காகத் தன்னை தன் வாழ்வை ஒப்புக்கொடுத்து இயங்கி கால் காசுக்கும் சோற்றுக்கும் இருக்கும் இடத்துக்கும் அங்கீகாரத்துக்கும் அற்பப் புகழுக்கும் வழியின்றி மறைந்து உங்கள் விளைச்சலுக்கு உரமாகியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

**எழுத்தின் பெருமை அதன் தாக்கம் பிறரையும் எழுத வைப்பது அகத் தூண்டுதலை உருவாக்குவது. Inspiring writers ஒருபுறம்... inspired writers மறுபுறம்... முதலாம் வகையினருமே ஒருகால கட்டத்தில் யாருடைய எழுத்தினாலோ கவரப்பட்டு ஈர்க்கப்பட்டுக் களத்தில் குதித்தார்கள் என்பதை மறுப்பதும் மறப்பதும் சரியா? தட்டிக் கொடுத்தலும், தட்டி வளர்த்தலும் உயரிய பண்பு... அது மிகப்பெரிய இலக்கிய ஆளுமைகளிடம் குறைவற இன்னமும் இருக்கிறதா?**

எழுத்தாளனுடைய கடமை எழுதுவது மட்டும் அல்ல. தன் துறைக்குப் புதியதாக வரும் ஒருவனை இன்முகத்தோடு இரு கை நீட்டி வரவேற்பதும் கூட. அவர்களுடைய நல்ல எழுத்துக்களைக் கொண்டாடி அவனை அரவணைத்துக்கொள்வதும் அவன் கடமை. இதைக் கொஞ்சம் படித்துக் கருத்து சொல்கிறீர்களா எனக் கேட்டு எனக்கு எத்தனையோ பேர் கவிதைகள் கதைகள் கட்டுரைகள் அனுப்புகிறார்கள். பல அலுவல்கள் இருந்தாலும் வேலைகளுக்கு மத்தியில் அதை உடனடியாகப் படித்து என் மனசில் பட்ட கருத்தைச் சொல்லியும் சில சமயம் பாராட்டவும் செய்கிறேன். அதற்காக நான் ஒரு பெரிய இலக்கிய நிபுணன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஏதோ என்னிடத்தில் அவர்கள் கொண்டுள்ள மரியாதை காரணமாக என்னிடம் இருக்கும் நம்பிக்கை காரணமாகக் கேட்கிறார்கள். அவர்களுடைய படைப்புகளைப் படித்து விமர்சனத்தை நேரடியாகவும் பாராட்ட வேண்டிய நல் விஷயங்களை எழுத்திலும் கூட்டங்களில் பேசும் பொழுதுகளிலும் பதிவு செய்வதை வழக்கமாக வைத்திருக்கிறேன். அது மிக அவசியமானது.

கலையின் பக்கம் வருகிற ஜீவனே ஒரு பாவப்பட்ட ஜீவன். அந்த ஜீவன் ஏதோ ஒன்றைத் தேடித்தான் கலையை நோக்கி நகர்கிறது. அது ஏதோ ஒன்றை நம்புகிறது. எதையோ ஒன்றை நாம் செய்கிறோம் என்றும் மகிழ்வுடன் நினைக்கிறது. அது நம்புகிற புள்ளியில் இயங்க வைத்து அதில் ஒரு தரத்தைக் காண்பித்துத் தருவதும், அறியப்படாத

பிரதேசங்களை அறிமுகப்படுத்துவதும் அதற்குள் இயங்க வைப்பதும்தானே ஒரு நல்ல மூத்த எழுத்தாளனின் தார்மீகமான கடமையாக இருக்க முடியும். அதற்கு ஒரு தாய் மனம் வேண்டும். அடுத்த தலைமுறைக்கு நாம் எதைக் கைமாற்றித் தரப்போகிறோம்.. வருகிறவர்களை எல்லாம் நாம் அடித்துக்கொண்டே புறந்தள்ளிக்கொண்டே இருந்தால் – காரண காரியங்களைச் சொல்லி ஆக்கப்பூர்வ சாத்தியங்களைக் காட்டி வழிநடத்த வேண்டாமா. நம்மை யாராவது அப்படி அடித்திருந்தால் நாம் இந்த இடத்தில் வந்து நின்றிருப்போமா. நம்மில் எவருமே வானத்திலிருந்து குதிக்கவில்லை. சிலருக்கு சில விஷயங்கள் திறம்பட வரும். வந்ததைச் சரியாக வருவித்து அதைக் கொண்டாட அவர்களுக்குச் சரியான பாதையைக் காண்பிப்போம். வரவில்லை என்றால்கூட அவர்கள் ஒரு வாசகராகவாவது மிஞ்சுவார்கள். அதையும் தாண்டி எதற்கும் உதவாதவர்கள் என்று ஒதுக்கித் தள்ளுவதென்பது ஒரு இலக்கியச் செயல்பாடோ கலைச் செயல்பாடோ ஆகாது. தட்டிக்கொடுக்க வளர்த்து எடுக்க என்ற பண்பு ஒரு சிலரைத் தவிர பலரிடம் இல்லை. தன்மேல் நம்பிக்கை உள்ள எழுத்தாளர்கள் பிறரைத் தட்டிக்கொடுக்கத் தவறுவதில்லை.

என்னுடைய இரண்டாவது தொகுப்பு ‘காத்திருப்பு’. அதில் சுஜாதா இப்படி முன்னுரை எழுதியிருக்கிறார். “நான் என் சிறுகதைகளில் தோற்ற இடங்களில் நண்பர் ரவிசுப்பிரமணியன் தன் கவிதைகளில் வெற்றி பெற்றிருக்கிறார்”



என்று. எவ்வளவு பெரிய எழுத்தாளர். எவ்வளவு பெரிய சாதனைகள் புரிந்தவர். அவர் சொல்கிறார் நான் சிறுகதைகளில் தோற்ற இடங்களில் ரவிசுப்பிரமணியன் கவிதைகளில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று. அதனால் எனக்கு எந்தக் கிரீடமும் முளைத்துவிடவில்லை. அவரின் நல்லாசிரிய மனம் அது. அப்படி அவர் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? அதுவும் அப்போது துரும்புக்கும் ஆகாத என்னைச் சொல்லி அவருக்கு என்ன ஆகப்போகிறது. அது என்னுடைய இரண்டாவது தொகுப்பு மட்டுமே. அவ்வளவு பெரியதாக ஏதோ எழுதிவிட்டோமென்று நானே அப்பொழுது நினைக்கவில்லை. ஆனால் ஒருவரை வளர்த்து எடுக்க வேண்டும், தட்டிக் கொடுத்து முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்று நினைத்த அவருடைய பெருந்தன்மை மட்டுமே அதை எழுத வைத்தது. தன் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கைதான் இப்படி அவரை எழுத வைத்தது. பல எழுத்தாளர்களை அவர் தன் வாழ்வில் கொண்டாடியிருக்கிறார். என்னுடைய கவிதைகள் பற்றி மட்டுமல்ல, ஆவணப் படங்கள் பற்றியும் சொல்லி இருக்கிறார். மேடைகளில் பேசியிருக்கிறார். என்னைப் பற்றி மட்டுமல்ல, பல எழுத்தாளர்களைப் பற்றி நாவல்களைப் பற்றி சிறுகதைகளைப் பற்றி கவிதைகள் பற்றி அவர் மிக உயர்வாகப் பேசி அவர்கள் வளர்ச்சிக்கு உதவி இருக்கிறார். அது உயர்ந்த எழுத்தாளருக்கான மிகச்சிறந்த பண்பு. அதை நாம் கண்டிப்பாக வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**கவிஞர் என்ற சொல்லுக்குப் பால் பேதம் உண்டா? கவிதைக்குப் பேதம் உண்டா?**

நிச்சயம் இல்லை. தந்திர மறைமுக நிரல்களும் வக்ரங்களும் நிறைந்தவர்க்கு எல்லாப் பேதங்களும் இருக்கும். கவிதைக்கும் எந்தப் பேதமும் இல்லை. கவிதை – கவிதை அல்லாதது என்ற பேதம் தவிர.

**உங்கள் கவிதைகளில் இசை கூடவே பயணிக்கிறது. இசையை விரும்பிக் கற்றுக் கொண்டவர் நீங்கள். இசையையும் கவிதையையும் இணைத்த அப்புள்ளி எதுவோ?**

உண்மையில் எனக்கு அது தெரியவில்லை. முதல் மூன்று தொகுப்புகளில் அதற்கான கூறுகள் இருந்ததாக நான் உணரவில்லை. நான்காம் தொகுப்பில்தான் தன்னியல்பாய் அது நிகழ்ந்தது. அந்தத் தொகுப்பில் இசைத் தன்மை இருப்பதை இளையராஜா சுட்டிக்காட்டினார். அந்தத் தொகுப்பிலிருந்தே அவர் நான்கு கவிதைகளுக்கு வித்தியாசமாக மெட்டும் அமைத்துத் தந்தார்.

**ஆவணப்பட இயக்குநர் என்ற தங்களுடைய ஒரு முகம் வெளிவந்த சந்தர்ப்பம் பற்றிச் சொல்லுங்களேன்..**

விஜய் டிவியில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது நண்பர் ரபி பெர்னார்ட் தந்த ஊக்கம்தான் அது வெளிவந்த சந்தர்ப்பம். அதன் பின் தொலைக்காட்சி நிறுவனங்களுக்காக மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணப்படங்களை இயக்கினேன்.

**எந்த ஆவணப்படம் உங்கள் மனதுக்கு நெருக்கமானது? எதனால்?**

மா. அரங்கநாதன் பற்றிய ஆவணப்படம். கையில் ஒரு பைசா இல்லாமல் நண்பர்கள் அனைவரும் எந்தச் சம்பளமும் இன்றி வேலை செய்து தந்த ஒத்துழைப்பால் அது சாத்தியமானது. எவ்விதச் சிறு ஆர்பாட்டமும் இல்லாமல் அமைதியான நீரோடை போலச் செல்லும் படம் அது.

அந்தப் படத்தின் இன்னொரு விசேஷம் அதில் அவரைத் தவிர வேறு யாரது நேர்காணலும் கிடையாது. ஒரு அமைதியான தன்முனைப்பில்லாத, எங்கும் எதிலும் தன்னை முன்னிருத்திக்கொள்ளாத அவரின் அந்தத் தன்மை அந்தப் படத்திலும் வெளிப்பட்டிருக்கும்.

**ஆவணப்படம் எடுக்கையில் ஏற்பட்ட ஒரு சுவையான சம்பவம்.. இதுவரை பகிராதது..**

நிறைய இருக்கிறது. ஜெயகாந்தன் படம் பற்றி எவ்வளவோ சொல்லியாயிற்று. இப்போது நான் சொல்வது எங்கும் பகிராதது. அரங்கநாதன் பற்றிய படம் எடுக்கும்போது அவரைக் கடற்கரைக்கு அழைத்துச்சென்று அமரவைத்தோம். அவர் அந்தப் படத்தில் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி பேசிக்கொண்டிருக்கையில் ஒரு காகம் வந்ததைச் சொல்லியிருக்கிறார். அதை ஒட்டின பேச்சைப் பேசிக்கொண்டே ஞானக்கூத்தனின் மழைநாள் திவசம் கவிதையையும் காக்கைகளையும் இணைத்துச் சொல்லிக்கொண்டே கடற்கரையில் அலைகள் மோதும் இடத்தில் அமர்ந்தார். அப்போது ஒரு காக்கை அவர் அருகில் வந்து அவரைப் பார்த்து விளையாடத் தொடங்கியது. நாங்கள் யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. கேமிராவை உடனே இயக்கி அதைப் படம் பிடிப்பதற்குள் முக்கால் விளையாட்டு முடிந்திருந்தது. ஆனாலும் காக்கைக்கும் அவருக்குமான பாஷை இல்லா ஒரு சின்ன சம்பாஷணை படத்தின் கடைசியில் பதிவாகியுள்ளது. இது என்னவிதமான கோ இன்சிடன்ஸ்.. என்ன விஷயம் இது எப்படி நடந்தது அது காக்கையா வேறு எதுமா அவர் பேச்சைக் கேட்டு வந்ததா என்றெல்லாம் இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாகவே உள்ளது.

**ஜெயகாந்தன் அவர்களைப் பற்றிய ஆவணப்படத்தைத் திரு. அப்துல் கலாம் வெளியிட்டது எத்தகைய அனுபவமாக இருந்தது?**

அவரை நாங்கள் ஜெயகாந்தனின் டாக்குமெண்டரியை வெளியிட அழைத்ததே ஒரு மிகப் பெரிய கதை. தனிக் கட்டுரை எழுத வேண்டும் அதற்கு. முதலில் அவர்



ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு நான் அவர் உதவியாளர் மூலமாக அவரை முதலில் படத்தை எப்படியாவது பார்க்க வையுங்கள். படம் பிடிக்கவில்லை எனில் அவர் வெளியிட வேண்டாம், பிடித்திருந்தால் மேற்கொண்டு பேசலாம் என்று வேண்டிக்கொண்டேன். அவர் பிடித்திருந்து எந்தத் தேதி கொடுத்தாலும் அத்தேதியில் வெளியிடத் தயார் என்று கேட்டுக்கொண்டோம். அதன் பிறகும் ஒரு இரண்டரை மாதம் காத்திருந்தோம். அவருக்கு நேரமில்லை. திடீரென ஒருநாள் போன் வந்தது. டாக்டர் கலாம் பேசுகிறார் என்று அவருடைய உதவியாளர் கொடுத்தார் . அவர் சொன்ன முதல் வார்த்தை 'ரவிசுப்பிரமணியம் *you have done a wonder, you have done a wonder*'. இருமுறை சொன்னார். ஏதோ ஒரு குழந்தை உற்சாகத்துடன் சொல்வது போல் இருந்தது அவர் சொன்னது. 'நான் வெளிநாடுகளுக்குச் செல்லும்பொழுது அங்கிருக்கும் மியூசியம் எல்லாவற்றுக்கும் கூட்டிச் செல்வார்கள். டாக்குமெண்டரி படம் போட்டுக் காண்பிப்பார்கள். அவற்றைப் பார்க்கையிலெல்லாம் தமிழில் இதுபோல டாக்குமெண்ட்ரி படங்கள் வரவில்லையே என்று நினைத்ததுண்டு. இந்தப் படம் அக்குறையைப் போக்கித் தரமான படம் பார்த்த நிறைவைத் தந்தது' என்று சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார். அது என்னுடைய வாழ்க்கையின் மிக சந்தோஷமான மறக்கமுடியாத ஒரு சம்பவம்.

**விருதுகள் என்பது கவிஞர்களுக்கு அல்லது கலைஞர்களுக்குக் கிடைக்கப்பெறும் ஆகச்சிறந்த அங்கீகாரம். கிடைக்கப்பெற்ற விருதுகளும் பட்டங்களும் எத்தனையோ இருந்தாலும் ஏதேனும் ஒன்று மனதுக்கு நெருக்கமாகிவிடும். தங்களுக்கு நெருக்கமானது?**

விருதுகள் கலைஞர்களுக்கான ஒரு அங்கீகாரம்தான். மறுக்கவில்லை. ஆனால் அது மட்டுமே ஒரு கலைஞன் வாழ போதாது. சகலமும் துறந்து வாழ்நாளைக் கலைக்கு ஒப்புக்கொடுக்கிற கலைஞர்கள் வெவ்வேறு விதங்களில் கௌரவிக்கப்படுவது முக்கியமென்று நான் கருதுகிறேன். எனக்குத் தமிழக அரசு அப்போதைய முதல்வர் கருணாநிதி அவர்கள் காலத்தில் ஒரு குடியிருப்பு கொடுத்தது. அது மிகப்பெரிய அங்கீகாரமென நான் நினைக்கிறேன்.

96இல் எனக்கு ராயப்பேட்டை பீட்டர்ஸ் காலனி அரசு ஊழியர் குடியிருப்பில் ஒரு வீடு ஒதுக்கினார்கள். நான் பெற்ற எத்தனையோ விருதுகளுக்கு மத்தியில் இந்த ஒரு அங்கீகாரம் ஒரு எழுத்தாளராக என் மனதுக்கு மகிழ்வும் நிறைவும் தருவது. ஏனெனில் இந்த வீடு இல்லையென்றால் என் நிலை என்னவென்பதை நினைத்துப் பார்க்க இயலவில்லை. பல கலைஞர்களின் வாழ்க்கை நிலை இன்றும் இப்படித்தான் இருக்கிறது. அன்றாட அத்தியாவசியங்களுக்கே போராடும் நிலைதான். இதோ அரசு ஒதுக்கிய இந்த வீட்டிலிருந்துதான் என் பேட்டியைப் பதிவு செய்கிறேன். எல்லா விருதுகளையும் விட இந்த அங்கீகாரம்தான் என் மனதிற்கு மிகவும் நெருக்கமானது.

**சாகித்ய அகாதமியில் பணி புரிந்த அனுபவம் தங்களை எந்த விதத்தில் பண்படுத்தியது?**

தரமானதைத் தேர்ந்தெடுக்க அதை நிறுவ கடுமையான போராட்டங்களை ஒவ்வொரு முறையும் சந்திக்க வேண்டி இருக்கும். ஏனெனில் அவ்வளவு லாபியிங் நடக்கும். அவை வெளியில் பகிர இயலாத விஷயங்கள். அதற்கிடையில் தரமான விஷயங்கள் தருவதற்காக நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் என்பது ஒரு சாதனைதான். அதற்காகவே தனியே ஒரு அவார்ட் தரலாம். அவார்டுக்கோ விருதுக்கோ வரும் புத்தகங்களை எழுதியவர் எனக்கு வேண்டாதவராகக் கூட இருக்கலாம். ஆனாலும் அதை நாம் பொருட்படுத்தக் கூடாது. உங்கள் மனதிற்குப் படைப்பு சரி என்று தோன்றினால் அது தரமானதாக இருந்தால் அதன் அடிப்படையில் மட்டுமே பரிந்துரைக்க வேண்டும். அதன் மேன்மையை அதை நிறுவுவதற்கான நடுநிலைமையை அவசியம் பின்பற்ற வேண்டும். நான் என்னால் இயன்றதைச் செய்து இருக்கிறேன். அதில் வெற்றியும் பெற்று இருக்கிறேன் என்பதில்

எனக்கு சந்தோஷம்தான்.


**பத்திரிக்கைத் துறையில் உங்கள் பங்களிப்பு..**

பத்திரிக்கைகள் என்று எடுத்துக்கொண்டால் மௌனம் என்று ஒரு இதழ்.. என்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து தொடங்கியது. அது கவிதைக்கான ஒரு இதழ். மூன்று வருடங்களுக்குப் பிறகு நின்றுவிட்டது.

இப்போது திலகவதி ஐபிஎஸ் அவர்கள் நடத்துகிற அம்ருதா பத்திரிக்கையில் எடிட்டோரியலில் இருக்கிறேன். ஆனந்தவிகடன் பத்திரிகையில் சிலகாலம். சென்னை ஆன்லைன் நடத்திய ஆறாந்திணை பத்திரிக்கையில் சப் எடிட்டர்ஆக இருந்திருக்கிறேன்.

ஆல் இந்தியா ரேடியோவில் பி கிரேட் ஆர்ட்டிஸ்டாக இருந்திருக்கிறேன். To Let என்ற திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்தும் சி. ஜே. பாஸ்கர் எழுதி இயக்கிய பெண் சீரியலுக்கு வசனம் எழுதியும் இருக்கிறேன்.

**தங்களுடைய இலக்கியப் பங்களிப்பின் சிறப்புகள் அறிந்ததென்றாலும் தங்கள் வார்த்தைகளில் சொல்லுங்களேன்.**



புத்தகங்கள் என்று எடுத்துக்கொண்டால் ஆறு கவிதைத் தொகுப்புகள் வந்திருக்கின்றன. ஒப்பனை முகங்கள், காத்திருப்பு, காலாதீத இடைவெளியில், சீம்பாலில் அருந்திய நஞ்சு, நினைவின் ஆழியில் நீந்தும் கயல்கள் இவை அவற்றின் தலைப்புகள்.

ஆளுமைகள் தருணங்கள் என்ற கட்டுரைத் தொகுப்பு வந்திருக்கிறது. அதைத்தவிர வண்ணதாசன் கடிதங்களை ஒரு புத்தகமாகவும், பாலகுமாரனின் மிகச் சிறந்த கதைகளை முத்துக்கள் பத்து என்ற தலைப்பிலும் தொகுத்தேன்.

என்னுடைய கவிதைகளில் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்து கவிஞர் ஆங்கிலப் பேராசிரியர் ஆர். ராஜகோபாலன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தொகுப்பு *That was a different season* என்ற தலைப்பில் 2018இல் வெளி வந்தது.

2021இல் எம்விவி யின் மொத்தச் சிறுகதைகளையும் தொகுத்தது ஒரு மூன்றரை வருட வேலை. அது எந்தப் பிரதிபலனும் எதிர்பாராது செய்தது. காலச்சுவடு அந்தப் புத்தகத்தை எம்விவி யின் நூற்றாண்டில் வெளியிட்டுள்ளது. எம் வி வி, கரிச்சான்குஞ்சு, மா.அரங்கநாதன் இவர்கள் மூன்று பேரும் நான் பெறாத பெற்ற பிள்ளை என்று கூறும் பேறு கிடைத்ததும் அந்த மூன்று ஞானத் தகப்பன்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் எனக்கானது.

எம்விவி யின் காதுகள் ஒன்பது வருடங்கள் கிடப்பில் கிடந்தது. அதை வெளியிட வைத்தது மிகப்பெரிய சந்தோஷம். அந்த அனுபவம் பற்றித் தனிக் கட்டுரையே எழுதலாம்.

**புதியதாக எழுத வருபவர்களுக்கு...**

தேடுபவன் கண்டடைவான்.

**கடைசியாக ஜானுவின் ரசிகர்களுக்கெனச் சில வார்த்தைகள்..**

ஜானு ஒரு அன்பின் குறியீடு. நீங்கள் உங்களுக்கேயான ஜானுவையோ ஜானையோ அதில் பொருத்திக்கொள்ளலாம். நல்அன்பும் ஒரு வதைதான். எப்போது வரும் என்று ஏங்கி ஏங்கிக் கிடைக்கும் அந்த ஐந்து விழுக்காடு சந்தோஷத்துக்கு 95 விழுக்காடு துன்பத்தை விரும்பி ஏற்கிறோம். அதை அளைதல், அணுக்கம், சார்தல், அவிதல், இயைபு, இச்சை, மேவல், விழைவு, வெஃகல், வேட்கையெனப் ப்ரியத்தின் வெவ்வேறு பெயர்களை எல்லாம் சூட்டி கண்ணீரோடு கொண்டாடுகிறோம், மிகச்சில வேளைகளில் சிரித்தும். கண்ணீரில்லா அன்பு எங்கேனும் உண்டா என்ன? ஒரு வகையில் படைப்பின் ஊற்றுக்கண் அதுதான். தனிமனித அன்பு சமூக அன்பாக உருமாற இந்த நேசிப்பின் வதையே அடித்தளமாகிறது. ■

கவி : இரா.கவியரசு

# கொசஸ்தலை

தடதடக்கும் பாலம் கடக்கையில்
நெஞ்சைப் பிடித்துக்கொள்கிறேன்
ரயிலை உடைத்து
கால்களை இழுப்பவள்
எந்நேரமானாலும்
விழித்துக்கொள்கிறாள்
சுருள்சுருளாக
கரையொதுங்கும் மணலை
அவளுடலில்
இழைத்துக் கொண்டிருக்கிறார்கள்
பாய்ந்து பரவும்
குருதியின் கறையை
எரித்தபடி சிரிக்கிறது புதர்ச்செடி
நடுங்கி ஒளியும்
பறவையின் வயிற்றை
முத்தமிடுகின்றன
முதுமீன்களின் எலும்புகள்
முழுவதுமாகத் தோண்டமுடியாமல்
முழுவதுமாகப்
புதைக்கவும் முடியாமல்
இடுப்புடன் மட்டும் நின்றுகொண்டு
மல்லுக்கட்டுகிறாள்

கழிமுகத்தில்
அவளது இறப்பு
கொண்டாடப்படுகிறது
சாம்பலைத் திணித்துக் கொல்லும்போது
மின்சாரத்தை அள்ளிச் செல்லும்
கோபுரங்களின் பற்களில்
ஒளிர்கிறது
1000000 W
கொதிக்கும் கடல்
ஊருக்குள் நுழையும்போது
பூமியின் வரைபடத்தில்
புழுவெனக் குறுகித் துள்ளுகிறாள்
இரும்பு ரப்பரால் அழித்து
ஊதும் பெருவாய்
குருதியை மென்று துப்புகிறது
எங்கும் பரவுகிறது
கடல்நீலம்
பதட்டம் சூழ
முன்னும் பின்னுமாக
பயணிக்க வேண்டுமென
இடுப்பைப் பிடித்துக்கொண்டு கதறுகிறாள்

● யூமா வாசுகி



# சமிக்ஞைகளைத் தேடி...

## கசங்கல் பிரதி

சற்று முன்பு
இந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தவன்
இப்போதெங்கே?
வலியின் மறுப்பின்றி நகங்களைக் கிழித்து
அதன் உட்புறங்களைக் காட்ட முடிந்ததே அவனால்!
பார்வையற்ற யாசகனின் பாடல்
பிடித்துக்கொண்டு போனதா,
விற்பனைப் பிரதிநிதியின் சரக்குப்பெட்டி கனத்தை
தலையிலெடுத்துக்கொண்டு உடன் சென்றானா,
வெயில் வயல் நடு மரத்தில்
ஊஞ்சல் கட்டியாடும் ஆடு மேய்ப்புப் பெண்களிடம்
தயவுடன் கேட்பானோ தனக்கும் ஒரு வாய்ப்பு?
எப்போதும்

இடமறிந்து அமைந்துவிடுகிற
வரைகோடாய் இருப்பதில்லை அவன் வருகை.
அவனை நிற்க வைத்துப்போய் பெற்று வந்த
கொலை நிபந்தனைக் கடனின்
சொற்ப சிலாக்கியத்தைச் சேர்ப்பிப்பதெப்படி?
மெல்லிய உதடசைவுகளில்
தயக்கத்துடன் சொன்னான்.
ஒன்றும் புரியாமல் அதை ஆமோதித்தேன்.
உரத்த குரலில் திரும்பச் சொல்லும்போது
புரிந்ததாலேயே புறக்கணிக்கிறேன்.
குறிப்பெழுதப் பயன்படுத்தி
கிழித்தெறியப்படுகின்ற
துண்டுச் சீட்டுகளிலொருவன்
கொஞ்சம் கசங்கியிருந்தால் என்ன
எனும் சமாதானம்.
மனிதன் என்பதை
மீற முடியவில்லை என்றழுதான்.
அவன் பேச்சைக் கோர்த்த மாலையிட்ட பிறகு
அப்போதைக்குத் தெரிந்தது
முற்றியதாக என் மூளைச் சிற்பம்.
வரவேண்டாம் என்று நினைத்திருப்பான்
வழக்கொழிந்தது வெளிப்பட்டு வென்றிருக்கும்.
காத்திருக்க வேண்டும் என்றுதான் நினைத்திருப்பான்
அவன் உடுப்புக் கேவலம்
உறுத்தியிருக்கும் யாருக்காவது.
எப்போதும் எவ்விடத்தும்
தங்கலேற்காத பாதங்களை
உள்ளறையில் ஓவியமாய் உண்டாக்கி வைப்பேன்
அதுவொன்றே
இயற்கைக் காட்சிகளின்
இணைநகல்.







இது, பிரான்சிஸைச் சந்தித்த ஆரம்பக் காலங்களில் நான் அவன் குறித்து எழுதிய கவிதை. இதன் இறுதி வாக்கியங்கள் சொல்வதுபோல அவன் கடைசிவரை தன் மன இயற்கையின் வழியிலேயே இயங்கினான். தன்னை வேறொன்றாகக் காட்டிக்கொள்ள ஒருபோதும் அவனுக்குத் தெரியவில்லை. அப்படி விரும்பினாலும் அது அவனுக்குக் கைவந்திருக்காது. இந்த வகையில் அவன் தூயன். இந்த மனநிலையிலிருந்து அவன் பிறப்பளித்த கவிதைகள் செம்மச் செம்ம கவித்துவச் சாரம் ததும்புபவை. மிகப் பல சந்தர்ப்பங்களில் அவன் கவிதைகள், என் ஆன்மாவை உருக்கித் தந்திகளாக்கி, மானுட நேசத்தின் யாழில் கட்டி மீட்டியிருக்கின்றன.

கும்பகோணத்தில் ஒரு காலையில், ஒரு விடுதி அறையில் அவன் தன் கவிதைகளை எனக்குப் படிக்கக் கொடுத்தான். நான் ஒவ்வொரு கவிதையாகப் படிக்கப் படிக்க உணர்வுகள் என் கட்டுப்பாட்டை மீறின. என் பிரக்ஞை நசிந்துபோயிற்று. மேற்படலங்கள் எல்லாம் உரிந்து உரிந்து நொந்து குழைவுபட்டு நீர்த்துக் கசிவதாக மாறிற்று மனம். நான் உடைந்து குமுறி அழுதேன். எதிரிலிருந்து அவன் சில நொடிகள் என்னை உற்றுப் பார்த்தான். பிறகு சிரிக்கத் தொடங்கினான். அது ஆர்த்த பெருஞ்சிரிப்பாக மாறியது. உடல் குலுங்கி அலைபாய, மனம் பூத்துச் சிதற, கண்ணெல்லாம் ஒளி சிந்த, எதிலோ அமர்ந்து ஏதொன்றையோ ஆள்பவனாக, திடமும் வலிவுமாக அப்படி அவன் பரவசப்பட்டுப் பொங்கிச் சிரித்தான். பேரரிய காட்சி அது. அந்த சிரிப்பின் வேரிலிருந்த அந்த உன்னத - உன்மத்த மனநிலைக்காகத்தான் அவன் தன் வாழ்க்கை முழுவதையும் ஈந்தான். கடும் பாடுகளைச் சகித்துக்கொண்டான். வலி வேதனைகளையும் அவமானங்களையும் புறக்கணிப்புகளையும் மென்று செரித்தான். அப்படிப்பட்ட ஒரு முற்றுமுழுக்கவும் மலர்ச்சியான ஒரு சுடர்ச் சிரிப்பை பிறகு எப்போதும் அவனிடம் நான் பார்த்தது இல்லை. ஆயினும் அது அவன் செயல்களினூடே எழுத்தினூடே பேச்சினூடே இருந்திருக்கத்தான் வேண்டும். அதுதான் மோனத் துணையாயிருந்து அவன் கவித்துவத்தைத் தூண்டியிருக்க வேண்டும்.

பார்த்தறியாத அபூர்வம் அவன். சுத்த சுயம்பு. அப்படி அதிகமாகவொன்றும் அவன் இலக்கியம் வாசித்ததில்லை. ஆயினும் யேசுவின் அணைப்பில் இருக்கும் ஆட்டுக்குட்டியைப்போல, "என்னைக் கைவிட்டுவிடாதே, கிருபா" என்று அவனிடம் என்றென்றுமாகத் தஞ்சமடைந்திருந்தது கவிதை. அவனது மேன்ஷன் அறையில் ஆதியில் பல நாட்கள் இரவு தங்கியிருக்கிறேன். இருக்கும் ஒரு பாயை எனக்கு விட்டுக்கொடுத்துத் தரையில் படுத்துக்கொள்வான். கவிதையாகவும் கதையாகவும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விடியலுக்குச் சற்று முன்னர் உறங்குவோம்.

அவனது மும்பை வாழ்க்கையைப் பற்றிய நினைவுகளைப் பேட்டி எடுத்துத் தொகுக்க வேண்டும் என்று முயற்சி செய்தேன். கேள்வியும் பதிலுமாக ஒலிப்பதிவு நடந்துகொண்டிருக்கும்போதே, சற்று மது அருந்தினால் விரிவாகப் பேசலாம் என்பான் அவன். பிறகு மதுவின் சீராட்டலில் மேலும் மேலும் திளைப்பதில் பொழுது கழியும்.

நண்பர்கள் பாண்டித்துரை, உமா கதிர் ஆகியோரின் அழைப்பின் பேரில் நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கே கடற்கரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கடற்கரை இரவு. சிங்கப்பூருக்கு அடுத்த விருந்தினராக யாரை அழைக்கலாம் என்று கேட்டார்கள். அப்போது நான் பிரான்சிஸை நினைவுகூர்ந்தேன். அவன் கவிதைகள் மீதான என் வியப்பை அவர்களிடம் பகிர்ந்துகொண்டேன். அவர் சிங்கப்பூர் வர சம்மதிப்பாரா, உடனே அவரிடம் பேசி சம்மதம் வாங்குங்கள் என்று நண்பர்கள் சொன்னார்கள். அப்போது நான் அவனிடம் பேசினேன். சன்னமாக ஒலித்தது அவன் குரல். என்னிடம் பாஸ்போர்ட் இல்லையே என்றான். அதையெல்லாம் அழைப்பவர்கள் பார்த்துக்கொள்வார்கள், நீ வருவாய்தானே என்றேன். ஏற்றுக்கொண்டான். அது சாத்தியமாகாமல் போனது. இப்போது அவன் வேறு எங்கோ சென்றுவிட்டான். தொடர்புக்கு அப்பால்.

கசாக்கின் இதிகாசம் நாவலில் வரும் அல்லாபிச்சை மொல்லாக்கா, எந்த ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடந்தாலும் அப்போது சுற்றுமுற்றும் பார்த்து, இயற்கையின் சகுனங்கள் எப்படி இருக்கிறது என்று அவதானிப்பார். இனி அப்படித்தான், வானகத்திலும் இளவெயிலிலும் மரச்செறிவிலும் கிருபா தெளித்துச் செல்லும் சமிக்ஞைகளை கிரகிக்க மனங்கூர்கிறேன், பூப்பிலும் உதிர்விலும், நிலத்திலும் நீர்மையிலும், மனங்களின் ஊடேயெல்லாம் கிளைக்கும் அந்த சமிக்ஞைகளை... ■

தொகுப்பு:
வீரசோழன் க.சோ.திருமாவளவன்



# அரிதிலும் அரிதான மனிதர்

**யோகி, மலேசியா**

வாழ்க்கையில் எந்தப் புள்ளியில் வந்து நிற்கக்கூடாது என்று நான் ஒவ்வொருமுறையும் நினைக்கின்றேனோ, காலம் அந்தப் புள்ளியில்தான் நிறுத்தி எனக்கு வேடிக்கை காட்டுகிறது. ஒவ்வொருவரையும் வாழும் காலத்திலேயே அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் அவர்களைக் கொண்டாட வேண்டும் என்பதையும் சந்தர்ப்பம் கிடைக்கும் எல்லா இடத்திலேயும் நான் வலியுறுத்திவருகிறேன். ஆனால், அதற்கான சந்தர்ப்பங்கள் வாய்ப்பது என்னவோ மிக மிகக் குறைவுதான்.

நாம் அன்பு செலுத்தும் ஒருவரை, கொண்டாடித் தீர்க்கும் அந்த நல்ல ஆத்மாவைக் குறித்து மனமுருகிப் பேசுவதற்கும் எழுதுவதற்குமான சந்தர்ப்பத்தை அவர் வாழும் காலத்திலேயே ஏற்படுத்திக்கொள்ளாமல், அவர் இல்லாத உலகில் வெறும் எழுத்துக்களால் பேசித் தீர்த்துவிடுவது என்பது யாரைத் திருப்திபடுத்துவதற்கு?

நம் மதிப்புக்குரியவர்கள் இந்தப் பூவுலகை விட்டு விடைபெற்ற பிறகு, அவரை நினைவுகூர நாம் மேற்கொள்ளும் ஒருசில முயற்சிகள் நம்மை ஆசுவாசப்படுத்துவதற்கு மட்டுமே உதவும். இன்று நான் ஆசுவாசப்படுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில்தான் நிற்கிறேன்.

தோழர் பென்ஸி முகநூல்வழிதான் எனக்கு அறிமுகமானார். மலேசியத் திருநங்கை தோழர் நிஷா ஆயூப், அமெரிக்காவில் வீரப் பெண்மணிக்கான விருது பெற்றது தொடர்பான பதிவுவழிதான் எங்களின் அறிமுகம் தொடங்கியது. அவருடைய முகநூல் பதிவுகளை உற்று நோக்கும்பொழுது அது ஓர் அறிவுக் களஞ்சியத்திற்கான பெட்டகம். அனைத்துமே மிகத் தெளிவாகத் தரவுகளுடன் கூடிய கட்டுரைகளாகவே இருந்தன. ஒரு சின்ன விஷயத்தையும் அதன் ஆணி வேரைப் பிடித்துப் பதிவிடுவார். அது தொடர்பான கேள்விகளுக்கு எந்தச் சிக்கலும் இல்லாமல் இன்னும் சொல்லப்போனால் தம் பதிவைப் படித்துப் பதிவிடுபவர்களுக்கு ஞாயம் செய்யும் விதத்தில் பதில் அளிப்பார்.

முகநூல் என்பது யாரும் பார்வையாளராக வந்து போகும் ஓர் இடம்தான் என்றாலும், தம் வீட்டுக்கு வந்து போகும் விருந்தாளிக்குக் கொடுக்கும் மரியாதையைத் தோழர் பென்ஸி, தம் முகநூல் பக்கத்திற்கு வருபவர்களுக்கும் கொடுக்கத் தவறியதில்லை. வெறும் முகஸ்துதிக்காக அல்ல அந்த உபசரிப்பு, நட்பு என்ற இலக்கணத்திற்கு அர்த்தம் தெரிந்தவர்களால் மட்டுமே அந்த மரியாதையைக் கொடுக்க முடியும்.



முகநூல் வழியே அறிமுகமாகியிருந்தாலும், நீண்ட உரையாடல் எதையும் நிகழ்த்தாத, வெளிநாட்டில் வசிக்கும் யோகி என்ற பெண்ணை அவளின் பதிவுகள் வழியே அவளின் செயற்பாடுகளைத் தீவிரமாக அறிந்துகொண்டவர் தோழர் பென்ஸி. அந்த நட்பின் மேல் கொண்ட அறத்தை அவரேதான் உறுதியும் செய்துகொண்டார்.

பணி நிமித்தமாக மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் வசிக்கும் அவரின் மகனைக் காண தோழர் பென்ஸி, சில ஆண்டுகளுக்கு முன் மலேசியா வந்திருந்தார். என்னைச் சந்திக்க முடியுமா? என்று குறுஞ்செய்தி அனுப்பியிருந்தார். நான் தோழரைச் சந்திக்கச் சென்றேன். ஜிகுனா தூவி பெரும் ஆடம்பரமாகவும் பகட்டுடனும் இருக்கும் தலைநகரின் இன்னொரு பக்கம் இருண்மையானது என்று நான் கூறினேன். அவரின் ஜோல்னா பை புறப்படுவதற்குத் தயார் என்று அவரின் தோளில் ஏறி அமர்ந்தது.

தலைநகரில் இருண்மையின் நிழலில் மறைந்திருக்கும் கடைநிலை மக்களின் வாழ்வைப் பார்த்தவாறே நகர்ந்து சென்றோம். அன்றைய ஒரு பொழுதின் சந்திப்பு, தோழர் பென்ஸியின் வாழ்விலும் என்னுடைய வாழ்விலும் அழிக்க முடியாத ஒரு பந்த பாசத்தை உருவாக்கியிருந்தது. முகநூலில் பலர் அவரை மாஸ்டர் என்று அழைப்பதைப் பார்த்திருக்கிறேன். நான் தோழர் என்றுதான் அவரை அழைப்பேன். என்றாலும் அவர் தகப்பனாருக்கு உரிய அந்தஸ்தைத்தான் பெற்றிருந்தார்.

நான் அவருக்கு அதைக் கூறியதே இல்லை. அன்புகொண்ட எல்லாரிடமும் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்று எந்தத் தேவையும் இல்லை. ஒருமுறை பந்த பாசத்திற்கான உணர்வு ஏற்பட்டாலே போதும், அதற்கு எந்த மாற்றும் இருக்கப் போவதில்லை. தோழரின் முதல் சந்திப்பிலேயே அவரின் நோய் குறித்துக் கூறியிருந்தார். தொடர் சிகிச்சையின் காரணத்தினால் முகத்தில் ஏற்பட்ட தோல் அலர்ஜி குறித்தும் தோழர் சொன்னார். யாரிடமும் இதைக் கூறவில்லை தோழர்

என்றார். அதன் அர்த்தம் நானும் யாரிடமும் கூறக்கூடாது என்பதை உணர்த்தியது. ஆறுதல் கூறத் தெரியாத நான் வழக்கம் போலவே அவரின் அந்த நோயைக் குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதே வேளையில் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த நேரம்தான் தோழர்களுக்கு முக்கியமான நேரம், அரூபமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் அந்தக் கறுப்புப் பூனை குறித்துத் தோழர்களுக்கு என்ன கவலை?

நகர வீதிகளில் சுற்றிய நாங்கள் விடைபெறும்போது தோழர் பென்ஸி வீட்டிற்கு வரும்படி அழைத்தார். நானும் மறுப்பு சொல்லவில்லை. மீன் குழம்பு மற்றும் மீன் வறுவலோடு எனக்கு விருந்தோம்பல் நடந்தது. தோழரின் துணைவியாரும் புன்னகை மாறாமல் உரையாடினார். புதிதாக அறிமுகம் கொண்ட தோழரின் வீட்டில் வைத்து விருந்தோம்பல், உரையாடல் அதுவும் ஒரு இஸ்லாமியக் குடும்பமாக இருந்தாலும், அந்த ஒரு வேறுபாட்டை யோகியிடம் அவர்கள் காட்டவே இல்லை. நிறையப் பேசினோம். பின் விடைபெற்றேன்.

அதன் பிறகு நான் தோழரைச் சந்திக்கவே இல்லை. நீண்ட உரையாடல் எதுவும் செய்யவில்லை. சில ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும், இருவருக்கும் இடையில் உள்ள அந்த நட்பு மிக அழகாகவே உயிர்ப்புடன் இருந்தது. தோழர் பல இடங்களில் நல நட்புகளிடத்தில் என் குறித்த மதிப்பினையும் அன்பினையும் பகிர்ந்திருப்பது அவர் இல்லாத இந்த நேரத்தில் அறியவரும்போது, ரொம்பவும் நெகிழ்ச்சியாக உணர்கிறேன். அதே வேளையில் தோழரின் இந்த மறைவு குறித்தான வேதனையை எதிர்கொள்ளத் தெரியாமல் திணருகிறேன்.

தோழர் இருக்கும்போதே ஏன் இந்த யோகி அவரின் மீதுள்ள பந்த பாசத்தைப் பேசவில்லை? இப்போது இதைப் பேசித்தான் ஆகப்போவதென்ன? என்னை நானே நொந்துகொள்வதைத் தவிர வேறு தண்டனையைக் கொடுத்துக்கொள்ள முடியவில்லை.



••

## ஷாலின் மரியா

தோழர் பென்ஸி என்று அழைப்பதில்தான் எனக்கு உடன்பாடு. அவரை எந்த மத அடையாளத்துடனும் என்னால் சம்பந்தப்படுத்திப் பார்க்க முடியவில்லை. அவர் தனிப்பட்ட வாழ்வில் இஸ்லாத்தைப் பின்பற்றக்கூடிய மனிதராக இருந்தாலும் அவருடைய மதக் கொள்கைகள் கோட்பாடுகள் எதையும் மற்றவர்கள் மேல் திணிக்காத பரந்துபட்ட சமூகப் பார்வை அவரிடம் இருந்தது.

தோழர் பென்ஸ் எனக்கு முகநூல் மூலமாக அறிமுகம். பின்பு நான் நடத்திய ஜாதி தேசத்து சாம்பல் பறவை நிகழ்வில் கலந்துகொண்டு மிகுந்த ஆவலோடு என்னைச் சந்தித்தார். என்னுடைய எழுத்துக்கள் பற்றியும் பேச்சுக்கள் பற்றியும் ஆரோக்கியமான விமர்சனத்தையும் பாராட்டுக்களையும் வைத்தார். அவரிடம் அழகிய ஒரு எளிமையும் எல்லோரையும் பாரபட்சமின்றி நடத்தும் பெரிய மனதும் இருந்தன. எந்தவிதப் பூச்சும் இல்லாத உண்மையான மனிதர்.

அதேபோல் நான் எழுதும் கட்டுரைகளுக்கும் முகநூல் பதிவுகளுக்கும் தவறாமல் தன்னுடைய ஆக்கப்பூர்வமான



பின்னூட்டங்களை அளிப்பார். தன்னைவிட வயதில் சிறியோரை எப்படி நல்ல வகையில் ஊக்குவிக்க வேண்டும் என்று அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. பெண்ணியம் குறித்து எவ்வளவு முற்போக்காக எழுதினாலும் அதைப் புரிந்துகொள்ளும் ஒரு நல்ல மனமும், அதைப் பாராட்டும் தெளிவும் இருந்தது.

சென்ற வருடம் அவருக்குக் கோவிட் ஏற்பட்டபோது அவ்வளவு மோசமான உடல்நிலையையும் தன்னுடைய நகைச்சுவை உணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் வெற்றியுடன் கடந்தார். தன்னுடைய அனுபவங்களை எழுதி மற்றவர்களைத் தேற்றினார்.

தோழர் பென்சி போன்றவர்கள் இந்த உலகத்தில் மிகவும் குறைவானவர்கள். மானுடத்தின் மீதான அன்பு, சமத்துவப் பார்வை, யாரையும் புண்படுத்தாத மனம் இவை எல்லாம் மிகவும் அரிதான விஷயங்கள். இவையெல்லாம் தோழர் பென்சியிடம் அளவற்று இருந்தன.

## முனைவர் தமிழ்மணவாளன்

கடையநல்லூர் பென்ஸி முகநூலில் பிரசித்தம். பிரபலமானவர் எனில் அந்தப் பிரபல்யம் எதனால்.. அதிர்வை உருவாக்கக்கூடிய பதிவுகளால் கவனம் ஈர்த்தவர் அல்லர். மிக அக்கறையோடு சமூக நலன்சார் பதிவுகளால் கவனம் ஈர்த்தவர்.

அவருக்கான நட்பு வட்டத்தைப் பார்த்து மிகவும் ஆச்சர்யப்பட்டதுண்டு. சார்பு நிலையில் இருந்து நண்பர்களைத் தேர்ந்தெடுத்தவர் அல்லர். அனைத்து விதமான கருத்தியல் சார்ந்தவர்களோடும் நட்பைப் பேணியவர். கருத்து முரண் வருமெனில் கோபமில்லாமல் இயல்பாய் மறுத்துவிடக்கூடிய பண்பாளர்.

அவரின் நிலைத்தகவல்களை விட பிறரின் நிலைத்தகவல்களில் பென்ஸி இடும் பின்னூட்டங்கள் கவனத்துக்குரியவை. அநேகரின் பதிவுகளில் அவரின் அத்தகைய பின்னூட்டங்ளைப் பார்க்க முடியும்.

பின்னூட்டமெனில், வருகைப் பதிவாய் இடுவதல்ல. அதன் மீதான தன் கருத்தை விவரமாகப் பதியக்கூடியவர். பல சமயங்களில் நிலைத்தகவலை மிஞ்சிய செய்திகள் இவரின் பின்னூட்டத்தில் காணக்கிடைக்கும். அதற்கு முக்கிய காரணம் அவர் மிகச்சிறந்த வாசகர். முற்போக்குவாதி.

எந்தத் துறை சார்ந்த விஷயமெனினும் அது குறித்த கருத்தை முன் வைக்கக்கூடிய ஆற்றலாளர். *Master of All Subject* என்பது கடையநல்லூர் பென்ஸி அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும்.

அவரின் நினைவு போற்றுதும்.



• ஹரணி
• ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# களிறுகள் பெயர்ந்தனவென்றொரு தெரு

முத்தையா மணியக்காரரின் மரணத்திற்காகக் காத்திருந்ததுபோல இருந்து அவரின் தலை சாய்ந்ததும் உடனடியாகத் தெருவில் மாற்றங்கள் தெரிய ஆரம்பித்தன. அவருக்காக ஒருவேளை எல்லாவற்றையும் தெருக்காரர்கள் மூடி மறைத்து வைத்திருக்கலாம். அல்லது வெளியில் தெரிந்தால் அவரிடம்தான் பஞ்சாயத்துக்கு நிற்கவேண்டிவரும் என்பதற்காகவும் இருக்கலாம். எதுவோ வெள்ளை வேட்டி குதிகாலுக்கு மேல் நிற்கக் காலில் போட்ட செருப்பு தெரியவேண்டும் அவருக்கு. மேலே தொப்பைக்குக் குல்லா போட்டது போல வெள்ளைச் சட்டை படிந்திருக்கவேண்டும். மணிக்கட்டு மேலேறிச் சற்றே சட்டை நின்றுவிடவேண்டும். சட்டையிலும் நெஞ்சுப் பகுதியிலும் இருபுறமும் காஜா எடுத்திருக்கப் பவுன் கலரில் பட்டன் செருகிக்கொள்வார். கழுத்தில் செயின் அணியமாட்டார். 'நான் மைனர் இல்ல செயினு போட்டு மினுக்குவதற்கு மிடுக்கான மனிதன்' என்று அவரே சொல்லிக்கொள்வார். 'நான் அந்தக்

காலத்து ஐந்தாம் பாரம் படித்தவன். கொஞ்சம் இங்கிலிசும் இந்தியும் படிச்சிருக்கேன்' என்பார் அடிக்கடி. அதுவும் பேண்ட் சர்ட் போட்டவர்கள் யாரேனும் அவரிடம் சிக்கிக்கொண்டால் இந்தத் தொடர்களைப் பயன்படுத்துவார். காந்தி கண்ணாடிபோல பையில் ஒரு கண்ணாடி வைத்திருப்பார், அது கோல்ட்பிரேம். 'தேவைப்பட்டால் பயன்படுத்துவேன்' என்பார். ஆனால் அவர் கண்ணாடிபோட்டு யாரும் பார்த்ததில்லை. வழக்கம்போல குளம் குத்தகைக்கு விடச்சென்று திரும்பி வரும்போது தெரு முனையிலேயே நெஞ்சு வலிக்க ஆரம்பித்துவிட்டது. 'வாயு கழுத.. வூட்டுக்குப் போறதுக்குள்ள அவசரம்.. படுத்துது.. பாக்கியத்த ரெண்டு பூண்ட சுட்டுப்போடுடின்னு சொல்லி மென்னுட்டுத் தண்ணி குடிச்சாப்போதும்.. இந்த வாயு கழுத வால சுருட்டிக்கிட்டு ஓடிடும்,' என்று திட்டியபடியே வலதுகை குடையை இடது கைக்கு மாற்றிவிட்டு நெஞ்சுப்பகுதியை அழுத்தித் தேய்த்துவிட்டார் வலது கையால்.. ஆனால் போடா.. சக்கை என்பதுவாய் வலி மேலேறிக் குதித்தது. சரி.. இது சரியில்லை என்பதுபோல உணர்ந்தவர் வேகமாக நடையிட்டார்.. வீட்டுப்படியேறுகையில் அப்படியொரு வியர்வை சட்டையைக் குளிப்பாட்டிவிட்டது.. 'பாக்கியம்..' என்று குரலெடுத்தவர் குடையை நழுவவிட்டுத் திண்ணையில் சாய்ந்தவர் முடித்துக்கொண்டார் எல்லாவற்றையும். அன்றைக்குச் சனிக்கிழமை.. வெங்கடாசலபதியைக் கும்பிட்டுவிட்டுத் தாலியைக் கண்களுக்கு மாற்றி மாற்றி ஒற்றிக்கொள்கையில் இங்கே ஒத்திகை நடந்துமுடிந்துவிட்டது.

வெள்ளைநிற யானையொன்று விழுந்ததுபோல விழுந்து உயிரை விட்டிருந்தார் முத்தையா மணியக்காரர். தெரு முழுக்கப் பற்றிக்கொண்டது புகையில்லாமல் தீயில்லாமல்.. ஒரு பதற்றமான வலி எல்லோர் மனத்துள்ளும்.

'அய்யய்யோ மகமாயி.. எங்குலய அறுத்திட்டியேடி..' என்று பாக்கியத்தம்மாள் அலறிய அலறலில் தெரு ஒருமுறை அதிர்ந்து அடங்கியது. பக்கத்து வீடு கந்தசாமி மூப்பனாருடையது. இன்னொரு கம்பீர மனிதன். மணியக்காரருக்கு ஜோடிக் காளை. பகலெல்லாம் கறிக்கடையில் கறிவெட்டும் வேலை. இடுப்புவேட்டியை அப்படி லாவகமாய்ச் சுருட்டிக் கோமணமாக்கித் தூங்குமூஞ்சிக் கட்டையில் உட்கார்ந்து கறிவெட்ட ஆரம்பித்தால் அந்தத் தோற்றத்திற்குக் கருப்பண்ணசாமி கறி வெட்டுவதுபோல இருக்கும். யானைப் படாம்போல நெற்றி. பெரிய கண்கள். கண்களின் மேல் விளைவயலின் வரப்பு மாதிரி புருவங்கள். மீசை வெள்ளை முயல்களின் வாலை வெட்டிப் பொருத்தியதுபோன்று ஆனால் மேல்நோக்கிய பார்வை. அடிக்கொருதரம் இடது கை ஆட்காட்டி விரலால் மீசைக்குள் புகுந்து வெளியே வந்து கனைத்துக்கொண்டு அப்படியே தண்ணீர் வாளியில் கைவிட்டுக் கறிமேல் தண்ணீர் விட்டு வெட்டுவார்.

'மூப்பனாரே சீக்கிரம் கறிய வெட்டுங்க.. மசாலா போட்டு அப்படியே தளதளன்னு பொரட்டி எடுக்கறதுக்கு.. சின்ன சின்ன துண்டாப் போடுங்க..'

'சரி ஆயி..' என்றபடியே வெட்டுவார்.


ஆனால் அவரின் வெட்டுவேகத்திற்கு அஷ்ரப்பால் கறி நிறுத்துப் போடமுடியாது..

'பாய் நீங்க.. மூப்பனார் வெட்டுற வேகத்துக்கு இன்னேரம் பத்துப்பேரு கறி வாங்கிட்டுப் போயிரலாம்.. போங்க.'

'அவரு தொழில்காரரு..' என்பார் அஷ்ரப்.

அப்போது கறிக்கடை முடித்து வந்து குளித்துச் சாமி கும்பிட்டுவிட்டு உட்கார்ந்து சாதத்தில் கைவைக்கப்போனார்.. பாக்கியத்தின் அலறல் அவர் காதுகளில் வந்து ஏதோ செய்தது..

'யேய்.. தனம்.. என்னடி பாக்கியத்து ஆயி குரல் கேக்குது.. சரியில்லியே.. அடைச்சுக் கேக்குது..' என்றபடியே சோற்றில் வைத்த கையை வேட்டியில் துடைத்தபடியே நாலு எட்டில் மணியக்காரர் உடல் முன்பு நின்று



அப்படியே.. 'யோவ்.. என்னய்யா இப்படிப் பண்ணிப்புட்டியே' என்றபடியே சரிந்து உட்கார்ந்தார்.. 'என்னாயி ஆச்சு..' என்று ஓலமிட்டுக்கொண்டிருந்த பாக்கியத்தை உலுக்கிக்கேட்டார்..

'எங்கிட்ட ஒரு வார்த்தைச் சொல்லலியேண்ணா.. குளம் குத்தக பாத்து வாங்கிட்டு வரேன்னு போனாரு.. அதான் கடைசிப் பேச்சு எங்கிட்டப் பேசுனது..' பேசமுடியாமல் ஓலத்தைப் பெருக்கிவிட்டாள்.

கதவிடுக்கில் நசுங்கிய பல்லியாய் கந்தசாமி அப்படியே எழுந்து வெளியே வந்து தடுமாறியபடியே திண்ணையில் விழுந்ததுபோல் உட்கார்ந்தார்.. 'மூப்பனாரே பாத்து..' என்று பதறியோடி வந்தவர்களை அசமடக்கி.. சமாளித்தார்.

இனி தனக்கு ஜோடியில்லாமல் போய்விட்டது. ஆளுக்கொரு குடை பிடித்துப் பூட்டிய யானைகள் போலச் சென்றதில் ஒரு யானை மறைந்துவிட்டது. இருவரும் நடந்துபோகும்போது தெருவே வண்டியாகி அதில் பூட்டிய யானைபோல இருப்பார்கள். தெருவே அவர்களுக்குள்தான் உயிர்ப்பித்துக்கிடந்தது.

**(2)**

ஒவ்வொரு வீட்டையும் பிள்ளைபோலப் பார்த்தார்கள். இவர்கள் இரண்டுபேருக்கும் தெரியாமல் எந்த வீட்டிலும் எந்த உயிரும் ஜனித்துவிடமுடியாது.. எந்த நிகழ்வும் நடந்தும்விடாது.. எல்லாவற்றையும் கடந்த தெருவாக அது மாறிப்போயிருந்தது. தெருவின் பெயரை மறந்துபோகிற அளவுக்கு ஆகிப்போனார்கள். யாராவது விலாசம் கேட்டால்.. 'நம்ப மணியாரரும் மூப்பனாரும்

இருக்காங்களே அந்தத் தெருதான்’ என்று சொல்லுகிற அளவிற்கு அன்பு எனும் நதியோடும் தெருவாக இருந்தது.

அவரவர் வீடுகளில் இருக்கும்போது மணியக்காரரும் மூப்பனாரும் சிறுபிள்ளைகள் போல ஆகிவிடுவார்கள். மணியக்காரர் எதிர்வீட்டு ஒட்டுத்திண்ணையில் இடுப்பு வேட்டியுடன் உட்கார்ந்துகொள்வார். எந்தக் குழந்தைகள் வந்தாலும்.. தாத்தா என்று ஓடிவந்தால் அக்குழந்தையை இரு கால்தொடைகளுக்கிடையில் இறுக்கிக்கொள்வார். அக்குழந்தை அவரின் பெருத்தத் தொப்பை மேட்டில் தலைபதித்து கைவிரல்களால் அவரின் தொப்பைமேல் விழுந்திருக்கும் மடிப்புகளில் விரல்களால் இங்குமங்கும் ஓட்டுவார்கள். அதில் கிறங்கிப்போயிருப்பார் மணியக்காரர். தெருவின் குழந்தைகள்தான் அவரின் உலகம். கல்யாணம் ஆகி ஐம்பதாண்டுகள் ஆகிய வாழ்க்கையில் அவருக்கென்று அப்பாவென்றழைக்க ஒரு பிள்ளையோ.. தாத்தாவென்றழைக்க ஒரு குழந்தையோ இல்லாமல்போனது. கந்தசாமிக்கும் அப்படியே.. ஆனால் தெரு முழுக்க இருவரையும் கொண்டாடப் பிள்ளைகளும் பெண்களும் பேரன்களும் பேத்திகளும் இருந்தார்கள்.

மணியக்காரர் இறந்துபோய் ஒரு திவசம் கூட வரவில்லை. நட்சத்திரப்படி வந்த திவசநாளில்தான் அந்த விஷயம் உடைந்தோடியது தெருவில். சாவித்திரி மாமி பால்காரக் கோபாலுடன் வீட்டைவிட்டுக் கிளம்பிப்போனது. ராகவன் இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார். சாவித்திரி ஏன் இப்படியென்று மனதிற்குள் கேட்கமுடியாது. ஓய்ந்துபோய்தான் போயிருக்கிறாள். நிச்சயம் உடல்தேவைக்காகப் போனவள் அல்ல. முன்பறகள் துருத்திக்கிடக்க அளவுக்கதிகமான பருமனுடன் இருபது வயதையும் சுமந்துகொண்டிருக்கிற மகள் பத்மா.. மூளை வளர்ச்சியில்லாத எந்நேரமும் உறங்காது தெருப்பக்கச் சன்னலோரம் பிளிறுவதுபோல கரகரத்த குரலில் கத்திக்கொண்டிருக்கிற பிள்ளை.. எப்போது உயிர்விடும் என்பதறியாமல் எல்லாவற்றையும் துண்டை விரித்தது போன்ற பாயில் போய்க் கிடக்கும் சாவித்திரி மாமியார்.. ஓய்வூதியமே இல்லாத வேலைபார்த்து ஓய்வுபெற்றிருக்கும் ராகவன்.. எதையும் காட்டிக்கொள்ளாமல் இருந்தவள்தான்.. என்றாலும் யாருமற்ற மதியப்பொழுதுகளில் அவள் கதையைக் கொட்டித் தீர்க்கவும்.. சலிக்காது தினமும் கேட்கவும் செய்தவன் அந்த கோபால்தானே? காதுகொடுத்து நேரம் ஒதுக்கிக் கேட்கிறவங்கிட்டதான மடிசாய்த்துப் படுக்கமுடியும் அப்பாடான்னு..

‘சாவித்திரி.. நீ தெய்வப்பிறவி.. உன்னமாதிரி மனுஷியப் பாக்கமுடியாது.. தன்னைப் பார்க்கிற மாதிரி இருக்கட்டுமேன்னுதான் கடவுள் உன்னை அனுப்பி எங்கள பாக்க வைக்கிறாரு.. எல்லாக் கஷ்டமும் தீர்ந்துடும்.. ஒரு வாழ்க்கை முழுக்கக் கஷ்டமேவா இருக்கும்.. அப்படியெல்லாம் கடவுள் நயவஞ்சகக்காரன் இல்ல..’ மணியக்காரரும் மூப்பனாரும்.. அடிக்கடி இதே கருத்தை அவரவர் சொற்களில் பேசி நிறுத்திவைத்திருந்தார்கள். மணியக்காரர் தலை சாயட்டும் என்று சாவித்திரி காத்திருந்தாள் போல..

இப்போது பழைய கம்பீரம் இருந்தாலும் அந்த வேகம் முற்றிலுமாகக் கந்தசாமி மூப்பனாரிடமிருந்து விடைபெற்று மணியக்காரர் ஊர்வலத்தோடு போய்விட்டது. நானும் சீக்கிரம் வந்துடறேய்யா.. என்று சொல்வதை ஒரு நாளின் பேச்சில் ஒன்றாக வைத்திருந்தார். கறிக்கடைக்கு இனி வேலைக்கு வரவில்லை என்று சொல்லியனுப்பிவிடப் பதறிக்கொண்டு அஷ்ரப் வீடு தேடிவந்துவிட்டான்.

‘எம்மேல கொறயிருந்தா.. என்ன செருப்பால நாலு அடி அடிச்சுடு மூப்பனாரே.. நீ என்னோட தகப்பன் மாதிரி.. என் தகப்பங்கிட்ட வேல பாத்த ஆளு.. இப்போ அவரு இல்ல.. நீதான்.. கறி வெட்டவேண்டாம்.. வந்து சும்மா உக்காந்திரு போதும்.. என்னோட அப்பன் உக்காந்திருக்கற மாரி இருக்கும்.. போதும்..’

‘இல்லடா.. அஷ்ரப்.. அந்தப் பய வுட்டுப்போட்டுப் போயிட்டாண்டா.. எதுலேயும் நாட்டமில்லடா.. என்ன

கொஞ்சம் விடு.. நாலஞ்சு நாள்ல சரியாயிட்டு வந்துடுவேன்.. போ ஒம் பொழப்பயும் வாழ்க்கையையும் பாரு..'

அஷ்ரப் போய்விட்டான். ஆனால் மூப்பனார் போவதில்லை என்கிற முடிவை எடுத்துவிட்டதை அறியாமல் அவனைப் பேசி அனுப்பிவிட்டார். மனசு முழுக்க இப்போது சாவித்திரி மாமியின் நினைவு வந்தது.. எத்தன பாரத்தத்தான் அவளும் ஓயாமத் தாங்குவா.. செத்த போயிட்டு வரேன் பாத்துக்கங்கன்னு போயிட்டா.. மணியக்காரப் பயலும் அப்படித்தான்.. பாத்துக்கடான்னு போயிட்டான்.. எங்கிட்ட சொல்லாத ஒரு ரகசியத்த மனசுக்குள்ள வச்சிருப்பான்போல.. அதுக்காகப் போயிட்டான்.. சாவித்திரி மாதிரிதான் அவனும்.. உசிரோட போனா என்ன பொணமாப் போனா என்ன.. போறதுதானே முடிவா..

தனம் பழைய சோற்றில் கெட்டித்தயிரை ஊற்றி.. சின்ன வெங்காயத்தை அழகாக உரித்து ஒரு தட்டில் வைத்துக்கொண்டு புருஷன் அருகே உட்கார்ந்தாள்.. 'வா.. சாப்பிடு.. பசி பொறுக்கமாட்ட..' என்றதும் அப்படியே உள்ளடங்கி அவள் எதிரில் திரும்பி உட்கார்ந்து கையை நீட்டினார்.. எப்போதும் சோறும் தண்ணியுமாக அவள் உருட்டிக் கையில் வைக்க விரலிடுக்கில் தயிர் ஒழுகும்.. ஒரு உருண்டைக்கு ஒரு வெங்காயம் எனச் சாப்பிடுவார்.. சாப்பிட்டு முடித்ததும் கையில் ஒட்டியிருக்கும் வெண்ணெய்ப் பிசுக்கைச் சீயக்காய்ப் போட்டுக் கழுவுவார்.. இல்லையெனில் எறும்புகள் தேடிவரும் வாசனைக்கு..

## (3)

சாப்பிட்டு முடித்தார்.

அந்தத் தெரு முன்புபோல் இல்லைதான். அந்தத் தெருவிற்கு என்று ஓர் அழகு இருக்கத்தான் செய்திருந்தது. கிட்டத்தட்ட அந்தத் தெருவின் ஒவ்வொரு வீடும் அவரவர்க்குச் சொந்த வீடு என்பதால் இன்னும் அழகு நிரந்தரமாகக் கூடிப்போயிருந்தது. காலையில் ஓர் அழகு. மதியத்தில் ஓர் அழகு. மாலையில் ஓர் அழகு. இரவில் ஓர் அழகு என்று அழகு ராஜ்ஜியத்தில் திளைத்துக்கிடந்த தெருவில்தான்.. எதுவுமின்றி அரசாண்டுகொண்டிருந்தார்கள் மணியக்காரரும் மூப்பனாரும்.

அதிகாலை ஐந்துமணிக்கு எழுந்துவிடும் அந்தத் தெரு பாடத்தொடங்கிவிடும். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நீர் தெளித்த பரப்பில் அழகாகக் கோலங்கள் சிறகடிக்க ஆரம்பித்துவிடும். தெருவுக்குள் புதிதாக நுழைபவர்கள் மயங்கி நிற்பார்கள். அறிவியல் எத்தனை வளர்ந்தால் என்ன மானுட வாழ்வின் ரகசியங்கள் பலவற்றுள் கோலங்களும் ஒன்றுதானே..

'ஒரு வீட்டுக் கோலத்தைப் பார்த்தாப் போதும் அந்தக் குடும்பத்தோட லட்சணத்தைச் சொல்லிடலாம்'னு யோகாம்பா சொல்லுவா.

சின்ன கோலம்னா.. வீட்டுக்குள்ள சண்டை ஆரம்பிச்சிருக்குன்னு அர்த்தம்.. அடைச்சுக் கோலம்போட்டா.. வீடு மகிழ்ச்சியா இருக்கு.. புருஷன் பொண்டாட்டி ஒத்திசைவா இருக்காங்கன்னு அர்த்தம்.. நிறைய புள்ளி வச்சுக் கோலம்போட்டா நேரங்கிடக்கு பொழுது கழியமாட்டேங்குதுன்னு அர்த்தம்.. பூச்செடியும்.. வண்ணத்துப்பூச்சியும் மயிலும்னு கோலங்கள் போட்டா.. நல்ல காரியம் நடந்து முடிஞ்சு வீடு.. மனநிறைவு இருக்கு.. மகிழ்ச்சி குறையாம இருக்குன்னு அர்த்தம்.. இதெல்லாம் அப்படித்தானா என்றால் 'நான் அப்படித்தான்' என்று தான் போடும் கோலத்திற்கு யோகாம்பா பொருள் உரைப்பாள்.. ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்று அத்தனையையும் வளர்த்து ஆளாக்கிக் கல்யாணமும் செஞ்சுகொடுத்து பேரன் பேத்தியும் பார்த்தாச்சு...

தெரு முழுக்கச் சொல்லும் அச்சு மாறாம.. 'வளத்தா யோகாம்பா மாதிரி வளக்கணும்'னு.. இத்தனைக்கும் யோகாம்பா கைநாட்டுதான்.. வாழ்க்கைக்கு வாழ்ந்த அனுபவம்தான் வழிகாட்டி..

கொஞ்சம் காசும் பணமும் வந்துட்டா எல்லாருக்கும் அரசாண்டு பார்க்கணும்னு ஆசை வந்துடுது.. அப்படித்தான் வேதவல்லியும்.. பொண்ணு ஒண்ணு ஆணு ஒண்ணு பெத்து வளத்தா.. விடுமுறைக்கு சித்தி வீட்டுக்குப்போன ஆம்பளப்புள்ள பக்கத்துல ஓடுற ஆத்துக்குக் குளிக்கப்போயி அப்படியே போயிடிச்சி.

தெருவே நடுங்க.. உருண்டு புரண்டு கத்திக் கதறினாள் வேதவல்லி. ஒரு தெய்வங்கூட வந்து ஏன்னு கேக்கலியேன்னா..

புள்ளய பறிகொடுத்த அந்த ஊருக்கே இனி நல்லது கெட்டதுக்குப் போவமாட்டேன்னு சத்தியம் பண்ணி வச்சிக்கிட்டா.. தம் புருஷனப் பறிகொடுத்து திவசம் கொடுக்கக்கூட அந்த ஊருக்குப் போகலே..

விழாவிற்கெனக் கட்டும் வாழை மரங்களும்.. தோரணங்களும் கொஞ்சங்கொஞ்சமா காய்ந்து உதிர்வதைப்போல அந்தத் தெருவில் மாற்றங்கள் மனிதர்களைப் பந்தாட ஆரம்பித்தன. ஒரு வீட்டில் ஒரு கல்யாணம் என்றால் நான்கு இழவுகள் விழுந்தன.. இது என்ன கணக்கு?

மூப்பனார்.. ‘பேசாம மணியக்காரனோடவே போயிருக்கலாமே.. ஏண்டா ஆண்டவா இப்படி உசிர வச்சு உசிர எடுக்கறே’ன்னு வாய்விட்டுப் புலம்ப ஆரம்பிச்சுட்டாரு.. அவர் பார்த்து வளர்த்த தெரு.. போய்க்கிட்டே இருக்கு..

சாவித்திரி கிளம்பிப்போன துக்கத்தில் ராகவன் சட்டென்று வயதுக்கு வந்த பிள்ளை.. மூளை வளர்ச்சியற்ற பிள்ளை யாரையும் கருத்தில் கொள்ளாமல் வீட்டுக்குள் பேனில் தொங்கிக் கதையை முடித்துக்கொண்டார்.

பத்மா.. ‘நான் பார்த்துக்கறேன் என் தம்பிய’ என்று தத்தெடுத்துக்கொண்டாள்.

மூப்பனார் போயி.. ‘நான் உசிரோட இருக்கறவரைக்கும் பாத்துக்கறேன் தாயி’ என்றதும் அவர் மடியில் விழுந்து அழுதாள் பத்மா.

தெருக்கடைசியில் இருந்த வீட்டைப் பூவரசியம்மா இறந்துபோனதும் அவள் பிள்ளைகள் விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். அந்தப் பழங்கால வீட்டில் (தரித்திரம் புடிச்ச வீடு என்று அடிக்கடி பூவரசி சொல்வாள்) அப்பளக் கம்பெனி வந்தது. குடும்பம் போய்விட்டது. புதிதாகக் கல்யாணம் பண்ணி வந்து நாலைந்து ஆண்டுகளில் தாலியறுத்தாள். பெற்ற பிள்ளைகளை வளர்க்க அவள் சிரிப்பாகச் சிரிச்ச கதை தெருவுக்குத் தெரியும்.. ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு வேளை ஒன்றாய்க் கொடுத்துத் தூக்கினார்கள் அவள் பிணத்தை.

வெளுத்துப்போன புடவையும் வெறுங்கழுத்தும் தொங்கிய காதுமாகத்தான் இருந்து பூவரசி செத்துப்போனாள். ‘அண்ணே.. பாத்தீங்களா சிலருக்கு மனித ஜென்மம் போட்டிருந்தாலும் நாய் மாதிரி அலைஞ்சு சாவணும்னு எழுத்துப்போட்டிருந்தா மாறுமா.. எங்கதை அப்படித்தான்.. புள்ளங்களுக்காக வாழுறேன்.. வெந்தத தின்னுட்டு விதிவந்தா சாவலாம்னு நெனச்சுக்கிட்டு..’

அந்த ரெண்டுபேரும் இருந்ததால தெருவுக்குள்ள எல்லாம் நடந்தது. கோடையில கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். தெருவே மணக்கும். வீட்டுக்குவீடு மதியச் சாப்பாடு கஞ்சியும் முருங்கைக்கீரையும் புட்டு மாவும்தான்.. ஒரு வீடு பாக்கியில்லாமல் அடர்த்தியான மாவிலைகள், தென்னையோலைகள், ஈச்சங்கொத்துக்களோடு தோரணங்கள் அட்டகாசம் பண்ணும் அழகு.. எல்லார் வீட்டு வாசலிலும் தெருவடைக்கப்போட்ட கோலத்தில் குத்துவிளக்குகள் பல கண்கள் சிமிட்டி சுடர்விட்டிருக்கும்.. ஒவ்வொரு தேராக வரும்.. கடைசியில் குந்தாளம்மனை இறக்கி வைத்து மூப்பனார் வீட்டில் விருந்து நடக்கும் பல்லக்குத் தூக்கிகளுக்கு.. யானைகளை அழைத்து வருவார்கள். சின்ன பிள்ளைகளை ஏற்றி முன்னும் பின்னும் யானைகள் தெருவை ஊஞ்சலாக்கி ஆடும்.. பெரியவர்கள் தலையில் துதிக்கை வைத்து ஆசிர்வாதம் பண்ணிச் சிலிர்க்கும்..

(4)

தெரு முழுக்க அந்நியப்பட்டுவிட்டன பாதிக்கு மேலான வீடுகள். யார் யாரோ யார் யாரிடமோ விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். மணியக்காரர் போன துக்கத்திலேயே மூப்பனாரும் ஒருநாள் வீட்டிற்குள்ளே வழுக்கி விழுந்து படுக்கையில் கிடந்து இறந்துபோனார்.

ஒன்றினதாய்ச் சுவற்றின்மேல் இருந்த அடுத்த வீட்டின் சுவற்றிற்குச் சந்து விடவேண்டும் என்று கோர்ட்டிற்குப் போனார்கள் இரண்டுபேர்கள்.

தெருவிறங்கி அடித்துக்கொண்டார்கள்.

போலிஸ் வந்து வழக்கு பதிந்துகொண்டார்கள்.

தெருவில் குடியிருந்த ஒன்றிரண்டு பழைய வீட்டு வாரிசுகளும் பெருங்காய டப்பாவின் வாசனையாகச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் வாழ்ந்தார்கள்.

'பைத்தியக்காரனுங்க.. உருப்படாத காரியங்களாப் பார்த்துத் தெருவக் குட்டிச்சுவராக்கிட்டுப் போயிட்டானுங்கள்' என்று மணியக்காரரையும் மூப்பனாரையும் திட்டித் தீர்த்தார்கள். நிறைய பேரை இழந்து வீடுகள் தள்ளாடித் தடுமாறி சிதிலப்படத் தொடங்கியிருந்தன. பூர்வீகம்.. வாழ்ந்த வீடு புண்ணாக்கு இவற்றைக் காரியுமிழ்ந்துவிட்டு வந்த விலைக்கு விற்றார்கள். இடித்துப்போட்டுக் காலி மனையாக்கிவிட்டு ஆத்திரம் தணிந்தார்கள்.

சங்கரன் தன் பேரனை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போனான்.

'தாத்தா.. இந்தத் தெருதான் உங்க தாத்தா வீடா?'

'ஆமாம்பா..' என்று பெருமூச்சுவிட்டபடி தெருவைக் கடந்தார்கள்.



'ஏங் தாத்தா தெருவுக்கு யானை எல்லாம் வருமாமுல்ல..' என்றான்.

'ஆமாம்பா.. யாரு சொன்னா?'

'பாட்டி சொன்னாங்க.. அதுமேல ஏறிக்கிட்டா ஜாலியா இருக்குமாம்.. ஏங் தாத்தா யானை வைல்ட் அனிமல் இல்ல.. நம்பள கில் பண்ணிடாது..'

'பண்ணாதுப்பா.. அதுங்க பழக்கப்பட்ட யானைங்க..'

'ஓ.. எத்தனை யானைங்க தாத்தா வந்துச்சி?'

'இரண்டு யானைங்க இருந்துச்சு..' என்றார்.



நானும் வருவேனென
அடம் பிடிக்கும்
தூங்கும்
குழந்தைக்குத் தெரியாமல்
வாகனம் எடுத்து
வெளியே செல்லும்
அப்பா போல
சத்தமில்லாமல்
வந்து போயிருந்தது
அதிகாலை
மழை

– பூங்கோதை கனகராஜன்

..

அவர்கள்
எலும்புக் கூட்டுப் படங்களை
வெளிச்சத்தில்
பிடித்துப் பார்க்கிறார்கள்.
இவர்கள்
கட்டட வரைபடங்களை
நீள விரித்துப் பார்க்கிறார்கள்.
நாங்கள்
சொற்களால் பறவைகள்
செய்து பார்க்கிறோம்.

– ஃபஷ்றி

..

எல்லோரும் மழையை
ரசித்துக்கொண்டிருக்க
அம்மா மட்டும்
ஆழ்ந்திருக்கிறாள்
அடுப்பு மூட்டுவதைப்
பற்றிய சிந்தனையில்....!

– நித்யா சபரி

..

அடையாள அட்டைகளின்
குறியீட்டில்
கடவுள்களின் ரகசியக் குறிப்புகள்
மறைந்திருக்கின்றன!
வீட்டிற்கே
எல்லாம் வரும் என்பது
நான்கு சுவருக்குள்
அடைக்கும் ராஜ தந்திரம்!
சிறு வியாபாரிகளைத்
தின்றுபோட்ட மிச்சம்
ஒட்டிக்கிடக்கிறது
இணையக் கடைகளின் உறைகளில்!
உளவு பார்க்கும் கண்களுக்கு
அனுமதி கேட்கிறது
கைப்பேசிகள்!
இணையவழியில் படித்தாலும்
புத்தக விற்பனை
விளம்பரத்திற்குப் பிறகு
தன்னை தொடர்புகொள்ள
அழைக்கும் பெண்ணின்
அலைபேசி எண்
அரைகுறை ஆடைகளுடன்
அவிழ்ந்து கிடக்க...
இப்போதெல்லாம்
ரகசியம் என்பது பிறர் நம்மை
ஆடையை அவிழ்த்து
அப்பட்டமாகப் பார்ப்பதுதான்!
கடவுளின்
ரகசிய குறிப்புகள் அறிய
உடனே ஓடிபி எண்ணை இங்கே பதியவும்!

– முகமது பாட்சா

..

## வாகனப்போராளி

போரில்
நிற்பது போல்
சாலையில்
எதிரெதிரே
அணிவகுத்து நிற்கும்
வாகனப்போராளிகள்
வேக வெறியேறி
வாகனங்களை முறுக்கியபடியே
இருக்கிறார்கள்....

போருக்கு முன்
உற்சாகப்படுத்துவதைப்போல
சாலையோரத்தில் குரங்காட்டியின்
நடனம் அமர்க்களப்படுகிறது...

காலிழந்த
யாசகரின் கண்களை
பார்க்காமல்
எங்கோ பார்த்தவாறு
காலம்
கடத்தப்பட்டு
பச்சை
விளக்கு ஒளிர்ந்தவுடன்
சீறிப்பாயும்
வாகனங்கள்
வேக வேகமாக
கண்ணை விட்டு மறைகின்றன....

முன்னால்
வாகனப்போராளியான
யாசகரின்
கண்கள் வாகனங்களை
பின்னால் இழுத்து
பிடித்தபடியே
செல்கிறது
ஆனாலும்.....
மீண்டும்
சிவப்பு விளக்கு
ஒளிரத்துவங்குகிறது....

– தோழன் பிரபா

தூண்டில், வலை, இடுப்பு வேட்டி
கூர் அலகு, எது தோதோ
பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
சுட்டு, பொரித்து
காய வைத்து கருவாடாக்கி
மருந்தை உள்ளடக்கி உயிரோடு
எப்படியோ உள்ளே தள்ளினால் சரிதான்.
குடல், செதில்கள், முட்கள்
இல்லாமல் எப்படி?
தொட்டி, குளம், ஏரி, கண்மாய், கடல்
பரப்பா முக்கியம்?
அகோரப் பசியோடிருக்கும் உங்களுக்கு
குமிழ்விடும் சத்தமெல்லாம்
கேட்கவா போகிறது?
இப்போதைய தேவை
உற்சாகமாக நீந்தித் திரியும்
சொற்கள்தானே?
பிடித்துத் தின்றுவிட்டு
அரவமில்லாமல் போங்கள்.
நீர் வற்றினாலும்
முட்டைகள் உயிரோடுதானிருக்கும்.


– மா.காளிதாஸ்

..
கல் எறிய கல் எறிய
கலங்கித்
தெளிந்துவிடுகிறது
குளம்.

கல்லெறியத் தூண்டிய
கறைதான்...
கரை
காண்பதேயில்லை.

– அன்பூ

..



● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

"பாரதியைத் தனது ஞானத் தந்தையாகக் கருதினார். பாரதிதாசனைக் குருவாகக் கொண்டார். அவர்கள் இருவரும் வகுத்துச் சென்ற வழியை மேலும் செம்மைப்படுத்தினார்" என்று பொதுவுடைமை இயக்க மூத்த தலைவர் தோழர் இரா.நல்லகண்ணுவால் பாராட்டப்பெறும் பெருமைக்குரியவர் கவிஞர் தமிழ்ஒளி.

கடலூர் மாவட்டத்திலுள்ள குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர் எனும் கிராமத்தில் 1924 செப்டம்பர் 21 அன்று பொ.சின்னையா, செங்கேணி அம்மாள் தம்பதியினரின் மகனாகப் பிறந்த கவிஞர் தமிழ்ஒளியின் இயற்பெயர் விஜயரங்கன். தந்தையின் ஊரான புதுச்சேரியிலுள்ள சாமிப்பிள்ளைத் தோட்டத்தில் வாழ்ந்த கவிஞருக்கு, புரட்சிக்கவிஞரின் மகனான மன்னர் மன்னனுடன் நட்பு உண்டானது. அவரின் வழியே பாரதிதாசனின் அறிமுகமும் கிடைத்தது. கவிஞருக்குத் தமிழ்ஒளி எனப் புரட்சிக்கவிஞரே பெயரிட்டார். பட்டுராசு என்றும் கவிஞரைச் செல்லமாக அழைத்தனர்.

கவிஞர் தொடக்கக் கல்வியைப் புதுவையிலுள்ள முத்தியாலுப்பேட்டை நடுநிலைப் பள்ளியிலும், உயர்கல்வியைக் கல்வே கலாசாலையில் சில காலமும், கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் ஓராண்டும் படித்தார். மாணவப் பருவத்திலேயே பாரதி, பாரதிதாசன் கவிதைகளை மனம் ஒன்றிப் படித்தார். மாணவப் பருவத்தில் திராவிட நாடு, குடியரசு, புதுவாழ்வு ஆகிய திராவிட இயக்க இதழ்களிலும் கவிதைகளை எழுதினார்.

புரட்சிக்கவிஞரின் நட்பு கிடைத்ததும் குயில் தோப்புக்குத் தினமும் சென்ற கவிஞர், தான் எழுதிய கவிதைகளை அவரிடம் படித்துக் காட்டுவார். அதற்காகப் பலமுறை புரட்சிக்கவிஞரின் பாராட்டினையும் பெற்றார். அந்தச் சமயத்தில் புரட்சிக்கவிஞர்

எழுதிக்கொண்டிருந்த ‘பாண்டியன் பரிசு’ காவியத்தை நகல் எடுத்துத்தரும் பெரும்வாய்ப்பும் தமிழ்ஒளிக்குக் கிட்டியது.

கவிஞர், கட்டுரையாளர், விமர்சகர், இலக்கிய ஆய்வாளர், மேடை நாடக ஆசிரியர், குழந்தைப் பாடல்கள் எழுதியவர் எனப் பன்முகப்பட்ட ஆளுமையுடன் திகழ்ந்தவர் கவிஞர் தமிழ்ஒளி. இலக்கிய வட்டத்தில் கவிஞரின் நண்பர்களாக இருந்த கவிஞர் குயிலன், ஊ. கோவிந்தன் இருவரும் பொதுவுடைமை இயக்கச் சிந்தனையாளர்கள். தினமும் நண்பர்களுடனான கலந்துரையாடலில் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்தது.

தொடக்கக்காலத்தில் திராவிட இயக்கச் சிந்தனையாளராக விளங்கிய கவிஞரை, இளமையிலேயே வறுமை வாட்டியது. சென்னை நகரில் வாழ்ந்தபோது, அங்கு உழைக்கும் மக்கள் படும் துயரங்களை நேரில் கண்டு கொதித்துப்போன கவிஞர், ‘உழைக்கும் மக்கள் வாழ்வில் ஒளிபரவ மார்க்சியமே சிறந்த மாமருந்து’ என்பதை உணர்ந்து, கருப்புச்சட்டையைக் களைந்து சிவப்புச்சட்டையை அணிந்துகொண்டார். ஓராண்டு காலம் பொதுவுடைமைக் கட்சியின் ஆதரவாளராகவிருந்த கவிஞர், 1947இல் கட்சியின் உறுப்பினராகத் தன்னை இணைத்துக்கொண்டார். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகவும், சமூகத்தில் நிலவும் சாதிய வேறுபாடுகளைக் களைந்தெறியும் எண்ணத்தோடும் தனது கவிதைகளைப் படைக்கத் தொடங்கினார் கவிஞர். பொதுவுடைமைச் சிந்தனைகளையே தனது உயிர்மூச்சாகக்கொண்டு, தனது படைப்புகளில் அச்சிந்தனைகளை வீரியத்துடன் வெளிப்படுத்தினார்.

இந்தியாவில் முதன்முதலில் மே தினத்தைக் கொண்டாடியவர் சிங்கார வேலர் என்பதை அறிவோம். அதேபோல், முதன்முதலில் மே தினத்தை வரவேற்றுப் பாடிய கவிஞர் தமிழ்ஒளி என்பது பலரும் அறிந்திராத உண்மை.

‘உலகத் தொழிலாளர் ஒற்றுமையே,
நல்லுணர்வே,
அன்பே, இருட்கடலின் ஆழ்ந்திருந்து வந்த
முத்தே, முழுநிலவே, மேதினமே வாராய் நீ!
வாராய் உனக்கென்றன் வாழ்த்தை
இசைக்கின்றேன்!’


- என்று 1949ஆம் ஆண்டில் ‘முன்னணி’ எனும் ஏட்டில் மே தினத்தைப் போற்றி எழுதினார் தமிழ்ஒளி.

முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை ஆகிய இதழ்களில் சில காலம் பணியாற்றிய கவிஞர் தமிழ்ஒளி, ‘ஜனயுகம்’ என்னும் திங்கள் இதழையும் சில காலம் தனது சொந்த முயற்சியில் நடத்தினார். அந்த இதழின் வழியே மார்க்சியக் கருத்துகளை மக்களிடம் விரிவாகக் கொண்டுசென்றார்.

உழைக்கும் மக்களின் வாழ்வு நிலை உயர இலக்கியங்கள் பயன்பட வேண்டுமென்கிற கொள்கை உறுதியுடன் இருந்த கவிஞர் தமிழ்ஒளி, தனது அனைத்துப் படைப்புகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேன்மைக்காகவும், உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் பல காவியங்களைப் படைத்தார்.

‘திசையதிர நடக்கிறது சீனத்துச் செஞ்சேனை’ எனும் கவிதையை 1948லும், ‘புதுவைத் தொழிலாளிக்குக் கோவைத் தொழிலாளியின் கடிதம்’ எனும் கவிதையை 1949லும், ‘நவம்பர் புரட்சிக்கு நல்வாழ்த்துகள்’ எனும் கவிதையை 1959லும் எழுதிய கவிஞரின் படைப்புகளில், நாடு, சமூக இயல், தமிழர் எழுச்சி, அரசியல், பொதுவியல், தத்துவ இயல், சான்றோர், அழகியல் எனப் பலவும் பாடுபொருளாகி, வாசிப்பவர் சிந்தனையில் நல்ல தாக்கத்தை உண்டாக்கின.

தமிழில் அதிகமான காப்பியங்களை எழுதியவர் எனும் பெருமையும் கவிஞர் தமிழ்ஒளிக்கு உண்டு. கவிஞனின் காதல் (1943), நிலை பெற்ற சிலை, வீராயி, மே தின ரோசா, விதியோ வீணையோ, கண்ணப்பன் கிளிகள், புத்தர் பிறந்தார், கோசலக் குமாரி,




மாதவிக் காவியம் எனப் பல காவியங்களை எழுதினார். இவற்றுள், வீராயி எனும் காவியம் குறிப்பிடத்தக்கது. இக்காவியத்தின் கதைத் தலைவி வீராயி, ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண். இந்த நூலுக்கு கவிஞர் எழுதிய முன்னுரையில்,

"எழுத்தாள நண்பர்களே! கற்பனையுலகைப் படைக்கும் கவிஞர்களே! உங்களுக்கு 'வீராயி' மூலம் விடுக்கும் வேண்டுகோள் இதுதான்; மக்களுக்காக, மக்கள் உயர மக்கள் காலத்துக் கதைகளை எழுதுங்கள். உலகம் முழுவதும் உருவாகிக் கொண்டுவரும் உழைக்கும் இனத்தின் கூட்டு முன்னணிக்கு உங்கள் எழுத்து உறுதுணையாகட்டும். முடிந்தவரையில், 'வீராயி'யை 'ஏழையப்பரின்' இதய எதிரொலியாகச் செய்ய முயன்றிருக்கின்றேன்" (15.11.1947) என்று குறிப்பிட்டுள்ளார்.

1951ஆம் ஆண்டில் திரைத்துறையில் தடம் பதிக்கும் சூழல் கவிஞருக்கு வாய்த்தது. 'உலகம்' எனும் திரைப்படத்தில் ஒரு பாடலை எழுதினார். பின்னர், 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' படத்திலும் ஒரு பாடல் எழுதினார். 1946இல் சக்தி நாடக சபாவுக்காக 'சிற்பியின் காதல்' என்னும் நாடகத்தை எழுதினார். அக்கதை 'வணங்காமுடி' என்ற பெயரில் திரைப்படமாகவும் உருவானது. (படத்தில் மூலக்கதை: தமிழ்ஒளி என்று குறிப்பிடப்படாமலேயே கவிஞரது பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டது).

பொதுவுடைமை இயக்கத்தில் இருந்தபோது, 17 வயதுடைய இளைஞனொருவர் கவிஞரைச் சந்திக்கிறார். அந்த இளைஞரே பின்னாளில் தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் கம்பீரமான குரலாக ஒலித்த ஜெயகாந்தன். கவிஞர் தமிழ்ஒளியால் வார்த்தெடுக்கப்பட்டவர்தான் ஜெயகாந்தன். "நான் தமிழ் இலக்கியப் பாடம் யாரிடமாவது முறையாக நெடுநாட்கள் பயின்றிருப்பேன் என்றால், அது தமிழ்ஒளி அவர்களிடம்தான். படிக்கிற விஷயத்தில் எனது சனாதனத்தை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்வதோடு அன்றி, எத்தனையோ விஷயங்களில் எனது கண்களைத் திறந்தவர் அவர். பாரதியின் படைப்புகளையே தாண்டி வரக்கூடாது என்றிருந்த என்னைப் புதுமைப்பித்தன் வரை இழுத்து வந்தவர் தமிழ்ஒளிதான்" என ஜெயகாந்தன் பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் தமிழ்ஒளி, புதுவையிலிருந்து சென்னைக்கு வரும்போதெல்லாம் சென்னையின் பல்வேறு இடங்களைக் கால்நடையாகவே சுற்றிவருவார். வெட்டவெளிகளில் துளியும் பாதுகாப்பில்லாத குடிசைகளில் வெயில், மழைக்கு ஒடுங்கிக் கிடக்கும் ஏழை மக்களின் துயரம் படிந்த வாழ்வைக் கண்டு, கவிஞரின் மனம் மிகவும் வருந்தும். 1945ஆம் ஆண்டு முதல் சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்ட கவிஞர், தாம் இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன்புவரை தனது பெற்றோரைப் பார்க்கவோ, அல்லது வேறு நிகழ்வுகளுக்காகவோகூட புதுவைக்குச் செல்லவே இல்லை.

1948இல் கவிஞருக்குத் திருமணம் செய்து வைக்க பெற்றோர் முயன்றனர். தனது எண்ணங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய பெண்ணைத் தேர்ந்தெடுக்கப் பெற்றோரால் முடியாது என்றெண்ணியே திருமணம் வேண்டாமென நிராகரித்தார் கவிஞர்.

"நான் எந்த நேரத்தில் எதை எழுதுவேன் என்பது எனக்கே தெரியாது. ஏனெனில் எதையும் நான் திட்டமிட்டுச் செய்வதில்லை. அவ்வாறு செய்வது ஒரு கலைஞனின் பணியுமன்று. அது ஒரு எந்திரத்தின் போக்கு. நான் எந்த நேரத்தில் எதைப் படிக்கிறானோ, எதைப் பார்க்கிறேனோ அதுவே என்னுள் கிளர்ந்தெழுந்து கவிதை, கதை, கட்டுரை என்று பரிணமிக்கின்றன. அதனால்தான் இந்த நேரத்தில் இதை எழுது என்று எவர் பணித்தாலும் எனக்கு எரிச்சலாக இருக்கிறது; அப்படி எழுதுவது இலக்கியமாக இருக்காது என்றும் தோன்றுகிறது" என்பதையே தனது உறுதிப்பாடாகக் கொண்டிருந்தார் கவிஞர் தமிழ்ஒளி.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1948ஆம் ஆண்டில் தடை செய்யப்படவே, 'ஜனசக்தி' பத்திரிக்கை அலுவலகமும் மூடப்பட்டது. கட்சித் தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். அந்த நெருக்கடியான காலகட்டத்தில் 'முன்னணி' எனும் இதழ்தான் தலைமறைவாளர்களுக்குத் தொடர்பு சாதனமாகப் பயன்பட்டது. கவிஞர் குயிலன் தொடங்கிய இவ்விதழுக்கு, இணை ஆசிரியராகப் பொறுப்பேற்ற கவிஞர் தமிழ்ஒளி, பகலிரவு பாராது உழைத்தார்.

வாரந்தோறும் கவிதை, கதை, ஓரங்க நாடகம், விமர்சனம் என்று பலவற்றை எழுதி, வாசகர்களை எழுச்சிபெறச் செய்தார் தமிழ்ஒளி. அந்த நாட்களில் பொதுவுடைமைக் கருத்துக்களை மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் வாயிலாக மட்டுமே மக்கள் அறிந்த நிலையில், தனது படைப்பிலக்கியத்தின் மூலம் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பினார். அதனாலேயே 'பொதுவுடைமைப் பாவலன்' என்று பலரும் கவிஞர் தமிழ்ஒளியை அன்போடு அழைத்தனர்.

மே தினத்தைப் போற்றிக் கவிஞர் வெளியிட்ட நூலொன்று பலத்த வரவேற்பைப் பெற்றது. கவிஞரது வறுமை முற்றாக நீங்காத நிலையிலும், அந்த நூலின் விற்பனைத் தொகையில் பாதியை, அன்றைய சூழலில் மலேசியாவில் நாடு கடத்தப்பட்ட தமிழர்களின் நல்வாழ்வுக்காக வழங்கினார் கவிஞர் தமிழ்ஒளி.

காப்பியங்களைப் படைத்திட்ட கவிஞரது பேனா எதை எழுதினாலும் அதிலொரு கதைத்தன்மை பொதிந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. போராட்டத்திற்கான எழுச்சிக் கவிதையானாலும், குழந்தைகளுக்கான பாடலானாலும் சிறிய கதையொன்றின் தொடர்ச்சி போல் ஒரு காட்சியையாவது கவிஞர் அதில் வைத்திருப்பார். அப்படியாக, கவிஞர் தமிழ்ஒளி எழுதிய பலவற்றுள் என் கவனத்தைக் கவர்ந்த கதைப் பாடல், 'கழைக் கூத்தாடி'. 1947இல் 'குயில்' இதழில் இந்தப் பாடல்






வெளியானது. மூன்று பக்கங்கள் கொண்ட இந்தப் பாடலைப் படித்து முடிக்கையில், கல்நெஞ்சமும் கரையும். அப்படி கழைக் கூத்தாடி ஒருவரின் வாழ்வைச் சொல்லும் சோகக் காட்சியின் க(வி)தைப் பதிவிது.

**'தோளில் அமர்ந்திடும் உங்கள் பிள்ளை – நல்ல**

**தொட்டிலில் ஆடிடும் உங்கள் பிள்ளை!**

**காளியை நம்பிஎன் பிள்ளையதோ – அந்தக்**

**கம்பத்தின் உச்சியில் தொங்குதையா!**

**தென்னை உயரத்துக் கம்பத்திலே – மிகச்**

**சின்ன வயிற்றினை ஒட்டவைத்தே**

**மின்னியல்காற்றாடி சுற்றுதல்போல்–அதோ**

**வேகமாய்ச் சுற்றுதே என்குழந்தை!'**

- என்று கழைக் கூத்தாடியின் குழந்தையை 'நம் பிள்ளை'யெனச் சொல்லும் கவிஞர், அடுத்ததாக கழைக் கூத்தாடியான கிழவனின் பக்கமாய்த் திரும்புகிறார்.

**'கும்பலை நோக்குவான் ஒற்றைக்கண்ணால் – தன்**

**குழந்தையை மற்றொரு கண்ணில் வைப்பான்!**

**தெம்பிழந் தாடும் உடல்சுமந்தே – மிகத்**

**தேங்கித் தள்ளாடி நடந்திடுவான்!'**

- என்ற கவிஞர், பிஞ்சுக் குழந்தையை வயிற்றுப் பசிக்காக உயிரைப் பணயம் வைத்து கயிற்றிலாட விட்ட, இந்தச் சமூகத்தையும் சாடிடத் தவறவில்லை.

**'பிச்சை யெடுத்திட வைத்திருக்கும் – இந்தப்**

**பேதை சமூகத்தில் வாழ்பவர்கள்**

**பச்சைக் குழந்தையின் ரத்தங்கண்டும் – அங்குப்**

**பாதகர் நெஞ்சிலே ஈரமில்லை!'**

- என்கிறார் கவிஞர். காட்சி தொடர்கிறது. கயிற்றிலாடும் குழந்தை வயிற்றுப் பசியினால் கைகளும் கால்களும் சோர்ந்துபோக, நழுவிக் கீழே விழுகிறது. கழைக் கூத்தாடி கிழவன் ஓலமிட்டு அலறுகிறான். குழந்தையிடம் மூச்சில்லை. பெற்ற மனம் பேதலித்து, குழந்தையின் முகத்துடன் முகம் ஒற்றி அப்படியே சா(ய்)கிறான். கதைக் கவிதையின் முடிப்பாகக் கவிஞர் சொல்லும் கடைசி நான்கு வரிகள், நம் மனசாட்சியைக் குத்திக் கிழிக்கும் கோடாரி வரிகள்;

**'வேடிக்கை பார்த்தவர் ஓடிவிட்டார்! – அங்கு**

**வீழ்ந்த இரண்டுடல் வேதனையில்**

**கூடிக் கிடந்தது; குள்ளத்தமிழர் போல்**

**குருடாகி நின்றதக் கம்பமுமே!'**

அங்கே குருடாகி நின்றது வெறும் கம்பம் மட்டுமா, இல்லையில்லை... இந்தப் பாழ்பட்ட சமுதாயமும்தான் என்பதைக் கவிஞரைவிட வேறு யாரால் இப்படி தீர்க்கமாகச் சொல்லிவிட முடியும்..?

சென்னையிலிருந்த கவிஞர் தமிழ்ஒளியை 1962ஆம் ஆண்டில் காசநோய் பீடித்தது. உடல் நலம் பாதித்தபோதிலும், கடைசிவரை எழுதிக்கொண்டேயிருந்தார். கவிஞரெழுதிய கடைசிப் பாடலிது;

**'மண்ணில் முளைத்தவன் நான் - அதன்**

**மார்பில் திளைத்தவன் நான்!**

**எண்ணித் துணிந்துவிட்டேன் - இனி**

**எங்கும் பறந்து செல்வேன்'**

- என்ற பாட்டாளி வர்க்கத்துப் பொதுவுடைமைப் பாவலர் கவிஞர் தமிழ்ஒளி, 1965இல் மார்ச் 29 அன்று மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார். தமிழுக்கும், உழைக்கும் மக்களின் வியர்வை விடியலுக்கும் ஓயாது முழங்கிய பேரொளியான தமிழ்ஒளி, எங்கும் மறையவில்லை. இந்த மண்ணில், இந்த வையகத்தில் எங்கெங்குமாய் இன்னமும் பாடிப் பறந்துகொண்டேயிருக்கிறது.

- இன்னும் சொல்வேன்... ■

கவிஜி

# மரணத்தின் சுவடுகள்



## திரைப்படம் : Bird Box

"இனி நாம் செல்லும் பயணம் மிகக் கடுமையானது. நான் சொல்லும்வரை கண்களைத் திறக்கக்கூடாது. கண்களில் இருக்கும் கட்டை அவிழ்க்கக்கூடாது..."

மெலோரி தன் இரு குழந்தைகளோடு படகில் ஒரு நதியில் பயணிக்கிறாள். அதற்கு முன் அவள் தன் குழந்தைகளிடம் பேசும் வார்த்தைகள்தான் படத்தின் முதல் கியர். முதல் வரி. நுண்ணிய கூர்களின் தூரத்துத் தவிப்புகளைக் கொண்ட பயணத்துக்கு அடித்தளம்.

நதி என்றால்... அது ஆழமான காடுகளின் நடுவே ராட்சசக் கால்களில் மிதக்கும் மாபெரும் நீரின் தொகுப்பு.

அவர்கள் பயணிக்க ஆரம்பிக்கிறார்கள். நீரின் சப்தமும் காட்டின் நிசப்தமும் அவர்களின் உடலோடு உயிர் பிடித்து விளையாடுகிறது. மூவருமே கண்களைத் துணியால் கட்டி இருக்கிறார்கள். பால் பொங்கும் ஆற்றின் நுரைகளில் பரிதவிப்போடு மானுடப் பயங்கரங்கள் அசரீரியாய்க் கேட்கின்றன.

படகு முன்னோக்கி நகர... கதை பின்னோக்கி நகர்கிறது.

மெலோரி.. (நம்ம ஸ்பீட் நாயகி 'சாண்ரா புல்லக்') நிறைமாதக் கர்ப்பிணி. பரிசோதனைக்கு மருத்துவமனை செல்கிறாள். பரிசோதனை முடிந்து வெளியே வருகையில் ஒரு பெண் வெளியே சூனியத்தை வெறித்துக்கொண்டிருக்கிறாள். அவள் கண்களில் குரூரம் கொடூரமாய்க் கவ்வுகிறது. அவள் கண்களில் பச்சை வண்ண நரம்புகள் மடமடவென நிழல் படிகின்றன.

மெலோரிக்குத் தெரிந்துவிடுகிறது. எதுவோ சரியாக இல்லை. என்னவோ நடக்கப் போகிறது.

அவள் சொல்லவே சொல்லவே... அந்தப் பெண் அருகிலிருக்கும் கண்ணாடியில் தலையைப் பலமாக முட்டி முட்டி ரத்தம் சொட்டுகிறாள். மற்றவர் என்ன ஏதென்று சுதாரிப்பதற்குள் அதன் நீட்சியாக மேல் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்கிறாள். அதே கணம் அங்கிருந்து தப்பித்து மேலொரி தன் தோழியோடு வண்டியில் பயணிக்கிறாள். ஆனால் வண்டி ஓட்டிக்கொண்டிருக்கும் தோழி வண்டியைத் தாறுமாறாக ஓட்டுகிறாள். அவள், அந்த மேலிருந்து குதித்த பெண்ணின் கண்களைச் சற்று முன் உற்று நோக்கியதை மெலோரி புரிந்துகொள்கிறாள். வேண்டாம் வேண்டாம் என்று கத்த கத்தவே தோழி.. சூனியத்தை வெறித்துக்கொண்டே வண்டியை வேறொரு வண்டி மீது மோதிக் கவிழ்க்கிறாள். வண்டி தலை குப்புற விழுகிறது. அவர்களுக்கு உதவி செய்ய வருகிறாள்... அங்கே அருகே இருக்கும் ஒரு வீட்டிலிருக்கும் ஒரு பெண். அவளும் நொடியில் வெறித்துக்கொண்டே இந்த வண்டியைத் தாண்டி.. சற்று தள்ளி எரிந்துகொண்டிருக்கும் வண்டிக்குள் சென்று அமர்ந்து தன்னை எரித்துக்கொள்கிறாள்.

ஊரே பற்றி எரிகிறது. மாற்றி மாற்றிச் சுட்டுக்கொள்கிறார்கள். ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டு சாகிறார்கள். கண்களை நேர் கொண்டு கண்டால் கண்டவர் அடுத்த நொடியில் கொலையோ தற்கொலையோ செய்துகொள்கிறார். ஆங்காங்கே கூட்டுத் தற்கொலைகளும் நிகழ்கின்றன. கண்ணுக்குத் தெரியாத ஒன்று உலகை விரட்டுகிறது. அது காற்றில் சுழன்றுகொண்டே வருகிறது. அதை நேர் கொண்டு காண்போர் சடுதியில் அருகில் உள்ளோரைக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலைத்துக் கொள்கிறார்கள்.



தட்டுத்தடுமாறிச் செத்துப் பிழைத்து அழுது புரண்டு அப்போதைக்கு ஒரு வீட்டுக்குள் தஞ்சமடைகிறாள் மெலோரி. அங்கு இவளைப் போலவே தப்பித்த ஒரு பத்து பேர் கொண்ட கும்பல் அடைக்கலமாகி இருக்கிறது. விஷயம் ஓரளவுக்குத் தெளிவாகிவிடுகிறது. வெற்றிடத்தில் வெறும் கண்களால் எதையோ பார்த்தால் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் கண்களைப் பார்த்தால் அவர்கள் இந்தப் பாதிப்புக்கு ஆளாகிக் கொலையும் செய்துவிட்டுத் தற்கொலையும் செய்துகொள்கிறார்கள். ஆக வீட்டின் உள்ளே கதவுகள் அடைக்கப்பட்டு ஜன்னல்களை மூடிக் கண்ணாடிகளைப் பேப்பர் வைத்து மறைக்கிறார்கள்.

அவர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்கிறார்கள்.

இதற்கிடையே படகு நதியில் ஒரு நாளைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. இடையே கரையோரத்தில் இருந்து மனிதக் குரல் கேட்கிறது. நுட்பமான புள்ளியில் இருந்து எழும் குரலில் அத்துமீறும் அச்சுறுத்தல். அக்குரல் வழியே வழியும் மரணத்தை அவள் அறிவாள்.

“வாங்க... உங்களை நான் காப்பாத்தறேன்... வாங்க...” என்று தொடர்ந்து கேட்கிறது. காதிரையும் சப்தத்தில் சாவுக்குருவி அழைக்கிறது. சாகக் கிடக்கும் உயிர்கள் தனித்த சாவுக்குத் துணை தேடிப் பிசாசுகளாக அலையும். அதுதான் நடக்கிறது. கிட்டத்தட்ட ஜாம்பிகள் போலக் கொலைக்கும் தற்கொலைக்கும் அலைகின்றன. அதில் இருக்கும் ஆசுவாசத்துக்கு வெறி ஏறி இருக்கிறது. ஏற்கனவே அவளுக்கு அவர்கள் பற்றிய தெளிவு இருக்கிறது. கையிலிருக்கும் துப்பாக்கி கொண்டு கண்களைக் கட்டிக்கொண்டு கிட்டத்தட்ட ஐந்து வருட காலப் பயிற்சிகளை புல்லட்டுகளாய்ச் சிதறவிடுகிறாள். சாவுக்காரனை வீழ்த்துகிறாள்.

படகு பயணம் தொடர்கிறது.



பச்சை மரங்களின் மானுடப் பசி கிரீச் கிரீச் என்று அவர்களைச் சுற்றி நா நீட்டித் தவிக்கிறது. நதியின் கோட்டோவியம் அசைந்து கசிந்து ஆர்ப்பரித்து வெளியின் அகவலை அதிகமாக்குகிறது. மூடியிருக்கும் கண்கள் வழியாக இவ்வுலகை அவள் தரிசிக்கிறாள். பயணம் தொடர்கிறது. கண்களை மூடிய கட்டோடு அம்மாவின் முன்னால் படகைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருக்கும் குழந்தைகள்... சாவின் நெருக்கத்தை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இரவில் ஆளில்லாத கைவிடப்பட்ட ஏற்கனவே கொள்ளையடிக்கப்பட்ட கடைகளில் புகுந்து தேவையான பொருள்களை எடுக்கையில் இருக்கும் ஆனந்தம்.. படபடப்பு.. மானுட சாபம். இத்தனை காலம் சேர்த்து வைத்த எல்லாப் பரிணாமமும் பறிபோகும் இடம் இது.

இங்கே வீட்டில்... எல்லாரும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கிறார்கள். டாம்-ன் அன்பும் அரவணைப்பும் மெலோரிக்குத் தேவையாக இருக்கிறது. மெலோரிக்குப் பிரசவ வலி. அதே போல அவர்கள் கூட்டத்தில் இன்னொரு பெண்ணுக்கும் பிரசவ நேரம். ஒரே நேரத்தில் இருவருக்கும் குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தைகள் பிறந்த சந்தோஷ தருணங்கள் தீரும் முன்னே அந்தக் கூட்டத்தில் ஒருவனை "அது" பீடிக்கிறது. அவன் எப்படியோ வெளியே பார்த்திருக்கிறான். புத்தியில் அது ஏறிவிடுகிறது. அவன் கண்ணில் பட்டவர்களை எல்லாம் சுடுகிறான். அடித்துக் கொல்கிறான். ஜன்னலைத் திறந்துவிடுகிறான். அதன் பின் ஊழிக்காற்றுதான். ஆழிக்கூத்துதான். கிடைக்கும் மனிதர்கள் எல்லாருக்கும் சாவுதான்.

சாவின் விளிம்பிலிருந்து டாம், மெலோரி மற்றும் அந்த பிறந்த இரண்டு குழந்தைகள் மட்டுமே தப்பிக்கிறார்கள். அந்த இன்னொரு குழந்தையின் அம்மா... அவள்தான் நடந்து முடிந்த பலிகளில் முதல் பலி. பிறகு குழந்தைகளோடு டாமும் மேலோரியும் கண்களைக் கட்டிக்கொண்டே அங்கிருந்து தப்பித்து வேறொரு வீட்டில் பதுங்குகிறார்கள்.

ஐந்து வருடங்கள் கடந்துவிடுகின்றன. அதே வாழ்க்கைமுறைதான். ஆனாலும் "அது" விட்டபாடில்லை. கண்ணுக்குத் தெரியாத "அது" அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து காவு வாங்கக் காத்திருக்கிறது. அவர்களும் இருக்கும் சூழலுக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக்கொள்கிறார்கள். வெளியே செல்லும்போதெல்லாம் கண்களில் துணிதான். கண்களில் இருந்து துணி எடுக்க நேரிட்டால் சாக நேரிடும் என்பது தொடரும் விதி. பாதிக்கப்பட்ட மனிதன் நன்றாக இருக்கும் மனிதர்களைக் கொல்லும் வேலை தொடர்ந்து நடந்துகொண்டுதானிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத மனித வேட்டை அரங்கேறிக்கொண்டே இருக்கிறது. அதன்படி எங்கிருந்தோ வந்து நிற்கிறது ஒரு கார். டாம்க்கு நடக்கப்போகும் அசம்பாவிதம் தெரிந்துவிடுகிறது. தனக்கு என்ன ஆனாலும் உங்கள் பயணம் தொடர வேண்டும் என்று மெலோரியிடம் கட்டளையிடுகிறான். அவன் அவளை ஆழமாக நேசிக்கிறான். நடக்கும் ஒரு தாக்குதலில்... அதே போல டாம் சாக நேரிடுகிறது. எல்லாரையும் சுட்டு விட்டுத் தப்பிக்க முயற்சிக்கையில் "அது" வந்துவிடுகிறது. "அதை" நேருக்கு நேர் பார்த்துவிடுகிறான். அவன் கண்கள் பச்சை பூத்து நரம்பு சுருள ஆரம்பிக்கிறது. கண நேரத்தில் கழுத்தில் சுட்டுக்கொண்டு செத்துப்போகிறான்.

அதன் பிறகு... நிலைமையைப் புரிந்துகொண்டு குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஏற்கனவே போட்ட

திட்டத்தின்படி.. டாம் இல்லாமலே படகு பயணம் மேற்கொள்கிறாள். இதுதான் படத்தின் முதல் காட்சி.

பயணம் ஆரம்பித்து இரண்டு நாட்கள் முடியும் சமயத்தில் ஆற்றின் வேகம் அதிகரிக்கிறது.

ஒரு வளைவில் கல்லில் மோதி படகு கவிழ்ந்துவிடுகிறது. ஆற்றில் தளுதளுக்கிறாள் அவள். குழந்தைகள் ஆளுக்கொரு பக்கமாகச் சிதறிவிடுகிறார்கள். ஆனாலும் கண் கட்டை அவிழ்க்கக்கூடாது. ஆறு பேயாட்டம் ஆடுகிறது. ஆர்ப்பரிப்பில் சாவு மணி. யாருமற்றபோது நெடு மரங்களில் முகம் இருக்கும். அசைவில் கழுத்திருகிய கனத்த குரல் இருக்கும். எப்படியும் தப்பிக்க வேண்டும். பையனின் குரல் வழியே நீந்தி நீந்தி அவனைப் பிடிக்கிறாள். பெண் குழந்தை அடித்து வீசப்பட்டதில் கரை ஒதுங்கிக்கிடக்கிறது. கையில் இருக்கும் மணியை அடித்து ஒலி எழுப்பித் தன் இருப்பை காட்டிக் கொடுக்க... குழந்தையைக் கண்டுபிடித்துவிடுகிறாள். இருவரையும் அணைத்துக்கொண்டு உடல் நடுங்க நிற்கும் ஒரு தாயின் தவம் அங்கே அதிரும். இந்தப் படத்தின் மிக அற்புதமான காட்சி ஈரம் சொட்ட உயிர் நடுங்க நிற்கும் அந்த முக்கோண அரவணைப்பு. கண்களற்ற உலகில் உணருதலெல்லாம் காட்சிகள்தான். பிறகு காட்டுக்குள் தடவித் தடவி நடக்கிறார்கள். ஆனால் காதுக்குள் எதுவோ இரைகிறது. "அது" விரட்ட ஆரம்பிக்கிறது. காற்றில் இலைகள் கொப்பளிக்கத் தொடங்குகிறது. பழுத்த இலைகளின் குதிப்பு.... காற்றில் முகமற்ற ஒரு அணைத்தல். கண்கள் திறந்திருக்கும் காடு.. ஆவென எல்லாம் திறந்து கிடக்கிறது. கண்களைக் கட்டிக்கொண்ட பயம் அசாதாரணமாக அங்கும் இங்கும் அலைகிறது. "அது" காதில் இரைச்சல் ஏற்படுத்தி அவர்களைச் சுற்றிச் சுழலுகையில்.... அதிர்ந்த உருவத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

அப்போது.. படத்தின் இறுதிக் காட்சி அங்கே ஓர் ஆச்சரியத்தைத் திறக்கிறது. யாரின் மூலம் இந்த உலகுக்கு விடியல் என்பது மெல்ல வெளிச்சத்துக்கு வருகிறது. இருட்டு தன் ஆதிக்கத்தைக் கை கழுவுகிறது.

படம் நெடுக குழந்தைகளுக்குப் பெயர்கள் இல்லை. பாய் கேர்ள் தான். அதற்கான சந்தர்ப்பம் கடந்த ஐந்து வருடங்களில் இல்லவே இல்லை. இதில் எந்தக் குழந்தை மெலோரி குழந்தை எது அந்த இறந்துபோன பெண்ணின் குழந்தை என்று நமக்கு எப்போதுமே சொல்வதில்லை. ஒரே ஒரு காட்சியில்... உள்ளம் ஒடுங்கி பயம் நிறைந்த முகத்தோடு பாவமாய் கண்கள் மிரள தன்னைப் பார்க்கும் பெண் குழந்தையைப் பார்க்கையில்.. தன்னோடு பிரசவித்து "அது" பிடித்து இறந்துபோன பெண்ணின் முகம் வந்து போகிறது மேலோரிக்கு. அவ்ளோதான்.

அவள் பெயரையே அந்தக் குழந்தைக்குச் சூட்டுகிறாள். டாம் பெயரைப் பையனுக்குச் சூட்டுகிறாள். மரணத்தின் சுவடுகள் பெயர்களாகின்றன.

படம் நெடுக இவர்களோடு மூன்று பறவைகள் இருக்கும் கூண்டு ஒன்றும் பயணிக்கிறது. இறுதியில்.. அந்தக் கூண்டு திறந்து பறவைகள் மரங்களுக்குத் தாவுகின்றன. விடுதலை என்பது எங்கும் வியாபித்திருக்கும் இயல்பல்ல. அது தனித்த உணருதல்.

ஏதேதோ படத்தைத் தேடப் போய்ச் சம்பந்தமே இல்லாமல் (கூகுள் அண்ணாச்சியின் கண்காணிப்பாகவும் இருக்கலாம்) இந்தப் படத்தைப் பார்க்க நேரிட்டது. படம் அப்படியே இன்றைய வாழ்வின் நகல் போல இருக்க.. மிகவும் பயந்துதான் பார்க்க முடிந்தது.

பயணிக்கத் தொடங்கியவனுக்குப் பாதைகள் பற்றிய கவலைகள் கூடாது. நிர்பந்தித்துக்கொண்ட காரணங்கள் எல்லாவற்றுக்கும் வேண்டுமா என்ன...

இப்போதைக்கு "அது"விடம் இருந்து தப்பிக்க வேண்டும். அவ்வளவே...!

**திரைப்படம் : பேர்ட் பாக்ஸ்**
**இயக்குநர் : Susanne Bier**
**ஆண்டு : 2018**
**மொழி : ஆங்கிலம்**

● ஜின்னா அஸ்மி

# பொய்கள் பற்றிய உண்மைகள்

பொய்யைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கையில்
அவன் தோன்றினான்

பொய்களுக்கென்று எந்தத் தோற்றமும் இல்லை...
ஒரு உண்மை மறைக்கப்பட்ட நிலையைத்தான்
பொய்கள் எனப் பொய் சொல்கிறோம்... என்றான்.

எல்லா மொழியிலும் பொய்கள்
பொய்களாகவே இருக்கிறது.... தெரியுமா

உண்மையாகச் சொன்னால்
பொய்களுக்கு எந்த உண்மையும் தெரியாது.... என்றான்

பொய் சொல்லுவது தவறானது
பொய்யைப் புகழாதே என்றேன்.

அவனோ
சொல்வதெல்லாம் உண்மை...
உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை
என்று சொல்லும் நீதிமன்றங்களிலும் கூட
சில சாட்சிகளே முடிவு செய்கின்றன...
பொய்களை உண்மையெனவும்
உண்மையைப் பொய்களெனவும்...


சில நேரங்களில் நமக்குத் தெரியாமல்
உண்மை பேசி விடுவதைப் போல
அவ்வளவு எளிதாகப் பொய் பேசிவிட முடியாது...
சுயநினைவுடன் நமக்குத் தெரிந்து மட்டுமே
பேச முடியும் இந்தப் பொய்களை...
அந்த விசயத்தில்
பொய்கள் உண்மையுடன்
நடந்துகொள்கிறது.... என்றான்

நாம் தப்பித்துக்கொள்ளும்போது
பொய்கள் மாட்டிக்கொள்கிறது
நாம் மாட்டிக்கொள்ளும்போது
பொய்கள் தப்பித்துக்கொள்கிறது.... தெரியுமா என்றான்

பொய்களிடத்திலும் நேர்மை இருக்கிறது...
குழந்தைகளிடம் பொய்கள்
பொய் சொன்னதே இல்லைதான் என்றேன்

உறக்கத்தில் காண்பது எதுவும்
உண்மை இல்லையென
கனவுகள் வழியாகப் பொய்களை
காட்சிப்படுத்தியதே கடவுள்தான்...
ஆனாலும்
நாம் சொல்லும் பொய்களிலேயே
சூட்சமம் வைத்திருக்கிறான்
சொர்க்கம் நரகத்தை முடிவு செய்ய....
என்று மறைந்தான் ■

● கோ.லீலா



# தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து – பறை

## பறையும் இறையும்

பறையின் ஒலி 5 கி.மீ. முதல் 11 கி.மீட்டர் வரையில் கேட்கும் என்பதற்குச் சான்றாக... திருச்செந்தூரில் கோயில் பூசை முடிந்ததைப் பறையறைந்து பாஞ்சாலங்குறிச்சி வரை தெரிவித்துள்ளனர். அச்செய்தியைக் கேட்ட பின்பே கட்டபொம்மன் உணவு உட்கொண்டிருக்கிறார்.

அதுபோன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குப் பூசை முடிந்த பின்பே மதுரையில் திருமலைநாயக்கர் செய்தி அறிந்து உணவு கொண்டார் என்ற செய்தி மன்னர்கள் ஆட்சியில் பறையொலியின் பயண தூரத்தை மற்றும் பறையொலி முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதைக் காட்டுவனவாகும்.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் நடைபெறும் திருக்கொடி ஏற்றும் நாளில் பறை முழக்க நிகழ்ச்சி, முக்கியமான நிகழ்வாகும். இப்பறை முழக்கும் நிகழ்வுக்கு 'திருப்பறையறைவு' எனப் பெயர் வழங்கப்பட்டது. இப்பறை இசைக்கும் நிகழ்வுக்குப் பிறகுதான் திருவிழா நடைபெறும்.

●●

## வாழ்வியலில் பறை

பெருகிவரும் புனலை அடைக்க, உழவர் மக்களை அழைக்க, போர்க்கெழுமாறு வீரர்களை அணிதிரட்ட, வெற்றி தோல்வியை அறிவிக்க, வயல்களில் உழவு வேலை செய்வோருக்கு ஊக்கமளிக்க, விதைக்க, அறுவடை செய்ய, காடுகளில் விலங்குகளை விரட்ட, மன்னரின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க, இயற்கை வழிபாட்டில், கூத்துக்களில், விழாக்களில், இறப்பில் என வாழ்வியல் கூறுகளுடன் இணைந்து இயங்கியுள்ளது 'பறை'.

●●

## இலக்கியத்தில் பறை

*"பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை" - புறநானூறு 335.7-8.*

துடிகொட்டுபவன், யாழ் மீட்டுவோன், பறையறைபவன், வெறியாடுபவன் ஆகிய கலைஞர்களைக் காட்டிலும் சிறந்த குடிகள் இல்லை என்று கூறி அவர்களைப் புகழ்ந்துரைக்கிறார் மாங்குடி கிழார் எனும் புலவர்.

••

## தொல்காப்பியத்தில் பறை

தொல்காப்பியத்தில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற முப்பிரிவுகளில் கருப்பொருள்களுள் ஒன்றாகப் பறை குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது.

தெய்வ முணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப [5]

இங்கு தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள். ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ். மற்றொன்று பறை.

••

## திருப்பாவையும் திருப்பறையும்

திருப்பாவையில் "பறை" எங்கெல்லாம் வருகிறது? மொத்தம் 11 இடங்களில் வருகிறது.

*1.நமக்கே "பறை" தருவான் (தி:1 - மார்கழித் திங்கள்)*

*2. பாவாய் எழுந்திராய், பாடிப் "பறை" கொண்டு (தி:8 - கீழ்வானம் வெள்ளென்று)*

*3. போற்றப் "பறை" தரும் புண்ணியனால் (தி:10 - நோற்றுச் சுவர்க்கம்)*

*4. அறை "பறை" மாயன் மணிவண்ணன் (தி:16 - நாயகனாய் நின்று)*

*5. வேல் போற்றி! உன் சேவகமே ஏத்திப் "பறை" கொள்வாம் (தி:24 - அன்று இவ்வுலகம்)*

*6. உன்னை அருத்தித்து வந்தோம் "பறை" தருதியாகில் (தி:25 - ஒருத்தி மகனாய்)*

*7. சாலப்பெரும் "பறை"யே பல்லாண்டு இசைப்பாரே (தி:26 - மாலே மணிவண்ணா)*

*8. பாடிப் "பறை"கொண்டு யாம்பெறும் சம்மானம் (தி:27 - கூடாரை வெல்லும்சீர்)*

*9. இறைவா நீ தாராய் "பறை"யேலோ ரெம்பாவாய் (தி:28 - கறவைகள் பின்சென்று)*

*10. இற்றைப் "பறை" கொள்வான், அன்று காண்!*

*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு (தி:29 - சிற்றஞ் சிறுகாலே)*

*11. அங்கு அப்"பறை" கொண்ட ஆற்றை,*

*பட்டர்பிரான் கோதை சொன்ன- (தி:30 - வங்கக் கடல்கடைந்த)*

*ஓர்த்தது இசைக்கும் பறை (கலி. 92:21, பழ.37:4)*

*இன்னிசைப் பறையொடு வென்றி நுவல (புற. 225:10)*

*பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்*

*கல்யாணம் செய்து கடிப்புக்க... (நாலடியார் 86)*





எம்போல் அறைபறை கன்னாரகத்து (குறள்:1180)

அறைபறை யெழுந்ததால் (சிலப்:3.25:194)

அறைபறை யெழுந்தபின் (சிலப்.: 3.26:1)

அறைபறை என்றன அரசர் கோமான் (கம்ப.பால.290:4)

அறைபறை நின்று மோதிட (திருப்புகழ்.774)

வஞ்சிக் காண்டத்துக் காட்சிக் காதை குறிக்கின்றது..

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை

ஊழிதொறூழி யுலகங் காக்கென

விற்றலைக் கொண்ட வியன்பேரிமயத்தோர்

கற்கொண்டு பெயருமெங் காவலன் ஆதலின்

வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்

இடுதிறை கொடுவந் தெதிரீ ராயின்

கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்

கேட்டு வாழுமின் கேளீராயின்

தோட்டுணை துறக்கும் அறிவொரு வாழுமின்

தாழ்கழல் மன்னன் தன்திரு மேனி

வாழ்க சேனாமுகம்.

இப்பெரும் செய்தியைப் பறையிசை வடிவில் கடத்தி இருப்பது, தமிழர்தம் இசை பண்பாட்டுக்கும், நுட்பத்திற்கும் சான்றாகும்.

●●

**சிற்பங்களில் பறை**

கூத்தும் பறையும் சேர்ந்தே வளர்ந்ததற்கான ஆதாரமாகவும், ராஜ வாத்தியமாகப் பறை இருந்ததற்கான சான்றாகவும் விளங்குகிறது திருக்குறுங்குடி நம்பி கோயில் சிற்பம்.

சென்னை வடதிருமுல்லைவாயில் பதினாறு கால் மண்டபத் தூணில் ஒரு பறையிசைச் சிற்பம். இது மிகவும் அரிய சிற்பம் என்று தென்னன் மெயம்மன் ஐயா அவர்கள் கூறியுள்ளார்.

மேற்கண்ட பறையிசையில் கைக்குச்சி இல்லை. ஆனால், வடதிருமுல்லைவாயில்

கோயில் சிற்பத்தில் பறையடிக்கும் பறையரின் இரு கையிலும் குச்சிகளுள்ளன...!

நன்றி : தமிழர்நாடு தகவல் திரட்டு

●●

## திணையும் பறையும்

செய்தித் தொடர்பு முறையைப் 'பறை' எனவும் தொல்காப்பியர் குறித்தார். இதன்படி ஒவ்வொரு நிலத்திற்கும் செய்தி தெரிவிக்கும் தனிப்பறை உண்டு.

குறிஞ்சிக்கு : தொண்டகச் சிறுபறை

முல்லைக்கு : ஏறங்கோட்பறை

மருதத்திற்கு : தண்ணுமை

நெய்தலிற்கு : மீன்கோட்பறை

பாலைக்கு : ஆறெறிபறை

●●

## உலக நாடுகளில் பறை

மனிதகுல வரலாற்றில் முதன்முதலில் கண்டறியப்பட்ட இசைக்கருவி அல்லது இசைக்கருவிகளில் தோற்கருவி 'பறை' என அறிஞர்களால் சுட்டப்படுகிறது. ஆங்கிலத்தில் 'Draus' என அறியப்படும் 'பறைகள்' புதிய கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் (கி.மு 5500 - 2350) சீன நாட்டில் உடும்புத் தோலில் உருவாக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது (இணைய தளப்பதிவு, பார்வை: 'Drums').

ஆப்பிரிக்கக் காடுகளில் - 'கலைபலோபோன்'

இந்தோனேஷியாவில் - 'கம்பாங்க்' 'முரவ'

வங்கதேசத்தில் - 'கோல்'

எகிப்தில் - 'நிம்பிட்டு'

இலங்கையில் - 'தம்மிதெம்மா'

ஈசாப் கதைகளில் - 'கூஜா அல்லது ஹிந்ராஹி'

நைஜீரியாவில் - 'இகோலா'

மத்திய ஆப்பிரிக்காவில் - 'லோாங்க் குண்டோ'

இந்தப் பறைகளின் பெயர்கள் சைத்தன்ய தேவ, மு.வளர்மதி ஆகியோரின் நூல்களிலிருந்து திரட்டப்பட்டவை. இவை பெரும்பாலும் வேட்டைச் சமூகத்திலும், வேளாண் சமூகத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

குறிப்பாக, மத்திய ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் 'தும்பா மக்களின் பறைமொழி' என்ற கட்டுரையை எழுதியுள்ள ரோஜர் டி கிளார்க் என்பவர், பறையானது செய்திப் பரிமாற்றம் செய்துகொள்ளப் பயன்படுவதால் பேசும் பறை என்றழைப்பது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார் (வளர்மதி. மு. 2009 : 97-102).

●●

## இந்தியாவில் பறை

ஆந்திராவில் 'ரோன்ஸ்', 'டோல்', 'புர்ர', 'சூரியப்பறை' , 'சந்திரப்பறை' என்ற





பறை வகைகள் உள்ளன. அந்த 'ரோன்ஸ்' என்ற பறை செங்குத்தலான வடிவில் பயன்படுத்தப்படுகிறது.

கர்நாடகத்தில் பழங்குடிகள் 'டாபா' என்ற பறை வகையைப் பயன்படுத்துகின்றனர். நாம் இங்கே பயன்படுத்தும் 'தப்பட்டை' என்ற பறையைப் போலவே 'ஹாலிகே' என்ற பறை கர்நாடகத்தில் இசைக்கப்படுகிறது.

கேரளாவில் 'செண்டை', 'துடி', 'இடக்கா' என்ற பறை வகைகள் நாட்டுப்புற இசை நடனங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

ராஜஸ்தானில் 'கேரோ', 'நிஸ்ஸான்', 'பாபுஜிகிமாதே' என்ற பறை வகைகள் உள்ளன.

காஷ்மீரில் பெரிய கூம்பு வடிவிலான 'தும்பத்னாரி' என்ற பறையும், கோவாவில் உடும்புத் தோலால் ஆன 'குமட' என்ற பறையும், அஸ்ஸாமில் 'கர்ரம்' என்ற 'மரப்பறை'யும் பயன்படுத்தப்படுகின்றன.

வங்காளத்தில் 'ஸ்ரீகோல்' , ஒரிசாவில் 'செங்கு', மணிப்பூரில் 'புல்' என்ற 'பறை' வகைகளையும் மக்கள் இசைத்து வருகின்றனர்.

இந்தியாவில் உள்ள சுமார் 427 பழங்குடியினக் குழுக்களில் 63 விழுக்காடு மக்கள் தங்களின் வாழ்க்கையில் ஆடல், பாடல், செய்தித் தொடர்பு போன்றவற்றிற்குப் 'பறையைப் பயன்படுத்துகின்றனர்.

••

## தற்காலப் பறையிசையின் நிலை:

*Dr. zoe c. sherinian* அவர்களிடம் *why you are so interested in parai?* என்ற கேள்விக்கு அவரின் பதில்: *it makes me dance.* இதுதான் ஒரு இசைக்கருவியின் உச்சபட்ச சிறப்பு.

பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து; தோலிசைக் கருவிகளின் தாய்; தமிழினத்தின் தொன்மையான அடையாளம்; உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம்; தமிழர் வாழ்வியலின் முகம்; ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டுச் சின்னம்; கற்காலத்தின் முதல் தகவல் தொடர்புச் சாதனம்; இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல்.. இசையறிவை விளக்கும் இக்கருவி தாழ்ந்து வீழ்ந்தது எப்படி? ஒரே பதில் சாதி.

ஒடுக்கப்பட்ட மக்கள் நிலத்தோடும், உற்பத்தி உறவுகளோடும் தொடர்புடைய உழைக்கும் மக்கள் என்பதை ஏற்றுக்கொண்டால், அவர்கள் இசைக் குடிகள் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில், உழைக்கும் மக்களிடமிருந்துதான் இசையும், கலையும், இலக்கியமும் பிறக்கின்றன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொல்வது போல்...

''இன்னும் செல்லாது பிறர் செய்யும் சூழ்ச்சிகள் என்று சொல்லி புயம் தட்டு – அட யானையின் மேல் வள்ளுவா சென்று நீ பறை கொட்டு கொட்டு கொட்டு..'' – என்பதையும்,

பாரதிதாசனின் கண்மணித் திரளில்..


''நான்கு கோடி தமிழர் பட்டாளம் நாட்டை மீட்க கிளம்பிற்றுக் கண்டால் தீங்கு செய்யும் வடவறின் ஆட்டம் செல்லாது என்று கொட்டு வெற்றிப்பறை..''

என்பதையும் கருத்தில் கொண்டு தமிழிசையின் ஆதித்தாயை மீண்டும் இசைப்போம்.

பறை ஓர் இழிநிலைக் கருவியல்ல; மாறாக இசையறிவை விளக்கும் ஒரு தொன்மையான இசைக் கருவி.

தமிழிசை அதிரட்டும் புவியெங்கும். ■

● தங்கேஸ்
● ஓவியங்கள் : அன்பழகன்



# யாழினி

நித்யகல்யாணி பூப்போல பளிச்சென்று துலங்கி நின்றாள் யாழினி பாப்பா. தேன் ததும்பிய வண்ணத்துப்பூச்சியின் கனிந்த கொடுக்கைப் போல ஒரு பூரண மோனம் அவள் பிரசன்னம் முழுவதும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. உதடுகளில் பன்னீர் தெளித்த கொழுந்து வெற்றிலை போன்ற புன்னகை தளுதளும்பி நின்றது.

நான் மடியில் வைத்துக் கர்மசிரத்தையாகப் பார்த்துக்கொண்டிருந்த பைலை அலட்சியமாகத் தன் குட்டிக்கரங்களால் தட்டி விட்டுவிட்டு அந்த இடத்தை அவள் பிடித்துக்கொண்டாள்.

நான் அவளைக் கவனியாமல் இருப்பது போல் பைலைப் புரட்டிக்கொண்டிருந்தேன். அப்படி செய்யவில்லையென்றால் இந்த பைலில் புள்ளி விவரங்களைத் தாங்கியிருக்கும் காகிதங்களெல்லாம் இன்னும் சிறிது நேரத்தில் அவளின் பேப்பர் குருவிகளாகத் தரையெல்லாம் சிதறிக்கிடக்கும்.

நாளை காலை கஸ்டமர் மீட்டிங்கில் நான் ஒருவித முன் தயாரிப்புமின்றி அவர்களின் கேள்விகளுக்கெல்லாம் தேமே தேமே என்று விழித்துக்கொண்டு அப்பாவியாக பிஎம்மைப் பார்க்க வேண்டும். எல்லாம் சென்ற பிறகு ஸ்டாப் ரெவ்யூ மீட்டிங்கில்

'இது குளோபல் பேங்கா இல்லை புண்ணாக்கு குடோனா' என்று அவர் தயவு தாட்சண்யம் பார்க்காமல் வறுத்தெடுப்பதைப் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும். .

இழுத்து மடியில் கிடத்திக் கொள்வேன் என்று நினைத்தவள் அவளைக் கவனியாது நான் பைலைத் தயாரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் நேரடியாகவே தாக்குதலை ஆரம்பித்துவிட்டாள்.

'பிங்கி பிங்கி பாங்கி பாதர் ஒரு டாங்கி..'

குட்டி ராட்சசி இவளை இப்படியே விட்டால் அத்தனை வேலைகளையும் கெடுத்துவிடுவாள் என்று தெரியும்.. எப்படியாவது அவளிடமிருந்து இந்த பைலைக் காப்பாற்ற பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்குமே என்று நினைத்தபடியே, 'பாப்பா அப்பா பைல் பார்க்கணும்ல..' என்று ஆரம்பித்தேன்.

'பைலைப் பார்க்க வேண்டாம்.. பாப்பாவைப் பாரு..' என்றாள்.

'அப்போ பைலை என்ன பண்றது?'

'பைலைத் தூக்கிக் குப்பைக் கூடையில போட்டுறலாம்..'

எனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் 'இல்லை இல்லை பாப்பாவைத் தூக்கிக் குப்பைக் கூடையில போட்டுறலாமே..' என்றேன்.

உடனே அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. எப்பொழுது கோபம் வந்தாலும் அவள் எதிர்வினை ஒரே மாதிரியாகவேதான் இருக்கும் என்று தெரியும்.

தன் குளிர்ந்த தளிர் போன்ற விரல்களால் என் தலையில் சரமாரியாகக் குட்டினாள். அங்கே நாலைந்து செவ்வரளிக் கன்றுகள் முளைவிட ஆரம்பித்தன.. அடுத்ததாகக் கைகளை இலேசாகத் தேய்த்தபடி விசை கொண்ட மட்டும் என் மீசையைப் பிடித்து இழுத்து முறுக்கினாள். என் தலை ஒரு கன்றுக்குட்டி போல அவள் விரல்களின் பின்னோடே சென்றது.

'ஆஆ வலிக்குதே' என்று நான் கத்த வேண்டுமென்று எதிர்பார்த்தவள் நான் சும்மா சிரித்துக்கொண்டேயிருக்கவே வேகமாகத் தனது தாக்குதலைத் தொடர்ந்தாள்.

சட்டென்று ஞாபகம் வந்தவனாக 'அய்யோ பாப்பா விட்டுரு. அப்பாக்கு வலிக்குதே..' என்று கெஞ்சினேன்.

ஒரு கணத்தில் கோபம் தணிந்தவள் 'சரி பாப்பாவைத் தூக்கி மேல சுத்து..'என்றாள்.

வழக்கமாக அவள் இது போல் அடம் பிடிக்கும் சமயங்களில் அவளைத் தலைக்கு மேலே தூக்கி சிறு கிறு கிறு வண்ணம் சுற்றி இறக்கிவிட்டு விட்டால், இலேசான கிறு கிறுப்பில் நான்கைந்து முறை தள்ளாட்டம் போட்டு பொத்தென்று ஒரு பூக்குவியலைப் போல அப்படியே தரையில் சாய்வாள். உடனே எழுந்திருக்கவும் மாட்டாள். அப்படியே மூச்சிரைத்தபடி தரையிலேயே சிறிது நேரம் கிடப்பாள். பிறகு தலையை உயர்த்தி நம்மைப் பார்த்து ஒரு மந்தகாசச் சிரிப்பு சிரிப்பாள் பாருங்கள்...

அவ்வளவுதான் கர்வமாய் அமர்ந்திருக்கும் அவள் காலடியில் இந்தப் பிரபஞ்சம் குட்டி போட்ட பூனை போலக் குழைந்து குழைந்து சுழன்றாட ஆரம்பித்துவிடும். இதைப் பார்த்ததும் நமக்கு என்ன தோன்றும் சொல்லுங்கள்? கை கூப்பி வணங்கத் தோன்றாதா? வேறு என்ன செய்வீர்கள்? தெய்வங்களெல்லாம் குழந்தைகளிடம் தானே புடம் போட்டு அமர்ந்துகொண்டு நம்மை அனுக்கிரகிக்கின்றன.

சரி அப்படியே தெய்வீகத்தில்தான் திளைத்துவிட முடிகிறதா? பாழும் வயிறு என்று ஒன்றிருக்கிறது. பார்க்க வேண்டிய பைல்கள் மலை மலையாகக் குவிந்திருக்கின்றன. வார விற்பனை அறிக்கை வேறு என்னைத் தயார் செய் என்று இரு கை நீட்டி கூப்பிக் கொண்டிருக்கிறது. வண்டி வண்டியாய்த் தயார் செய்யப்பட்ட புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கூட்டத்தில் கொட்ட வேண்டும்.

'பாரு பாப்பா அப்பாக்கு வேலை இருக்கு..' என்று பேச்சை மாற்றினேன்.

பாப்பா அதையெல்லாம் காதிலேயே வாங்காமல் 'பாப்பாக்குப் புய்க்கும்' என்றாள்.

'என்ன பிடிக்கும்?'

'அப்பாவைப் புய்க்கும்..'

'அம்மாவை?'

'அம்மாவைப் புய்க்காது'

'ஏய் பாப்பாக் குட்டி பொய்தானே?' என்று அவள் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாகக் கிள்ளியபடியே கேட்டேன். அம்மா இல்லாத நேரங்களில் அவள் அப்படித்தான் சொல்வாள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

வாய் கொள்ளாப் புன்னகையுடன்'பாப்பாக்கு வலிக்கல்லே' என்று சொல்லிவிட்டு மறுபடியும் அதையே ராகமாவே பாடினாள். நான் அவளை எடுத்து முத்தத்தால் மொத்திக்கொண்டேயிருந்தேன்.

குட்டி ராட்சசி எப்போழுதுமே இப்படித்தான் பேசுவாள்.

அம்மாவிடம் அப்பாவையும் அப்பாவிடம் அம்மாவையும் 'புய்க்காது' என்று சொல்லிக் கன்னத்தைப் பிடித்து முத்தங்கள் அத்தனையையும் மொத்தமாகக் கொள்ளை கொண்டு போய்விடுவாள்.

அவள் புராணங்களைச் சொல்லச் சொன்னால் இன்றெல்லாம் சொல்லி மாளாது.

ஒருநாள் இருவருமே ஒன்றாக உட்கார்ந்து 'பாப்பாக்கு யாரைப் பிடிக்கும்? ம் சொல்லு' என்று கேட்டோம். இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள் என்ன நினைத்தாளோ ஆளுக்கொரு முத்தத்தைப் பரிசாகக் கொடுத்துவிட்டுச் சிட்டாகப் பறந்து போய்விட்டாள். அடுத்து எங்கே போய் அவளைப் பிடிப்பது?

இப்படித்தான் ஒருமுறை அவள் அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு 'வேணுமா உனக்கு வேணுமா?'' என்று செல்லமாகக் கன்னத்தைக் கொஞ்சியபடி கேட்டாள்.

'என்ன வேணுமான்னு கேட்கிற குட்டிம்மா?' என்றாள் இவள்

'ம்ம் உதை வேணுமான்னு கேட்கிறேன்..' என்று சொல்லியபடி குட்டிம்மா தன் குட்டிக்கையால் அம்மாவின் கன்னத்தில் ஒரு தட்டு தட்டினாள். பிறகு இன்னொன்று. பிறகு மடமடவென்று ஒன்றிரண்டு.

கொஞ்சம் அசடு வழிந்தபடியே இவள் 'யாருடி உனக்கு இதெல்லாம் சொல்லிக் கொடுக்கிறது?' என்று கேட்டாள்.

'பாப்பாக்கே எல்லாம் தெரியும்..' என்று இரு கைகளையும் அகலமாக விரித்துச் சொன்னவள், நேராக என்னிடம் வந்து 'உனக்கும் ஒண்ணு குடுக்கறேன்' என்றபடி நான் சற்றும் எதிர்பாராத நேரத்தில் என் இரு காதுகளையும் பிடித்தபடி நெற்றியோடு நெற்றி சேர்த்து ஒரு முட்டு முட்டினாள். அய்யோ



அவளுக்கு வலிக்கப்போகிறதே என்று நான் கவலைப்படும் முன்பாகவே சிட்டாகப் பறந்திருந்தாள்.

சற்று நேரத்திலெல்லாம் பாப்பா என் மடியில் ஹாயாகப் படுத்துப் புரண்டுகொண்டு ஒரு தும்பியின் ரீங்காரம் போல ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தபடியே இருந்தாள். அலுவலகப் பைல் சவலைப்பிள்ளையாகக் கேட்பாரற்று அருகில் கிடந்தது.

இவளை மடியில் கிடத்திக்கொண்டால் போதும் யாருக்கும் அன்பின் பித்து தலைக்கு ஏறி அதைக் கிறுகிறுப்பாக்கி விடும்.



இலேசாகக் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. மயக்கம் போல ஒரு தெளிவற்ற நிலையில் எல்லாம் மங்கலாகத் தெரிவது போல் இருந்தது.

புதுவெள்ளச் சுழலில் சிக்கிச் சுழலும் இளஞ்சருகாகக் கரகரவென்று மனது சுழன்று அமிழ்ந்துகொண்டிருந்தது.

நாட்கள் பைலைப் போல படபடவென்று காற்றில் அடித்துக்கொள்கின்றன. காலம் அப்படியே சுற்றிச் சுழன்று கண நேரத்தில் சுருண்டுவிட்டது. என் நெற்றிப் பொட்டில் சுருண்டிருந்த காலத்தைப் பாப்பா தன் சிறுநகத்தால் கீறி கீறிப்பார்த்தாள். பிறகு கைகள் ஓய்ந்து மடியில் அப்படியே கிடந்தாள்.

தூக்கத்திற்கான சமிஞ்ஞைகள் அவள் முகத்தில் தென்பட ஆரம்பித்தன.

சிறிது நேரத்திலேயே சிறகடிக்க மனமில்லாத குறு குறு வண்ணத்துப்பூச்சி போல இமைகள் படபடவென அடித்துக்கொண்டன. தூக்கம் வசீகரமிக்க ஒரு குட்டி ரோஜா மொக்கைப்போல மாறி அவள் இமைகளை மிக மென்மையாக நீவிவிட்டது.

ஏ தூக்கமென்னும் நித்திய தேவதையே! உன்னை இந்தக் குட்டி தேவி ஆசீர்வதித்துவிட்டாள். போ உன் சாபம் இன்றோடு தீர்ந்துவிட்டது. இனி நீ மீட்சிமை அடைவாய்.

நான் ஜென்ம சாபல்யம் பெற வேண்டும். அவள் உதடுகளில் ஒரு மாசற்ற புன்னகை அரும்பி நிற்கிறது - என் கண்களின் மீது மயிலிறகு போன்ற ஒற்றை விரலால் நீவிவிடுகிறாள்.

விழிகளுக்குள் அண்டங்கள் பிரபஞ்சங்கள் சுழல ஆரம்பிக்கின்றன. இருளின் தரிசனம், ஒளியின் விஸ்வரூபம், காலநதியின் பொங்கிப் பிரவகிக்கும் பிரவாகம் கோடி கோடி மனித உயிர்கள் அதன் மீது அரசிலை போல மிதந்து போகும் ஜாலங்கள் கண்ணுக்குள் காட்சிகளாக விரிகின்றன. அதில் நானும் என் மனைவியும் இலைகளாக மிதந்து போகிறோம். எத்தனை காலம் பயணம் செய்தோமோ? இனி எத்தனை காலம் பயணிக்க வேண்டுமோ?

அம்மை எங்களைப் புனிதமான விரல்களால் தொட்டு ஆசீர்வதிக்கிறாள். புல் பூண்டுகள் காடு மலைகள் ஈசல்கள் மலர்கள் விலங்குகள் ஒவ்வொன்றும் அவளின் திருவிரல் தீண்டலுக்குக் கை கூப்பித் தலை சாய்த்துத் தெண்டலிடுகின்றன. கண்களில் பரவசக் கண்ணீர் அருவியாய்ச் சொரிகின்றது. நதியாய் நெக்குருகிப் பயணம் தொடர்கிறது. முடிவற்ற பயணம் இது.

சகலமும் இங்கே பெண்ணால்தான் நடப்பது புரிகிறது.. வாழ்க்கை என்னும் பயணத்தை ஆரம்பித்து வைப்பதும் அதை நடத்தி முடித்து வைப்பதும் அம்மையாயிருக்கிறாள். சிறு குழந்தை அவள். அவள் கண்ணசைவிற்குப் பிரபஞ்சம் குட்டி நாய்க் குட்டியாகச் சுழன்று சுழன்று பின்னால் ஓடிவருகிறது.

இப்பொழுது மிகப் பெரிய ஒளிக்கடலுக்குள் வந்து சேர்கிறோம்.. ஒளிக்கடலின் நடுவிலிருந்து ஜோதியாகத் தோன்றிய தேவி தன் சுடர் வீசும் கரங்களால் கருணை கூர்ந்து எங்களை எடுத்து முத்தமிடுகிறாள். எங்கள் ஜென்ம சாபல்யம் தீர்கிறது. உடலும் மனமும் நெக்குருகி கரைந்து நெகிழ்ந்து உயிர் உருகி சர்க்கரைப் பாகாகப் பரவி... அப்பப்பா அந்தப் பரவசத்தை வார்த்தைகளால்தான் சுமக்க முடியுமா?

மடியில் தவழ்ந்த குழந்தை அனாயசமாக எங்களைக் கைகளில் ஏந்திக் கொள்கிறது.

'போதும் தாயே! எங்கள் அன்பு மகளே, இந்தக் கடலில் எங்களைத் தத்தளிக்க விடாதே. ஒளி சிந்தும் உன் அண்மையிலேயே எங்களை எப்போதும் வைத்துக்கொள். அண்ட சராசரங்கள் அசைந்தாட தொங்கிக்கொண்டிருக்கும் உன் பொன்குழல் முடிக்கற்றையில் சிறு துகள்களாக்கி எங்களை ஒட்டிக்கொண்டாயானால் கூட அதுவே போதும், பிறவிப் பெருங்கடலைக் கடந்துவிடுவோம்.'

யாதேவீ ஸர்வபூதேஷு ஸ்ரத்தாரூபேண

ஸம்ஸ்திதா

நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை

நமோ நம:

தேவி உன்னை வணங்குகிறோம். இந்தப் பிரபஞ்சம் பெண் வடிவமுடையது. பெண் தன்மை கொண்டது. ஜனனத்தின் தீராத கருப்பையாக இது இருக்கிறது. உன் புன்னகையே அதற்குச் சான்று.

அவள் புன்னகை முடிவற்றதாக நீண்டுகொண்டே போகிறது - பொங்கிப் பிரவகிக்கும் பொன்னொளியைத் தரிசிக்க இயலாமல் கண்களை அழுத்தமாக மூடிக்கொள்கிறேன். பொன்னொளிர் திரை ஒன்று இமைகளைப் போர்த்துகிறது. தேவியின் தோற்றம் மெல்ல சுடரோடு ஒன்றிக் காணாமல் போய்க்கொண்டேயிருக்கிறது.

இனி எத்தனை காலங்கள் காத்திருக்க வேண்டுமோ தேவியின் கனிவான இன்னொரு தரிசனத்திற்கு?

'பாப்பா பாப்பா எங்களை விட்டுப் போயிறாத.. தேவி யாழும்மா எங்க போயிட்ட நீ?' அரற்றிக் கொண்டேயிருக்கிறேன்.

'தாத்தா தாத்தா தூங்கிட்டியா?' சிறு வீணை அதிர்வது போலக் காதருகில் அந்த இனிய குரல் கேட்கின்றது.

'யாழும்மா யாழும்மா அப்பா பைலைக் கிழிச்சிராதடா கண்ணா..'

'அது என்ன பைல் தாத்தா?'

'யாழினி' 'யாழினி' 'எங்களை விட்டுட்டுப் போயிராத குட்டிம்மா'

தன் பிஞ்சு விரல்களால் என் கன்னத்தை வருடியபடியே, 'தாத்தா நான் குட்டி யாழினி. விழிச்சுப் பாரு. உன் பக்கத்துலயேதான் இருக்கிறேன்' என்றாள் குட்டி பாப்பா.

நான் கண்களைத் திறக்காமலே.. 'குட்டி யாழினி இல்ல யாதேவி' என்றேன்.

'அம்மா அம்மா எழுப்பி எழுப்பி பார்க்குறேன்.. தாத்தா ஏதோ உளர்றாருமா' என்றாள்.

■

# கற்பதுவே.. கேட்பதுவே..!

## ந. பெரியசாமி



**நவீனத் தமிழ்க் கவிதைகளை வாசிப்பதில், வாசித்துப் புரிந்துகொள்வதில் உள்ள சிக்கல்கள் எவை?**

ஆர்வத்தோடு நெருங்க வாசிப்பதில் சிக்கல் ஏதும் வருவதில்லை. புரிந்துகொள்வதில் உள்ள சிக்கல்கள் அறுதியிட்டுக் கூறமுடியாதவை. அதுவொரு மனநிலை. கவிதைகள் நம்மோடு கண்ணாமூச்சு ஆடும். எங்கே என்னுள் இருக்கும் ஒளியைக் கண்டடைந்திடு பார்ப்போம் என்பதாக. சிலபொழுது வேண்டுமென்றே அகப்பட்டுக்கொள்ளும். எத்தனைமுறை வாசித்தாலும் அகப்படாது போக்குக்காட்டும் கவிதைகளும் உண்டு. அப்படியான கவிதைகளே நம்மின் வாசிப்பு ஆர்வத்தைத் தக்கவைக்கச் செய்திடுகின்றன. நிலமும், வானமும் காட்டும் மேஜிக்கைக் கவிதைகளும் காட்டத்தான் செய்கின்றன. நம்முள் எழும் மனத்தடைகளே தரிசிக்க இயலாது செய்திடுகிறது.

**தமிழ்ப் பண்பாட்டு வெளியை எழுதும் போக்கு தற்காலக் கவிதைகளில் அதிகரித்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா?**

பண்பாட்டுக் கூறுகள் இல்லாத படைப்புகள் இல்லை என்றே நினைக்கின்றேன். கவிதைகள் எல்லாவிதமான சோதனை முயற்சிக்கும் இடம் கொடுத்தபடியே இருப்பதால் தன்னை என்றும் புதிதாகவே வைத்துக்கொள்கிறது. சமகாலத்தில் வேறு வேறான முயற்சிகள் செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அது மொழியின் வளத்தைக் கூட்டவே செய்கின்றது. கணிதக் குறியீடுகள், மொழியை விளையாட்டுப் பொருளாக்குதலென வந்துகொண்டிருக்கும் கவிதைகளை நுணுக்கிப்பார்த்தால் அதிலும் பண்பாட்டின் ஏதோவொரு கூறினைக் கண்டடைய முடியும் என்றே நம்புகிறேன்.

**ஒரு ஒளிப்படம்போல் காட்சியாக மட்டும் நின்றுவிடுகிற கவிதைகளை எப்படி வாசிப்பது?**

வேடிக்கை பார்க்கும் மனோபாவத்தில் வாசித்திடலாம். காலண்டர் கவிதைகள் என வகைப்படுத்தியும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் நம்மைத் தொந்தரவிற்கு உள்ளாக்கும் ஒளிப்படங்கள் உண்டுதான். தன் மகனுக்கு விடுதலை வேண்டும் எனும் கோரிக்கையோடு கையேந்தி நிற்கும் அற்புதம் அம்மாள் ஒளிப்படத்தை நம்மால் எளிதில் கடந்திட

முடியுமா? பிரபாகரனின் மகன் சாக்லெட் தின்றவாறு இறந்துபோன ஒளிப்படத்தை மறக்கத்தான் முடியுமா? மொத்த நிகழ்வும் நம்முள் சுழன்று அவர்களின் தொலைந்த வாழ்வியல் வலி நம்மை உறங்கத்தான் விட்டதா? சில கவிதைகளும் வாசிப்பவனுள் ஒளிப்படங்களாகச் சேகரமாகிச் சித்திரவதையை ஏற்படுத்துவதுண்டு.

• •

## சக்திஜோதி



***சமகாலக் கவிதை குறித்து உரையாடுவதன் மூலம் எதிர்காலக் கவிதையைத் தீர்மானிக்க கவிதை இயக்கங்கள் சிந்திப்பது எப்போதும் நடப்பதுதான். எதிர்காலக் கவிதை எப்படி இருக்க வேண்டும் என்ற இத்தகைய சிந்தனை ஏன் உருப்பெறுகிறது?***

கவிதையைக் குறித்த உரையாடல் என்பது சமூகத்தின் அக, புற இயக்கத்தின் அல்லது மௌனத்தின் மீதான நுண்மையான அவதானிப்புகள் மற்றும் அவற்றினைப் பற்றிய விவரிப்புகளும் விமர்சனங்களும் எனலாம். மேலும் கவிதை என்பது சொற்களின் வெற்று சேர்க்கை அல்ல. முற்றிலுமாக சொல்லிவிட இயலாத மனதின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஏக்கங்கள், துயரம், நேசம் போன்றவற்றின் அகவெளிப்பாடாகவும், புறச்சூழலில் சக மனிதர்களிடத்து பகிர்ந்துகொள்ள விரும்புகிற விஷயங்கள் மற்றும் வாழ்நிலையை ஒட்டிய சமூக, அரசியல் காரணிகள் என அந்தந்தக் காலகட்டத்தின் முகமாக கவிதைகள் வெளிப்படுகின்றன. கடந்த காலத்தின் அச்சில் சுழலும் நிகழ்காலம்தான் எதிர்காலத்திற்கான தடத்தினை வரைந்துகொண்டிருக்கிறது.

***முன்னோடி ஆளுமைகளைக் கவனத்தில் கொள்ளாதது /புறந்தள்ளி விடுவது /அவர்தம் படைப்புச் செயல்பாட்டுக்கு மதிப்பளிக்காதது போன்ற மனப்போக்கு – குறிப்பாக -கவிதை எழுதுபவர்களிடையே நிலவுவது ஏன்?***

கூட்டு நனவிலியில் பயணிக்கும் வாழ்க்கையில் தனித்து சுயம்புவாக ஒருவர் உருவாகிவிட்டதாகக் கூறிவிட முடியாது. நான் என்பது தனித்த சுயமோ அறிவு நிலையோ அல்ல என்பதே உளவியல் முன்வைக்கும் முடிவு. அதேபோல படைப்பாளர் எவருமே முன்னோடிகளை வாசித்து வளம் பெறாமல் தனித்துத் தானாக உருவாகிவிட முடியாது, அதேசமயம் முன்னோடியாக ஒரே ஒருவரை மட்டும் சுட்டவும் முடியாது. ரசனை, அனுபவம் ஆகியன காரணமாக வாசிப்பு முறை மாறுவதால் காலத்தை ஒட்டிப் படைப்பும் தன்னளவில் மாற்றம் கொள்ளத்தொடங்கும்.

ஆடல், பாடல், நாடகம் போன்ற கலைகளில் தங்களுடைய தனித்த அடையாளத்தை ஒருவர் உருவாக்கும் முன்பாக, குருவாக இருந்தவரின் பெயர் சொல்வது பெருமையான விஷயமாகக் கருதப்படுகிறது. ஆனால் படைப்புத்தளத்தில் பெரும்பாலும் தாங்கள் பின்பற்றி நடந்து வந்த ரசனைமுறை வாசிப்பு மறைக்கப்படுகிறது. உதாரணமாக, ஒருவர் பதின்பருவத்தில் புறத்தோற்றக் கவர்ச்சிக்கு ஆளாகி, வருணனை அதிகமுள்ள படைப்புகளை வாசித்திருக்கலாம் அல்லது அந்தப் பருவம் அறிதலுக்காகத் தேடலை நிகழ்த்தும் விருப்பமுடையது என்பதால் துப்பறியும், வரலாற்று சாகசக் கதைகளுக்குள்

பயணித்திருக்கலாம். ஆனால் தற்காலப் படைப்புச் சூழலில் கருத்தியல், கோட்பாட்டு அல்லது மேற்கத்திய படைப்புகளின் தாக்கத்தின் அடிப்படையில் மட்டுமே எழுதுவது படைப்பின் உயர்நிலை என்ற கருத்தினைப் பாவனையாக்கிக்கொண்டு தங்கள் பதின்பருவ வாசிப்பின் ரசனையையும் மறைத்துக்கொள்கிற பாங்கினையும் உணரமுடிகிறது. இதுபோன்ற தன்மையில் முன்னோடிப் படைப்பாளர்களைக் கவனிப்பது நிகழ்ந்தபோதிலும் புறக்கணிப்பும் நிகழ்கிறது. ஆனால் எந்தக் காலத்திலும் வாழ்க்கையைக் கோணலாக வைத்துக்கொண்டு, காலத்தில் நிலைத்திருக்கும் எழுத்தை எழுதிவிட இயலாது என்பதே உண்மை.

வாழ்க்கை மற்றும் படைப்பு இரண்டுமே எங்கிருந்து தொடங்கி எதை நோக்கிய பயணம் என்பதாக இருக்கிறது. எதை நோக்கிய பயணம் என்பதற்கு ஒருபாதி நம்முடைய பொறுப்பாக இருந்தாலும், எங்கிருந்து என்கிற தொடக்கம் முற்றிலுமாக நாம் தீர்மானிப்பதில்லை. படைப்புச் செயல்பாட்டில் நம் முன்னோடிகளை மறைப்பதென்பது நம் பெற்றோரை மறைப்பதுபோலத்தான். "தம்மின் தம்மக்கள் அறிவுடைமை" என்பது தொடங்கிய இடத்தைவிட பிள்ளைகள் பெரிதாகிப் புகழடைவது பெற்றோருக்கு மட்டுமல்ல பிள்ளைகளுக்கும் பெருமிதம் தருகிற விஷயம்தான். முன்னோடிப் படைப்பாளர்களை மதிப்பது அவர்களின் படைப்புக்கு மதிப்பளிப்பது என்பதுதான் படைப்புச்செயல்பாட்டின் வளர்ச்சிக்கு உதவும்.

**தற்காலக் கவிதையை அதன் உள்ளடக்கம் சார்ந்து இயக்கும் கூறுகள் எவை?**

அன்பு, காதல், கருணை, கொடை, தியாகம், நீதி, அறம் போன்றவை அடங்கிய இலட்சிய வாழ்க்கையைக் குறித்துப் பேசப்படும்போதே அதற்கு எதிர்நிலைகளும் இருக்கிறது என்பது உட்கிடை. இலக்கிய வரலாற்றில் மறைக்கப்பட்ட "பேசாப்பொருளைப் பேசுதல்" என்பதையே இன்றைய கவிதைச் செயல்பாடு முதன்மையாகத் தொட்டுப்பேச முயல்கிறது. வெளிப்படையாகப் பேசாத விஷயங்களான பாதுகாப்பின்மை, பதற்றம், துரோகம், வன்மம், வலி, கோபம், இயலாமை, சுயபச்சாதாபம், பெண்களின் உடற்கூறுகள், மனக்கூறுகள், குடும்பத்தில் பெண்களின் இருப்பு, சமூகத்தில் இருத்தலியல் குறித்த சிந்தனைகள் போன்ற மனித மனத்தின் எதிர்நிலை விஷயங்களின் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் வகையான படைப்புகள் எழுதப்படுகின்றன. இருத்தலியல் குறித்த கேள்விகளுக்கு விடைதேடும் வகையிலான வாழ்க்கையின் புதிர்முடிச்சுகளை அவிழ்ப்பது நவீனக் கவிதையின் இன்றைய தேவையாக அமைந்துள்ளது.

• •

## அ.வெண்ணிலா



**ஒரு வாசகர் உணர்வுரீதியாக கவிதைக்குள் தம்மை இணைத்துக்கொள்ள கவிதையின் எத்தகைய அம்சம் துணையாக அமைகிறது?**

உங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறது. உணர்வுரீதியாக மட்டுமே உடனடியாக வாசகர் கவிதைகளுடன் ஒன்றிப்போக முடியும்.

கவிதை என்றில்லை, எல்லாக் கலைப் படைப்புகளுக்கும் இதுவே அடிப்படை. ஒரு படைப்புக்குள் வாசகர் தீவிரமாகத் தன்னைப் பிணைத்துக்கொள்ளத் துவங்குவதே, தனக்கும் அப்படைப்புக்கும் இடையில் இருக்கும் ஒத்த உணர்வு, விடுபட்ட உணர்வு, தன் ஏக்கம், தன் வலி, தன் இயலாமை, தன்னால் சொல்ல முடியாமல், படைப்பாளியால் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்ட உணர்வு என்று ஏதோ ஒன்றுதான் முதலில் உள்ளிழுக்கும்.

உணர்வுகளால் படைப்புடன் ஐக்கியமான பிறகுதான், அப்படைப்பின் மொழி, கலைத்தன்மை, வடிவம் குறித்தெல்லாம் ஆய்வதற்குச் சிந்தனை ஓடும். மொழியின் செழுமையற்ற படைப்புகளும் நம் நினைவுகளில் தேங்கி நிற்கும். காரணம் அவை நம் உணர்வுகளோடு ஒன்றி நிற்பதுதான். கலை, இலக்கியப் படைப்புகளின் வெற்றியே, வாசகர்களின் உணர்வுகளோடு எவ்வளவு தூரம் ஒத்துப்போகிறது என்பதில்தானே இருக்கிறது!

**வாழ்ந்தறியாத / கேட்டறியாத, தனக்கு ஒரு வகையிலும் தொடர்பில்லாத வாழ்வைப் பேசும் கவிதைகள் தம் மொழி மீதும் மரபு மீதும் கொள்ளும் தாக்கம் என்னவாக இருக்கும்?**

முந்தைய கேள்வியின் நீட்சியே இக்கேள்வியும். வாழ்ந்தறியாத, கேட்டறியாத கவிதைகள் வாசகர்களைத் தம்முடன் பிணைத்துக்கொள்ளுமா என்பது சந்தேகம்தான். ரஷ்ய இலக்கியமும் ஐரோப்பிய இலக்கியமும் நம் வாசிப்பிற்கு இணக்கமாக இருப்பதற்குக் காரணம், தத்துவங்கள், கொள்கைகள், சித்தாந்தங்கள், கோட்பாடுகள் வழியாக நாம் நம்மைப் பிணைத்துக்கொள்வதுதான். வாழ்ந்தறியாத / கேட்டறியாத உணர்வுகளைக்கூட சுவாரசியத்தின் நோக்கில் வாசக மனம் ஏற்கும். தேடிச் செல்லும். தொடர்பில்லாத படைப்புகள் ஏற்கப்படுவதில்லை.

நவீன கவிதைகளின் அதி தீவிரத்திற்குப் பின்புலமாக இருப்பது மரபைக் கட்டுடைத்தல். பேசாப் பொருளைப் பேசுதல். இவ்வுணர்வு நிலை நம் தமிழ் மரபில் இல்லை. மீறலில் கூட ஒரு மென்மை இருக்கும். நவீன இலக்கிய மீறல்களில் உண்மை ரத்த வாடையுடனும் கவுச்சி நெடியுடனும் இருக்கின்றன.

மரபு நவீனத்தின் முந்தைய பக்கம்தானே. நவீனமும் மரபாகும் விந்தையைக் காலம் நிகழ்த்தும்.

**கவிதையில் போலச் செய்தல் வகைமைகளை எப்படிக் கண்டறிவது? அதற்கென்று இருக்கும் பலவீனங்கள் எவை?**

முன்பெல்லாம் போலச் செய்தல் படைப்புகள், தோன்றும்போதே தன் பலவீனத்துடன் தோன்றுகின்றன, காலத்தில் நிற்காது என்றொரு நம்பிக்கை / யூகம் இருந்தது. இன்று அசல் படைப்பு, போலச் செய்தல், கலைப் படைப்பு என்றெல்லாம் பெரிய எல்லைக் கோடுகள் இல்லை. எல்லாப் படைப்பும் வியக்கப்படுகின்றன. கொண்டாடப்படுகின்றன. மகுடம் சூட்டப்படுகின்றன. அவரவருக்கான துதிபாடல் குழுக்கள் இருக்கின்றன. தப்பும் தவறுமாய், பிழைகள் மலிந்த, புதுமைகளற்ற, அழகியலோ கலைத்தன்மையோ கொஞ்சமும் இல்லாத படைப்புகளை வியந்து வியந்து எழுதப்படுவதை ஆச்சர்யத்துடனும் கவலையுடனும் கவனிக்கிறேன்.


உழைப்புகளற்ற மேலோட்டமான படைப்புகள் வருகின்றன. அதற்கு பத்துப் பேர் இருக்கிறார்கள். 'போற்றிப் பாடடி' பாட. வெளியீட்டுச் சுதந்திரம் படைப்புகளின் நேர்த்திப் பற்றி கவலைப்படுவதில்லை. இணையம் படைப்பின் கறார்த்தன்மையோடு படைப்புகளை அணுகுவதில்லை. முன்பெல்லாம் படைப்பின் கலைத்தன்மை மட்டுமே விமர்சனத்திற்கான அடிப்படை. இன்று முகதாட்சண்யம்தான் அடிப்படை.

எங்கோ ஒரு வாசகர் இன்னும் அசல் படைப்புகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். உண்மையான கலை மனத்துடன் எங்கோ ஒரு படைப்பு எழுதப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. காலம் நிரூபிக்கும் என்பதை நான் நம்பவில்லை. காலத்தின் பக்கங்களில் உரத்த குரல் உள்ளவர்களின் பெரிய பெரிய பிம்பங்கள் ஆளுமைகளாகக் கட்டமைக்கப்படுகின்றன. அதுவே வரலாறாகவும் மாறலாம். எதுவும் நடக்கும். ■

தொடர் - 24

● கரிகாலன்

# தேநீர் சாலை




**நல்லதொரு சலூன்..**

~

உங்களைச் சுற்றி நடப்பவைகள் எதையும் உங்களால் மாற்ற முடியவில்லை. நீங்கள் என்ன செய்வீர்களோ? எனக்குத் தெரியாது.

இப்படி ஒரு கையாலாகாத நிலையில், கரிகாலன் என்ன செய்வான்?

சலூனுக்குச் சென்று முடியைத் திருத்தி முகத் தோற்றத்தை மாற்றிக்கொள்வான்!

முடி வெட்ட ஜோஸ்யம் பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் முடி என்பது வெறும் முடியல்ல. மணிமுடி. அதுதான் மனிதர்கள் சூடும் கிரீடம்.

'ஸ்வௌபாச' என்ற சமஸ்கிருதச் சொல் ரிக், அதர்வண வேதங்களில் இருக்கிறது. (இதையெல்லாம் நீ படித்திருக்கிறாயா? என்று கேட்கக்கூடாது. சந்தேகப்பட்டு உடனே

ரிக், அதர்வண வேதங்களைப் புரட்டியா பார்க்கப்போகிறார்கள்! எனும் அசட்டு தைரியத்தில் எழுதுவதுதான்.)

இந்திரன் தலையில் சூடியிருந்த டோப்பா முடியின் பெயர்தான் 'ஸ்வௌபாச'. 'டேய் உங்க இந்திரன்தான் சூடுவாரா? நாங்களும் சூடுவோம்டா!' எனத் தளபதி சூடியிருக்கும் டோப்பா முடியும் 'ஸ்வௌபாச'தான்! திராவிடப் பிள்ளைகள் தோள் தட்டலாம்.

சரி, க.கா முடி வெட்டிக்கொண்ட கதைக்கு வருவோம். ஆலடி ரோட்டில் இருக்கிறது வழக்கமாக அவன் முடிவெட்டிக் கொள்ளும் சலூன்.

சிகையலங்காரக் கலைஞர் தம்பி ரஞ்சித் பி.லிட் தமிழ் படித்தவன். ஏடாகூடமாகத் தமிழ் பேசித் திகைக்க வைப்பான்.

சுழல் நாற்காலியில் உட்கார வைத்தவன், பலியாட்டின் மீது தெளிப்பதுபோல், தண்ணீரை ஸ்ப்ரே செய்தான்.

தலைமுடியைப் பற்றி, 'குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்' என ரசித்தான்.

'என்னடா தம்பி ஆபாசமாப் பேசுற!' என்றதும் சிரித்தான். 'கவிஞருக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நாலடியார் சொன்னேன் சார்!'

'எனக்குத் தெரிஞ்சதெல்லாம் மழித்தலும் நீட்டலும்தான். நாலடியாரும் சலூன் கவிதை எழுதியிருக்காரா? முழுசாச் சொல்!' என்றேன்.

'குஞ்சி அழகும் கொடுந்தானைக்
கோட்டழகும்

மஞ்சள்அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி யழகே யழகு!'

சொன்னான்.

'முடி (குஞ்சி), உடை, காஸ்மெடிக் (மஞ்சள்) இதுல்லாம் அழகல்ல. கல்விதான் அழகுங்றார் நாலடியார்!'

சிரித்தான் ரஞ்சித்.

'நாலடியார் உன் பிழைப்புக்கு வேட்டு வைக்கிறாரே!' என்றதும், 'அது சமண நூல். நீங்க என்ன சாமியாரா சார்?' மீண்டும் சிரித்தான்.

'ஆனாலும் உனக்கு குறும்பு ஜாஸ்திதான்!'

'என்ன ஸ்டைல் சார்?'

அண்டர் கட்,

லோ ஃபேட்,

மிட் ஃபேட்,

ஃப்ரஞ்ச் க்ராப்,

ப்ரோ ஃப்ளோ,

பாம்ப்டௌர்,

சிலிக்ட் பேக்

அடுக்கிக்கொண்டே போனான்.

'நிறுத்துடா தம்பி. வழக்கம்போல வெட்டு.'

'சார், முதல் பத்தியில எழுதினத மறந்துட்டீங்களா? எதையுமே மாத்த முடியலன்னா ஹேர் ஸ்டைலையாவது மாத்தணும்னு!'

'டேய் நீ டைம் மெஷின் வச்சிருக்கியா? நாளைக்கு எழுதப் போறத சொல்ற!'

'இது போஸ்ட் மாடர்ன் சலூன் சார்!'

மீண்டும் நக்கல்.

'பை தி பை.. தமிழ்ல ஆண்கள் தலை முடிக்கு, உளை, தளை, குழல், பங்கி, தொங்கல், நவிர், கார், குடுமி, குஞ்சி, சிகை, பித்தை, ஓரின்னு நிறைய சொற்கள் இருக்கு. இவை ஒவ்வொண்ணுமே ஒரு ஹேர் ஸ்டைல்தான் சார்!' வியக்க வைத்தான்.

தமிழர்களுடைய 'தொங்கல்'தான் ப்ரோ ஃப்ளோவா மாறுச்சு. முடித்துக் கட்டாமல் தலைமுடியைத் தொங்க விடுற ஸ்டைல் இது. இந்த குழல் இருக்கே இதைத்தான் மாடர்னா *Man Braids* (ஜடை பின்னி போட்டுக்கொள்வது) என்கிறோம். 'பங்கி' தான் ஸ்டைலா *Caesar*

*Cut (குறுகத் தறித்தல்) மாறிட்டுது. தமிழன்னா சும்மாவா சார்? சும்மா கெத்தா வாழ்ந்தவன்!'*

போர்த்தியிருந்த பிளாங்கெட்டை உதறினான் ரஞ்சித்.

ஆலடி தெருவில் நுழைந்த க.கா, கீழடியில் இருந்து வெளியேறினான்!

• •

## வள்ளுவரும் ராஜாவும்!

~

நேற்று ஏழாம் வகுப்பு மாணவர்களுக்குப் புறங்கூறாமையில், 'கண்ணின்று கண்ணறச் சொல்லினும்' குறளை நடத்தி வாட்சப்பில் பதிவிட்டேன்.

இந்தக் குறளில் தாளலயமும் இசை ஒழுங்கும் இருப்பதைக் கவனித்தேன்.

வள்ளுவரோ, கம்பரோ தமிழ்ப் புலவர்களுக்கு இசையிலும் புலமை இருந்திருக்கிறது.

19ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் மாயூரம் விசுவநாத சாஸ்திரி. இவர் 1330 குறட்பாக்களையும் 289 கீர்த்தனைகளாக உருவாக்கினார்.

நேற்று நடத்திய புறங்கூறாமை அதிகாரத்தை, விசுவநாத சாஸ்திரி அமிர்தவர்ஷினி ராகத்தில் உருவாக்கியிருக்கிறார்.

பிறர் குறித்துப் புறங்கூறாத மனங்களில் மழை பொழியச் செய்யும் ராகம் அமிர்தவர்ஷினி!

இதில் வியப்பு என்னவென்றால், லதா மஞ்சரி, நாகரி, கமலமோகனம், ஆதிபைரவி, வஜ்ரகாந்தி போன்ற ராகங்களுக்குப் பாடல்களில்லை. ஆனால், இந்த ராகங்களைப் பயன்படுத்திக் குறள் கீர்த்தனைகளை உருவாக்கியுள்ளார் மாயூரம் விசுவநாத சாஸ்திரி!

என்ன ஆச்சரியம்? அந்தக் குறட்பாக்களை நடத்தி முடித்த நேரம். இளையராஜாவின் காணொலியொன்று கண்ணில்பட்டது.

சமீபத்தில் வெளியான படம் சந்தானத்தின் டிக்கிலோனா. இதில் 'பேரு வச்சாலும் வைக்காமப் போனாலும்' இளையராஜாவின் பாடலை (மைக்கேல் மதன காமராஜன்) யுவன்சங்கர்ராஜா ரீமிக்ஸ் செய்திருக்கிறார்.

இந்தப் பாடல் நவீன தலைமுறையையும் உலுக்கி எடுக்கிறது. வரிசையாகப் பலர் இப்பாடலுக்கு ஆடி வைரல் செய்கிறார்கள்.

இந்தப் பாடலின் மெட்டை வாலிக்கு சொன்னபோது, 'என்னையா மெட்டு இது?' வாலி அலட்சியமாகக் கேட்டிருக்கிறார்.

'வள்ளுவர் போட்டது. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி மெட்டுங்கண்ணா!' என்றிருக்கிறார் அங்கிருந்த ராஜா.

கமல், வாலி, சிங்கீதம் சீனிவாசராவ் போன்றோர் அசந்துபோயிருக்கிறார்கள்.

வள்ளுவரின் இசையறிவை அவரது குறள்களிலிருந்தே நாம் அறியலாம்.

'பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்' என்கிறார்.

இரக்க உணர்வு, அன்பு எனும் கண்ணோட்டத்துடன் பொருந்தி வராத கண்ணும், பாடலுடன் பொருந்தி வராத இசையும் பயன் தராதவை!

இன்னொரு இடத்தில் 'குழல்இனிது யாழ்இனிது' என்கிறார்.

'அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட' எனும் குறளில், தாம் கேட்டறிந்த மறைப்பொருளைப் பிறர்க்கு வலிய கொண்டுபோய்ச் சொல்லும் கயவரை அறையப்படும் 'பறை'க்கு உருவகப்படுத்துகிறார்.

இன்னொரு குறள். துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களை, 'அறைபறை கண்ணார்' என்கிறார்.

தலைவி தன் மென்மை அறியாமல் அனிச்ச மலர்களைக் காம்பு களையாமல் சூடினாள். அவற்றால் நொந்து வருந்தும் அவளுடைய

இடைக்குப் பறைகள் நல்லனவாய் ஒலியா (நல்ல படாஅ பறை) எனக் காதலையும் இசையையும் இணைக்கிறார்.

இசை பட வாழ்தல் என்பார் வள்ளுவர். இசைக்குப் புகழென்பதும் பொருள்.

வள்ளுவர், இளையராஜா இருவரும் இசைபட வாழ்ந்தவர்கள். தமிழரின் சுவாசக் காற்று இவர்கள் இசையும் சேர்ந்ததுதான்.

இவர்களுக்கு முதுமை, நோய், மரணம் கிடையாது!

• •

## ஜீன்ஸ் பெரியார்!

~

ஒவ்வொரு விநாயகர் சதூர்த்திக்கும் கவனிப்பேன். வெரைட்டியாக விநாயகரைத் தயாரிப்பார்கள். உழைக்கும் மக்களில் இருந்து, ஐடி இளைஞர்கள் வரை அனைவரையும் கவரும் வகையில் விநாயகர் இருப்பார்.

கம்ப்யூட்டர் விநாயகர், ஜல்லிக்கட்டு விநாயகர், முருகனை சைக்கிளில் டபுள்ஸ் அடிக்கும் விநாயகர், டிராக்டர் ஓட்டும் விநாயகர், அறுவடைக்குச் செல்லும் விநாயகர், புல்லுக்கட்டு சுமந்து வரும் விநாயகர்.. இப்படி உழவர்களோடு, வாலிபப் பசங்களோடு சேர்த்து, அடையாளப்படும் வகையில் விநாயகர் உருவங்களைத் தயாரிப்பார்கள்.

இந்துத்துவாவும் ஆர்.எஸ்.எஸும் இப்படி டிரெண்டிங் செய்தால், பெரியார் பிள்ளைகள் சும்மா இருப்பார்களா?

கையில் கிதார் வைத்திருக்கும் ராப் பெரியார், லுங்கி டான்ஸ் ஆடும் பாப் பெரியார், ஜீன்ஸ் போட்ட யூத் பெரியார் என இளம் ஓவியர்கள் தங்கள், சமகால ரசனைக்கு ஏற்ப பெரியாரை வரைந்து தள்ளியிருக்கிறார்கள்.

இன்று ஜீன்ஸ் உடையில் பெரியாரைப் பார்த்தேன். அந்தப் படம் பெரியாரின் நவீன மனதைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

இன்று பெரியார் இருந்திருந்தால் நிச்சயம் ஜீன்ஸ் அணிந்திருப்பார்.

ஜீன்ஸுக்கு 150 ஆண்டு கால வரலாறு இருக்கிறது. அது சுரங்கத் தொழிலாளர்களுக்காகவும், கௌபாய்களுக்காகவும் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டது. ஒருகட்டத்தில் ஜீன்ஸ் கலக உடையாக மாறியது. குறிப்பாக குளிக்காத அழுக்கு உடையாக ஹிப்பி நாகரிகத்தில் திகழ்ந்தது.

பெரியாருக்குக் குளிப்பது குறித்து மாற்றுச் சிந்தனை இருந்தது. தாழ்த்தப்பட்டோரைக் குளத்தில் குளிக்க அனுமதிக்காமல் அவர்களுக்குச் சுத்தத்தைப் போதிப்பவர்களைச் சாடியவர் பெரியார். தான் ஆதிக்க சாதி என்பதால் குளிக்காமலேயே தன்னைக் கோவிலுக்குள் அனுமதிக்கிறது இந்து மதம்! என்றவர்.

முதலமைச்சரையோ எத்தகைய உயர் பொறுப்புகளில் உள்ளோரையோ சந்திக்கச் சென்றபோதெல்லாம் லுங்கி அணிந்து சென்றவர் பெரியார். உடை வசதிக்காக என்று சொன்னவர்.

1969இல் சார்லோடே ரெய்டு என்ற அமெரிக்க பெண்மணிதான் முதன்முதலாக ஆண்கள்போல் கால்சராய் அணிந்தார்.

சமீபத்தில் உத்திரப்பிரதேசத்தில் ஜீன்ஸ் அணிந்ததற்காக 17 வயது சிறுமி அவரது உறவினர்களால் கொல்லப்பட்டது தோழர்களுக்கு நினைவிருக்கலாம்.


ஆனால் 1920லேயே பெரியார், ‘பெண்களே! உங்களுக்கு வசதியாக இருந்தால் ஆண்களைப்போல் உடுத்துங்கள்!’ என்றார்.

எனக்கு உடையணிவதிலிருந்த மனத்தடைகளைப் போக்கியவர் பெரியார். இன்று நானும் பெரியாரும் ஜீன்ஸ், டீ ஷர்ட் அணிந்து யுனிகார்னில் நகர்வலம் வந்தோம். சந்தோஷ்குமார் தியேட்டர் பக்கத்தில் ரோட்டோர பீஃப் ஃப்ரை கடை. ரெண்டு ப்ளேட் ஆர்டர் சொல்லி, செல்ஃபி எடுத்தோம். கூட்டம் சேர்ந்துவிட்டது! ■

**நூல் விமர்சனம்**

கு.இலக்கியன்

# உயிர் சுடரும் மாடம்




**நூல் : அஞ்சறை விரல்கள்**

**"அம்மாவின் பூமியில் தளும்பத் தளும்ப எத்தனை நதிகள் ஓடினாலும் பிள்ளைகளின் தாகம் அடங்குவதே இல்லை"**

*-பழநிபாரதி.*

பிள்ளைகளுக்குக் கொஞ்சிக் கொடுக்கிற அம்மாவின் முத்த ஈரத்தில் சில்லிடுவது அவரின் பேரன்பு. உயிருக்குத் தேவையான வெப்பத்தை ஒரு மின் கடத்தியைப் போலத் தன் மார்போடு அணைத்துக் கடத்திவிடுவார் தாய். தாய் என்பவர் நம் பண்பாட்டின் எல்லாக் கற்பிதங்களையும், வரையறைகளையும் உடைத்தெறிந்துவிட்டு நெகிழ்ந்துவிடுகிற பண்பை வனப்போடு கொண்டியங்குபவராக இருக்கிறார். அவரின் அக புற வாழ்வியலைத் தன்னியல்பாகவே கட்டமைத்துக்கொண்டு, அந்தக் கட்டமைவுகளுக்குள் தானும் கட்டுண்டு கொள்பவராகவும் இருக்கிறார். அவரின் இருப்பு இந்நிலத்தில் அடையாளமாக்கப்பட்டுத் தேவையாக்கப்பட்டிருக்கிறது.

நிலம் சமைப்பவளாக, நலம் சமைப்பவளாக, வளம் சமைப்பவளாக அவளேதான் முன்னிருத்தப்படுகிறார். உறவின் தொடக்கமாகவும், தொடர்ச்சியாகவும் அவரே ஆதர்சனமாக அறியப்படுகிறார். இந்தப் பூமியில் வாழ்கிற உயிர் ஜீவிகளாகப் பிள்ளைகளைப் பிரசவிப்பவள் தாய்தான் என்பது மனித குலத்திற்கு மட்டுமில்லை.. அது எல்லா உயிரினங்களுக்குமான மகத்துவம். அந்த மகத்துவத்தின் முதல் பிரதிநிதியாகத் தாய் என்பரே முன் நிற்கிறார். அவரின் பங்கேற்பு இந்த நிலத்திலும் வாழ்விலும் நிராகரிக்க முடியாத இருப்பை வலியுறுத்துகிறது. இத்தகைய பேரண்டம் சமைப்பவராக, பிரபஞ்சம் கிளைப்பவராக அவதானித்திருக்கிற தன் தாயின் பின்னொற்றிய வாழ்வைத்தான் கவிஞர். செருகுடி செந்தில் இந்நூலில் எழுதிப் பார்த்திருக்கிறார்.

இவர் எழுதியிருக்கிற வாழ்வு என்பது ஒன்றுதான். இந்த வாழ்வில் கண்டடைகிற அனுபவம் என்பது வெவ்வேறாக இருக்கின்றது. எல்லாத் தாயும் ஒன்றுதான். ஆனால் பிள்ளைகள் வேறு வேறுதானே. அப்படித்தான் இவர் வேறு வேறு கோணங்களில், வேறு வேறு தருணங்களில் நிலைத்த உணர்வுகளையும், அது சார்ந்த வாழ்வையும் படைப்பாக்கித் தந்திருக்கிறார். இதுவும் பொதுமையானதுதான். இருப்பினும் வாசகர்களை உணர்ச்சி பெறச் செய்வது. உணர்வுகளைப் பிரதிபலிப்பது. சில நேரங்களில், பல கணங்களில் வலிக்கவும் செய்வது. அப்படியான கணங்களைப் பதிவு செய்திருப்பதே இப்படைப்பின் பலமெனக் கருதுகிறேன்.

"அவள்தான்
வீடெனும் பிரியம் சமைத்தாள்
அவளேதான்
வாழ்வெனும் வாழ்வையும் படைத்தாள்."

“வீடென்பது மனிதக் குரல்கள் எழும் கட்டிடங்கள் மட்டுமல்ல

அது பல்லுயிரினங்களின் கூடு.”

போன்ற வரிகளும் ‘உயிர் சுடரும் மாடம்’ என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதையும் நினைவின் பொருட்டு நம் ஆழ் மனதிற்குள் ஏக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

“எப்போதும் போலவே இப்போதும்

எல்லா வெள்ளிக் கிழமைகளிலும்

மாட விளக்கில் தீபமேற்றி விடுகிறாள் அம்மா

தன் பேத்தியின் கைகள் கொண்டு.”

உலகம் முழுவதும் ஏன் இவ்வளவு இலக்கியங்கள் எழுதப்பட்டுக்கொண்டே இருக்கின்றன, ஏன் வாசிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன என்றால், அவற்றுள் ஓர் அறம் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ எழுதப்பட்டு, அது நினைவூட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அந்த அறம் என்பதும் நினைவூட்டல் என்பதும் நமக்குத் தேவைப்படுவதாக இருக்கின்றது. அவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் தேவையான ஒன்றாக இங்கே அன்பு கொள்ளுதல் இருக்கிறது. அதைத் தன் கவிதையொன்றில் முன்னிருத்துகிறார் இவர்.

“ஒரு தீப்பெட்டியைப் போல

வீடு செய்தவள் அதில்

ஒரு மாளிகையைப் போல்

அன்பு செய்தாள்.”

இந்த வரிகளின் உள்ளார்ந்த அர்த்தத்தை விளங்கிக்கொள்ளும்போது நம் உணர்வுகளை மேலிடச் செய்துவிடுகிறார்.

துயரங்கள் வலி தரக்கூடியதுதான். ஆனால் சில நேரங்களில் எவற்றாலும் தரமுடியாத அனுபவமாகவும் மாறிவிடுவதுண்டு. அது அவரவர்களின் முதிர்ச்சியைப் பொருத்தே அமையும். இன்னலுறும் துயர்கள் எத்தனை வந்தபோதிலும் அவற்றை வெகு சாதாரணமாகக் கையாள்பவராகத் தாய்தான் இருக்கிறார் எனச் சித்தரிக்கிறார் கவிஞர்.

“துயரங்கள் பூக்கும்

கண்ணீர் செடிகளை

எப்போதும் வளர்த்தவள் அம்மா...” எனத் தொடங்கி

“உப்புப் பூக்களை

ஒரு கிரீடம் போல சூடிக்கொண்டாள்...”

என்று நிறைவுறுகிற கவிதையை வாசித்து முடிக்கையில் நாமும்கூட சில உப்புப் பூக்களை உதிர்க்க நேரலாம்.

இந்நூலின் மற்றொரு சிறப்பு எல்லாவற்றையும் அதன் அழகியல் மாறாமல் சித்தரித்திருப்பது. இடம்பெற்றுள்ள பல கவிதைகளில் சில அழகியல் பார்வைகள் பொதிந்த கவிதைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். செழித்துப் பூக்கும் மார்கழி, பெருங்கருணை, பருத்துப் பூக்கிறது நிலம், உயிர் சமைத்தவள், உயிர் நேர் சாங்கியம், உயிர் சுடரும் பேரொளி போன்ற தலைப்பிலான கவிதைகள் அதற்குச் சான்றானவை.

இத்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளைத் தனித்தும் தொகுத்தும் சொல்வதானால் மிக நுட்பமான உணர்வு நிலைக் கவிதைகளை உணர்ச்சிப் பாட்டோடு படைத்திருக்கிறார் எனலாம். அன்பின் வழிதலை, பெருக்கை இதனூடான வாழ் வெளியை எளிய மொழியில், அழகிய வடிவில் எழுதிப் பதிந்திருக்கிறார்.

தாயைப் பற்றிப் பேசும் எல்லாமும் அழகானவைகள்தான்.. கவித்துவ மொழியால் கவிதையில் பேசும்போது மேலும் அழகாகவும் அர்த்தம் பொதிந்தும் இருக்கின்றன. காலத்தைத் தேக்கி நிறுத்திவிட முடியுமா என்றால் அது எழுத்தின் வழி சாத்தியப்படுத்த முடியும் எனலாம். அவ்வாறு தன் தாயின் வாழ்வுக் காலத்தை, வாழ்வை அதன் ஊடான அனுபவங்களைத் தன் கவிதைகளால் தேக்கி நிறுத்தியிருக்கிறார் இவர்.

இக்கவிதைகளை வாழ்வின் எதார்த்தத்தோடு உள்ளார்ந்து உணரும் தருணத்தில் இதன் பொருளை வியந்து பாராட்டலாம். அதே சமயத்தில் இன்றைய சமகாலக் கவிதைகளையும் மற்றும் இலக்கியப் போக்கையும் உணர்ந்து பயணிப்பாராயின் தனித்த அடையாளத்தைப் பெறலாம் என்பது மறுப்பதற்கில்லை.

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

அதிர்ந்து ஒரு
வார்த்தை பேசாத
அண்ணன்
தன்னைக்
கடிந்துகொண்ட
கவலையில்
இடிந்துபோயிருந்தான் -
இலக்குவன்...

இரண்டிரண்டு
படிகளாய்
மாடிப்படிகளைத்
தாவியேறியவன்
அண்ணனின்
கோபங்கண்டு -
மிரண்டிருந்தான்..


உள்ளுக்குள்
ரெளத்திரத்தின் -
அனலடித்தது
காட்டாற்று வெள்ளம்
புகுந்த கடலாய்
கட்டுப்படுத்தவே
முடியாதபடி உள்ளத்தில் -
அலையடித்தது....

கடைசி அறையைக்
கடக்க எத்தனித்தவன்
ஒருக்களித்து திறந்திருந்த
கதவின்
உள்ளே -
புகுந்தான்
சகோதரிகளுக்குள்

நடந்தேறிய
சம்பாஷணை கேட்டு
சட்டென்று -
நின்றான்
சகலமும் -
அதிர்ந்தான்....

“தந்தையின்
ஆணைக்காக
தசரத ராமன்
தண்டகாரண்யம் -
புகுந்தார்
தமையனுக்கு
துணையாய்
தம்பியும் -
உடன் புகுந்தார்
இராமனிருக்கும்
இடமே
அயோத்தியென்று
தமக்கையே
நீயும் -
உள்புகுந்தாய்...
நானும்
உடன் புகுந்திருந்தால்
நன்றாகவா -
இருந்திருக்கும்.?

எடுத்த காரியத்தை
இராமனையும்
இலக்குவனையும்
முடிக்க விடாமல்
அதைக்
கெடுத்தவள் என்ற



கேவலம்தான் –
வந்திருக்கும்...

ஏற்ற சபதத்தை
முடிப்பதற்கு
இலக்குவனே ஏற்றவன்
என்று
இராமபிரான்
எண்ணினாலும்
அதற்கு
இடையூறாகவே நான் –
இருந்திருப்பேன்
இரவும் பகலும்
இலக்குவனுக்கு
என்னையே –
தந்திருப்பேன்
காதலுக்குத்தான்
ஆளிருந்திருக்கும்
கானக வாழ்வில்
உங்களின்
காவலுக்கு –
ஆளிருந்திருக்காது....
அண்ணனுக்காக
கண்ணுறங்காமல்
காவலிருக்க
வேண்டியவன்
காதலில் விழுந்து
ஒரு
பெண்ணுக்காக
காவலுக்கு நின்றான்
என்ற
பெரும்பழி –
வந்திருக்கும்....
தத்தமது தாரங்களோடு
தண்டகாரண்யம்
புகுந்திருந்தால்
இப்படியா
இந்தப் பூமி –
புகழ்ந்திருக்கும்.?
தந்தையின் ஆணையை
மதிக்காமல்
தாம்பத்திய சுகத்தால்
தடம்புரண்டார்கள்
தனயர்கள் என்று
தரணியே –
இகழ்ந்திருக்கும்..

கானகத்தில் இலக்குவன்
கண்ணுறங்காமலிருக்க
காலகாலமாக நான்
காராக்கிரகத்தில் –
உறங்கினேன்
காதலையும் காமத்தையும்
பொசுக்கும்
வேள்வித்தீயில் –
இறங்கினேன்
கைக்கொண்ட சபதம்
கைகூடும் வரை
என்னால் ஒரு
களங்கம் வரக்
கூடாதென்றுதான்
இலக்குவனை
வெறுப்பது போல்
நடித்து
வீண்பழிக்குள் –
முடங்கினேன்...

நான் செய்தவற்றை
தியாகம் எனத்
தெரியாமல்
இலக்குவன் –
வெறுக்கிறான்
மனதில் இடங்கொடுக்க
மறுக்கிறான்
உறுத்தும் பார்வை
என்னும்
உடைவாள் கொண்டு
உள்ளத்தை –
அறுக்கிறான்

இனி நான்
யாருக்காக –
வாழவேண்டும்
இயல்பாக
அரும்பவேண்டிய
அன்பினை
இரந்து யாசித்தா –
வாங்கவேண்டும்.?”
என...
கதறி அழுத
ஊர்மிளையின்
கடைசி வாக்கியத்தைக்
கேட்க பொறுக்காமல்

கதவைத் தள்ளி
உட்புகுந்தான்– இலக்குவன்

கடுந்தவம் புரியும்
கானகத்து
முனிவர்களை விடவும்
நெடுந்தவம் கிடந்த
ஊர்மிளையை கண்டு
அவனுக்கு நெஞ்சம் –
கனத்தது
கரம்பிடித்தவளைக்
காணக்காண
கண்களிரண்டும் –
பனித்தது
இளமையைத் தொலைத்து
தனக்காக
இளநரையோடு
காத்திருந்த
அவளை எண்ணியெண்ணி
இதயம் –
இனித்தது...

ஊர்மிளையின்
உறுதி கண்டு
அவனது உள்ளமும்
உடலும் ஒருசேர –
ஒடுங்கியது
அவள் குறித்து
ஆத்திரத்தில்
ஆர்ப்பரித்துக்கிடந்த
அடிமனதின் சலனங்கள்
எல்லாம்
ஆளரவமற்ற வனமாய் –
அடங்கியது
கண்கள் இடுங்க
கால்கள் நடுங்க
ஊர்மிளையை நோக்கி
கைகூப்பி –
தொழுதான்
அவளைக் கட்டியணைத்துக்
கண்ணீர் விட்டு –
அழுதான்.....

– ஊர்மிளை வருவாள் ■

மனநிலைக் குறிப்புகள் அடுத்த இதழில் வெளிவரும்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

## புது சரித்திரம்

**விரைவில்..**